28 / 26

பக்கங்கள் 26

# உதயன்

■ பதிப்பு: யாழ் ■ விலை: ரூபா 25 | ■ சுடர் 28 ■ கதிர் 133 | ■ வள்ளுவர் ஆண்டு 2044 ■ பங்குனி 26, திங்கள் 08.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com


## குழியில் விஷவாயு; இருவர் சாவு

கொழும்பு, ஏப்.8

இரத்மலானை, அத்திடிய பகுதியில் ஹோட்டல் ஒன்றில் துப்புரவுப் பணிகளுக்காக குழி ஒன்றில் இறங்கிய இருவர்

பார்க்க பக்கம் 04


10 ஆயிரம் பட்டதாரிப் பயிலுநருக்கு அடுத்த வாரத்தில் நிரந்தர நியமனம் 5

வைகோ விடாப்பிடி; இனப்படுகொலை தொடர்பாக பன்னாட்டு விசாரணை தேவை 6

கொரியப் பிரச்சினையில் சீனத் தலையீடு அவசியம் 7

இந்தியப் படையால் தமிழருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து அரசு கணக்கெடுப்பு 9


# மக்களைக் காக்க தவறிய இலங்கை

## குற்றஞ்சாட்டுகிறது ஐ.நா. பணிக்குழு

## காணாமல் போனோர் விசாரணைகளை துரிதப்படுத்தவும் கோரிக்கை

கொழும்பு, ஏப். 8

''பொதுமக்களை வலுக்கட்டாயமாக காணாமல் போகச் செய்வதிலிருந்தும், அவர்களைக் காப்பாற்றும் கடப்பாட்டிலிருந்தும் இறுதிப்போரின் போது இலங்கை தவறிவிட்டது'' - இவ்வாறு ஐ.நா. பணிக்குழு குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன் இலங்கையில் காணாமல்போனோர் தொடர்பாக நிலுவையில் இருக்கும் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட சகல முறைப்பாடுகளையும் துரிதகதியில் விசாரித்து அவற்றை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்றும் அரசை ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

வலுக்கட்டாயமாக காணாமல்போகச் செய்யப்பட்டவர்கள் அல்லது தன்முயற்சியின்றி காணாமல்போனவர்கள் தொடர்பான ஐ.நா. பணிக்குழு பார்க்க பக்கம் 04

## கிடைக்கவில்லை குடியுரிமை அதனாலேயே ஆஸி. பயணம்

### பிடிபட்ட இலங்கை அகதிகள் தகவல்

கொழும்பு, ஏப்.8

''இந்தியாவுக்கு அகதிகளாக வந்து பலவருடங்கள் கழிந்த பின்னும் இதுவரை எமக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்படவில்லை. இன்னமும் அகதிகளாக இருக்கிறோம். இலங்கைக்கு மீண்டும் திரும்பிச் செல்லும் வகையில் அங்குள்ள கள நிலைமை சாதகமாக இல்லை. எனவே தான் வேறுவழியின்றி வெளிநாடுகளுக்குச் செல்ல முயற்சி எடுத்தோம்'' இவ்வாறு இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் நெல்லை, நாகை, திருச்சி ஆகிய மாவட்டங்களில் தங்கியிருந்த 120 இலங்கை அகதிகள் ஆஸ்திரேலியாவுக்கு செல்ல கடந்த வெள்ளிக்கிழமை முயன்றனர். இவர்கள் இரு படகுகளில் சட்டவிரோதமாக பயணித்துக்கொண்டிருந்த போது படகுகளில் ஒன்று இயந்திரக் கோளாறு பார்க்க பக்கம் 04

## சிங்களத்தில் மட்டும் தேசியகீதம்; அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, ஏப்.8

இரு மொழித் தேசிய கீதம் என்ற திட்டத்தை அரச உயர் மட்டம் நிராகரித்து விட்டதாகத் தெரிய வருகிறது.

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மட்டுமல்லாது தமிழ் மொழியிலும் சேர்த்து இசைக்க ஆவன செய்யப்பட வேண்டுமென வலியுறுத்தி தேசிய மொழிகள் மற்றும் நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்கார அமைச்சரவையில் யோசனையொன்றை அண்மையில் முன்வைத்திருந்தார்.

கடந்தவார அமைச்சரவைக் கூட்டத்தில் இது பற்றி ஆராயப்பட்டது. இதன்போது இரு மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுவது குறித்து சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் அதி பார்க்க பக்கம் 04

## தமிழக மீனவர்கள் மீண்டும் போராட்டம்

இராமேஸ்வரம்,ஏப்.8

இலங்கைச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 75 இந்திய மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யக்கோரி தமிழக மீனவர்கள் இன்று முதல் மீண்டும் போராட்டத்தில் குதிக்க உள்ளனர்.

தமிழக மீனவர்கள் அமைப்புகளுக்கு இடையே இராமேஸ்வரத்தில் நேற்று நடைபெற்ற கூட்டத்தின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இது குறித்து தமிழக மீன்வர் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவிக்கையில்,

தமிழக மீனவர்கள் தொடர்பான சிறைப்பிடிப்புக்களும் வன்முறைகளும் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி பார்க்க பக்கம் 04

## புகலிடம் கோரியோரை இலங்கைக்கு அனுப்பாதீர்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

அரசியல் புகலிடம் கோரி ஐக்கிய அர்பு இராச்சியத்தில் தங்கியிருக்கும் இலங்கையர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டாம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல முயற்சித்தபோது விபத்துக்குள்ளான படகிலிருந்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

48 பேரை ஆஸ்திரேலியாவுக்கு ஏற்றிச் சென்ற படகு ஒன்று கடந்த ஒக்ரோபர் 14 ஆம் திகதி விபத்துக்குள்ளானது. இதன் போது மீட்கப்பட்டு ஐக்கிய இராச்சியத்தில் தங்க பார்க்க பக்கம் 04

### வடமாகாணத் தேர்தல்: கூட்டமைப்பின்

## முதலமைச்சர் வேட்பாளர் மாவை சேனாதிராசா



கொழும்பு, ஏப்.8

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ளதாகக் கூறப்படும் வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக மாவை சேனாதிராசா முன்னிறுத்தப்படவுள்ளார் என்று நம்பகமான வட்டாரங்களில் இருந்து தெரியவருவதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் சகல மாகாணங்களுக்கும் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டு அவை மாகாண சபைகளின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் நிலையில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு பின்னடித்து வந்தது. பார்க்க பக்கம் 04

## 'சுதந்திர ராஜபாட்டை' இன்று திறப்பு

கொழும்பு, ஏப்.8

வடக்கையும்-தெற்கையும் இணைக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள 'சுதந்திர ராஜபாட்டை' அல்லது 'பாதெனிய-அநுராதபுரம் மார்க்கம்' ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று மு.ப 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

கொரியக் கூட்டரசின் 700 கோடி ரூபா நிதியுதவியுடன் துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தப் பெருந்தெரு மறுசீர பார்க்க பக்கம் 04




# புதிய மையவாடி கோரிக்கைக்கு அதிகாரிகள் அசமந்தப் போக்கு

சாய்ந்தமருது,ஏப்.8

சாய்ந்தமருது பிரதேசத்தில் புதிய மையவாடியொன்றை அமைத்துத் தருமாறு தாம் விடுத்த கோரிக்கைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறையின்றிச் செயற்படுகின்றனர் என்று பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

சாய்ந்தமருது பிரதேசத்திலுள்ள 16ஆம், 17ஆம் மற்றும் பொலிவேரியன் கிராம மக்கள் ஜனாஸாக்களை மாளிகைக்காடு கிராமத்திலுள்ள மையவாடியிலேயே இதுவரை காலமும் நல்லடக்கம் செய்து வருகின்றனர். சாதாரண இடவசதியுடனுள்ள இந்த மையவாடியில் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் வேளைகளில் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் மையவாடியொன்றை அமைப்பதற்கான போதிய இடவசதிகள் கடற்கரையை அண்டிய பகுதிகளில் காணப்படுகின்றன.

எவ்வித பயன்பாடுமின்றி தரிசு நிலமாகக் காணப்படும் சாய்ந்தமருது கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் தமக்குரிய மையவாடியை அமைத்துத் தருமாறு இங்குள்ள பொதுநல அமைப்புகளால் பல முறை வேண்டுகோள் விடுக்கப்பட்டது. எனினும் இது வரை அது தொடர்பாக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாமல் காலம் கடத்தப்படுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் முறையிடுகின்றனர்.

(ச)

# 1000 பாடசாலைத் திட்ட அபிவிருத்தியில் திருமலை தமிழ் பாடசாலைகள் இல்லை

## பெற்றோர்கள் கவலை

திருகோணமலை,ஏப்.8

ஆயிரம் பாடசாலைத் திட்ட அபிவிருத்தியில் திருகோணமலை வடக்கு வலயத்தில் தமிழ் மொழி மூல பாடசாலைகள் உள்வாங்கப்படவில்லை என்று பெற்றோர் கவலை தெரிவித்தனர்.

கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட திருகோணமலை வடக்கு வலயத்தில் மொத்தமாக 37 பாடசாலைகள் காணப்படுகின்றன.

பதவிசிரிபுர, கோமரங்கடவல, மொறவெவ போன்ற பிரதேச செயலகப்பிரிவுகளில் உள்ள பாடசாலைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக, மொறவெவ பிரதேச செயலக பகுதியில் தமிழ் மொழி மூலமான பாடசாலைகள் ரொட்டவெவ, நொச்சிக்குளம், முதலிக்குளம், நாமல்வத்த, அவ்வைநகர் பிரதேசங்களில் காணப்படுகின்றன.

ஆனால் ஜனாதிபதியின் கல்வித் திட்டங்களுக்கு அமைய ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன, மத பேதமின்றி கல்வி கற்பதற்கு வழிவகுக்கும் ஜனாதிபதியின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஏன் திருகோணமலை வடக்கு வலயத்தில் தமிழ் மொழி பாடசாலைகள் உள்வாங்கப்படவில்லை என்று பெற்றோர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே கல்வி விடயத்தில் இன, மத பாகுபாடு காட்டாமல் ஒரே தாய் பெற்ற பிள்ளைகள் போல் நினைத்து பாடசாலை அபிவிருத்தித் திட்டங்களை கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், மேற்கொள்ளவேண்டும் என்று புத்திஜீவிகள், பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

(ச)

# சம்பூர் மக்களின் பிரச்சினைக்கு தீர்வை வழங்கும் மாகாணசபை

## உறுதியளித்தார் உதுமாலெப்பை

*திருகோணமலை,ஏப்.8*

*திருகோணமலை, சம்பூர் பிரதேச மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வை வழங்க கிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்கும் என்று அமைச்சரவை பேச்சாளரும் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை உறுதி அளித்துள்ளார்.*



திருகோணமலையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சம்பூர் பரதேசத்தில் இருந்து கடந்த 2006ஆம் ஆண்டு வெளியேறிய மக்கள் இன்று வரை அங்கு சென்று மீளக்குடியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் காணி மற்றும் மீள்குடியேற்ற பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

பல்வேறு தரப்பினராலும் காலத்துக்கு காலம் சம்பூர் மக்களின் பிரச்சினை குறித்து பேசப்பட்டு வருகின்றது.

எனினும் இன்று வரை அந்த மக்களின் உண்மையான பிரச்சினைக்கு நடைமுறை சாத்தியமான தீர்வுகள் குறித்து ஆராயப்படவில்லை என்பதே உண்மை. எனவே இந்தப் பிரச்சினை குறித்து உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி அந்த மக்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வை பெற்றுக்கொடுக்க மாகாணத்தின் அமைச்சரவை ஊடாக முயற்சியை ஆரம்பிக்கவுள்ளேன்.-என்றார். (ச-40)

# யானை தாக்கி ஒருவர் காயம்

கிளிநொச்சி, ஏப்.8

யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்து மல்லாவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஐயன்கன் குளத்தில் இருந்து புத்துவெட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இடையில் காட்டுக்குள் மறைந்து நின்ற யானை இவரைத் தாக்கியுள்ளது.

சம்பவத்தில் ஐயன்கன் குளத்தைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான மயில்வாகனம் ரவீந்திரகுமார் (வயது-42) என்பவர் காயமடைந்துள்ளார்.

ஐயன்கன் குளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக மல்லாவி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

(ஜ-ரி-145)

# சிங்கள மொழி செயலமர்வு

கிளிநொச்சி, ஏப்.8

கிளிநொச்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 9 வரையான வகுப்புகளுக்கு இரண்டாம் மொழி சிங்களம் கற்பிப்பதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சிச் செயலமர்வு ஒன்று நடத்தப்பட்டுவருகின்றது.

ஜீ.ஐ.இசற் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்த செயலமர்வு கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகியது.

இதில் 20 ஆசிரியர்கள் பங்குபற்றும் இந்தச் செயலமர்வு நாளைமறுதினம் முடிவடைகிறது.

இறுதிநாள் நிகழ்வான நாளை மறுதினம் குறிப்பிடப்பட்ட பாடசாலை அதிபர்களையும் இந்த செயலமர்வில் கலந்துகொள்ளுமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் அறிவித்துள்ளார்.

(ஜ-405)

# நிரந்தரமாக மருத்துவரை நியமித்துத் தாருங்கள்

## வன்னேரி மக்கள் கோரிக்கை

அக்கராயன், ஏப்.8

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மருத்துவமனைக்கு 6 ஆண்டுகளாக நிரந்தர மருத்துவர் ஒருவர் நியமிக்கப்படவில்லை. இதனால் அந்தக் கிராம மக்கள் சிறிய நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்குக் கூட வேறு தூர இடங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு பெற்றுத் தருமாறு அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனைவிழுந்தான் குளத்தில் அண்மையில் நடைபெற்ற கிராமிய அபிவிருத்திக் கூட்டத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

25 ஆண்டுகளாக இந்த வைத்தியசாலையில் பணியில் இருந்த வைத்தியர் ஒருவர் 6 ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வுபெற்றுச் சென்றுள்ளார்.

அதன் பின்னர் இன்று வரை மருத்துவர் ஒருவரும் நியமிக்கப்படவில்லை. அக்கராயன் மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர் வாரத்தில் இரு

> இந்தக் கிராமத்தில் 482 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்கள் தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

நாள்கள் மட்டும் வந்து கடமையாற்றுகின்றார்.

எமது கிராமத்தில் 482 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்கள் தமது மருத்துவ தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. எனவே இந்த நிலையை கருத்தில் கொண்டு மருத்துவர் ஒருவர் நியமித்து தாருங்கள் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஜ-18)

# கிளிநொச்சி கோயில் காணி பறிப்பு; நீதிமன்றின் உதவியை நாட முடிவு

## நிர்வாகமும் கிராம மக்களுமாக

கிளிநொச்சி, ஏப்.8

கிளிநொச்சி தொண்டமான்நகர் உதிரவேங்கை ஆலயத்தின் காணியை தென்பகுதி நிறுவனம் ஒன்று அபகரித்துள்ள நிலையில் இது தொடர்பில் நீதிமன்றின் உதவியை நாடப் போவதாக ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.

கடந்த மூன்று நாள்களாக குறித்த காணியில் தென்பகுதி நிறுவனம் தனது கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

இது குறித்து அதிருப்தி வெளியிட்ட அந்தப் பகுதி மக்கள் மற்றும் ஆலய நிர்வாகத்தினரின் கேள்விகளுக்கு தென்பகுதியைச் சேர்ந்த நிறுவனத்தினர் முறையற்ற பதில்களை வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரச அதிபர், ஆளுநர் உட்பட முக்கியமானவர்களின் அனுமதியுடனேயே தாம் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதாக அவர்கள் ஆலய நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளனர். இது குறித்து கரைச்சிப் பிரதேச சபையிடமும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனிடமும் முறையிடப்பட்டது.



இந்த நிலையில் நேற்றும் நேற்று முன்தினமும் குறித்த தரப்பினர் அங்கு சென்று பணிகளை நிறுத்துமாறு கோரியபோதும் தென்பகுதி நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் தமது நிர்மாணப் பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அரச அதிபருக்கு இந்தக் காணிப் பிரச்சினை தொடர்பில் உரிய பதில் தர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

தவிர கரைச்சிப் பிரதேச சபையின் அனுமதியுடனேயே குறித்த பிரதேசத்தில் புதிய புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கோரப்பட்டது.

இவை எதனையும் பொருட்படுத்தாது தென்பகுதி நிறுவனம் ஆலயக் காணியில் அடாத்தாகக் கட்டடங்களை கட் டுவதை எதிர்த்தே நீதிமன்றை நாடவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக ஆலயத்தின் பாவனையில் இருந்த இந்தக் காணிகளை சகல ஆவணங்களையும் தாம் வைத்திருக்கும் நிலையில் அடாத்தாக காணியைப் பிடித்து அதில் 'அனுமதியின்றி உட்பிரவேசிக்கக் கூடாது' என அறிவிப்புப் பலகையும் இட்டு, அவசர அவசரமாக நிர்மாணப் பணிகளில் தென்பகுதி நிறுவனம் ஈடுபட்டுள்ளதாக அந்தக் கிராம மக்களும் ஆலய நிர்வாகத்தினரும் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரு தினங்களாக அங்கு கூடிய மக்கள் தமது எதிர்ப்பையும் வெளிப்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஜ-426)

## வர்த்தகர்களின் முன்மாதிரி

தென்மராட்சி, ஏப்.8

வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் பரிசோதனை நடத்திய போது அங்கு வைக்கப்பட்டிருந்த குளிர்பானங்களைப் பெட்டிகளுடன் தூக்கி சுகாதாரப் பகுதி வாகனத்தில் ஏற்றினார்கள் சில வர்த்தகர்கள்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

குளிர்பான உற்பத்தி நிறுவனத்தால் வாகனங்களில் கொண்டு வரப்பட்ட குளிர்பானங்கள் பெட்டிகளுடன் வர்த்தக நிலையங்களில் இறக்கப்பட்டிருந்தன.

வாகனம் வராததால் வர்த்தக நிலையங்களில் நீண்ட காலமாக வைக்கப்பட்டிருந்ததாகவும் அவை திகதி காலாவதியான போதிலும் தொடர்ந்து வைக்கப்பட்டிருந்ததாகவும் சுகாதாரப் பரிசோதகர்கள் பரிசோதனை நடத்திய வேளையில் வர்த்தகர்களே முன்வந்து குளிர்பானப் போத்தல்களை தூக்கி வந்து சுகாதாரத் திணைக்கள வாகனத்தில் ஏற்றிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## பரிசோதனைக்குப் பின்னரே தண்ணீர் பயன்பாட்டுக்கு


தென்மராட்சி, ஏப்.8

ஆலயத் திருவிழாக்களை முன்னிட்டு வைக்கப்படும் தண்ணீர்ப் பந்தல்களில் பயன்படுத்தும் தண்ணீர் இனிமேல் அந்தந்தப் பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர்களால் பரிசோதனை செய்யப்பட்ட பின்னரே பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

ஆலயத் திருவிழாக்களை முன்னிட்டு ஆலய சுற்றாடல்களிலும் வீதிகளிலும் தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அடியார்களுக்கு தாக சாந்தி செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் சுகாதாரமற்ற கிணறுகளில் இருந்து பெறப்பட்ட தண்ணீர், தண்ணீர்ப் பந்தல்களில் பயன்படுத்தப்பட்டு வருவதாக சுகாதாரப் பகுதியினருக்கு முறைப்பாடுகள் கிடைந்துள்ளன.

இந்த நிலையில் இனி வருங் காலங்களில் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆலய சூழல்களிலும் போடப்படும் தண்ணீர் பந்தல்களில் தண்ணீர் பொது சுகாதார பரிசோதர்களால் பரிசோதிக்கப்பட்ட பின்னரே பாவிக்க அனுமதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-9)



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவர்களுக்கான அரங்கத்திறன் விருத்தி நாடகப் பயிற்சிப் பட்டறை கல்லூரியின் அழகியல்துறை மண்டபத்தில் நடைபெற்றது. புத்தாக்க அரங்க இயக்கத்தால் நடத்தப்பட்ட இப் பயிற்சிப் பட்டறையில் வளவாளர்களாக புத்தாக்க அரங்க இயக்கப் பணிப்பாளரும் யாழ். மத்திய கல்லூரி நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரி.குமரன், புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளரும் மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியருமான எஸ்.ரி.அருள்குமரன், ஆற்றுகையாளர் த.தயானிஷன், பா.கவிராஜ், இ.பகிதரன் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சி பட்டறையை வழிநடத்தினர். இந்தப் பயிற்சி பட்டறையில் தரம் 10, தரம்11 நாடகத்துறை மாணவர்களுக்கான நாடகத் தயாரிப்பு படிமுறை, நடிப்பு சார் பயிற்சிகள், அரங்கத்திறன் விருத்தி, ஆளுமை வளர்ச்சிசார் பயிற்சிகள் வழங்கப்பட்டன. (ம)

## இருளில் மூழ்கும் கைதடி வைத்தியசாலை

கைதடி அரசினர் வைத்தியசாலை இரவு வேளையில் இருளில் மூழ்கியிருப்பது குறிந்து பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வைத்தியசாலையில் கட்டடடம் புதித்தாக நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையில் வைத்தியசாலைக்கு இரவு காவலர் எவரும் இன்றி அந்த புதிய கட்டடம் இருளில் மூழ்கி காணப்படுகின்றது.

அதேசமயம் இந்த வைத்தியசாலையின் அத்தியாவசிய சேவை கருதி அதற்கென அபிவிருத்தி சபை ஒன்றை அமைப்பதற்கு பிரதேச சமூக ஆர்வளர்கள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த வைத்தியசாலைக்கு இரவு வேளை பாதுகாப்பு காவலர் ஒருவரை நியமிப்பதுடன் இரவு நேரத்தில் மின்சார வெளிச்சத்தை ஏற்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய நவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

# வலி. தென்மேற்குப் பிரதேசத்துக்கு மற்றொரு கால்நடை சங்கம் தேவை

### இதன் மூலமே மக்களுக்கான தேவையை நிறைவேற்ற முடியும் என்கிறார் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவர்

யாழ்ப்பாணம், ஏப்.8

*வலி. தென்மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட வகையில் 28 கிராம அலுவலர் பிரிவுக்கும் ஒரு கால்நடை வளர்ப்போர் சங்கம் போதுமானதல்ல. வலி.தென்மேற்கு பிரிவுக்கு மற்றுமொரு கால்நடை வளர்போர் கூட்டுறவு சங்கம் உருவாக்கப்படவேண்டும்.*

இவ்வாறு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் தலைவர் சி.மகேந்திரன் தெரிவித்தார்.

சண்டிலிப்பாய் கால்நடை வளர்போர் கூட்டுறவு சங்கத்தின் போதுமான அபிவிருத்தி மக்களை சென்றடையவில்லை எனும் தொனிப்பொருளில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீண்ட காலமாக வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரிவுக்கு ஒரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் மட்டுமே இருந்து வருகின்றது.

இதனால் மாதகல் முதல் காக்கைதீவுவரையாக உள்ள கால்நடை வளர்ப்போரின் தேவைகளை இந்தச் சங்கத்தால் நிறைவேற்ற முடியவில்லை.

28 கிராம அலுவலர் பிரிவுக்கு இரு சங்கங்கள் உருவாக்கப்பட வேண்டும். 28 கிராம அலுவலர் பிரிவும் இரு கோயில் பற்றுக்களை கொண்டது.

இதில் பண்டத்தரிப்பு கோயில்பற்றுக்கு ஒரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கமும் மானிப்பாய் கோயில் பற்றுக்கு இன்னொரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கமுமாக இரு சங்கங்கள் அமைக்க வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் முன்வர வேண்டும்.

இதன் மூலமே மெய்யான அபிவிருத்தியை அந்தப் பகுதி மக்கள் அடைவர். மேலும் ஒரு சங்கத்தின் மூலம் 28 கிராம அலுவலர் பிரிவின் தேவைகளை முழுமையாக நிறைவேற்ற முடியாது.

எனவே, வலிகாமம் தென் மேற்கில் பண்டத்தரிப்பு பரிஷ் பிரிவுக்கு ஒரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கமும் மானிப்பாய் பரிஷ் பிரிவுக்கு இன்னொரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கமுமாக இரு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் அமைத்து உதவ சம்பந்தப்பட்ட யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி முன்வரவேண்டும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-50)

## பாவனைக்கு உதவாத கடலுணவுகள் அழிப்பு

தென்மராட்சி, ஏப்.8

சாவகச்சேரி பொதுச் சந்தையின் கடலுணவு விற்பனைப் பிரிவில் பாவனைக்கு உதவாத கடலுணவுகள் அழிக்கப்பட்டன.

சாவகச்சேரி நகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ் தலைமையில் சென்ற குழுவினர் பரிசோதனைகளை மேற்கொண்ட போது பாவனைக்கு உதவாத பெருமளவு கடலுணவுகள் விற்பனை வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பாவனைக்குதவாத நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கடலுணவுகளை மீட்டு அவை அழிக்கப்பட்டன.

சந்தையில் பழுதடைந்த மீன்கள் தினமும் விற்பனை செய்யப்படுவதாக நகர சபைக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்துத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளையின் பணிப்பின் பேரில் சென்ற குழுவினரால் பாவனைக்கு உதவாத கடலுணவுகள் பறிமுதல் செய்யப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

தினமும் விற்பனையாகாத கடலுணவுகள் குளிரூட்டப்பட்டு சந்தைக்குக் கொண்டுவருவதால் அவற்றை வாங்கிச் செல்வோர் அவற்றைப் பயன்படுத்தாமல் வீசுவதாகவும் சந்தையில் குளிரூட்டப்பட்ட கடலுணவுகள் விற்பனை செய்வதை தடை செய்யுமாறும் மக்கள் கேட்டுள்ளனர். (ம-9)

## சாவகச்சேரி நகர சபைத் தலைவரை மக்கள் சந்திப்பதற்கு புதிய ஏற்பாடு

### நகரசபைக்குவரும் பொதுமக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் தலைவரை சந்தித்து தமது தேவைகள் குறித்துக் கலந்துரையாடலாம்

தென்மராட்சி, ஏப்.8

சாவகச்சேரி நகரசபை தலைவரை வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டும் பொது மக்கள் சந்திக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் பல்வேறு தேவைகளுக்காக தினமும் வருகை தருவதால் அவர்களின் தேவைகளை நிறைவேற்றும் பணிகளில் முழுமையாக ஈடுபட முடியாது உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும், மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்களை இதனால் முழுமையாக கவனிக்க முடியாத நிலை தலைவருக்கு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் நகர சபைக்கு வரும் பொது மக்கள் நகரசபைக்குவரும் பொதுமக்கள் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் தலைவரை சந்தித்து தமது தேவைகள் குறித்துக் கலந்துரையாடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் அலுவலகத்துக்குவரும் பொது மக்கள் செயலாளர், நிர்வாக அலுவலர் உள்ளிட்ட உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-9)

## பனாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நவீன முறையிலான தொழில்நுட்பம்

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ். குடாநாட்டில் பனாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு நவீன முறையிலான தொழில்நுட்ப வசதிகள் பயன்படுத்தப்படவுள்ளன என்று பனை அபிவிருத்தி சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பனம் பழத்தில் இருந்து தயாரிக்கப்படும் இந்த பனாட்டை கூடிய காலம் வரைக்கும் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கூடுதலாக பனங்களியை பாதுகாப்பாக வைக்கப்பட்டு அதில் இருந்து பனாட்டை அந்தந்த காலங்களில் உற்பத்தி செய்வதற்கு நவீன முறையிலான தொழில்நுட்ப வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இதற்கான ஆராய்ச்சிப் பணிகளை விரைவில் ஆரம்பிக்கவும் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

பனம் பழத்தின் சீசன் காலங்களிலேயே இந்த பனாட்டுக்கள் கூடுதலாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

சீசன் முடிவடைந்ததும் பனாட்டுக்குப் பின்னர் பற்றாக்குறை நிலவுகின்றது. இந்தப் பனாட்டுக்கு நாட்டில் மட்டும் அல்ல வெளிநாடுகளிலேயே பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

ஆகவேதான் பனாட்டு உற்பத்தியைச் சபை அதிகரிப்பதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த உற்பத்திகள் எதிர்காலத்தில் நவீன மயப்படுத்தப்பட்டு அதற்கான பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும்.- என்று மேலும் தெரிவித்தார். (ம-17)

# அரசியலில் பிரவேசிக்கும் எண்ணம் எனக்கு இல்லை

## -அனோமா பொன்சேகா தெரிப்பு -

கொழும்பு,ஏப்.8

''அரசியலுக்குள் கால் பதிக்கும் எந்தவொரு எதிர்பார்ப்பும் எனக்கில்லை. ஆயினும் சரத்பொன்சேகா அரசியல் ரீதியான இக்கட்டு நிலையொன்றுக்குள் சிக்கிக்கொள்வாரானால் அவரை மீட்க அரசியலில்என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்''- இவ்வாறு தெரிவித்துள்ளார் அனோமா பொன்சேகா.



''அரசியலுடன் சம்பந்தப்பட்டிருப்பதை விடவும் குடும்பத்தலைவி என்ற நிலையில் நீடிக்கவே நான் பெரிதும் விரும்புகிறேன்'' – அனோமா

அனோமா பொன்சேகா, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்கா ஆகிய மூவரையும் ஒன்றிணைத்து அரசுக்கு எதிராக களமிறக்கும் முயற்சிகள் நடைபெறுவதாகக் தகவல்கள் வெளியாகியிருந்தன. சந்திரிக்காவை அனோமா பொன்சேகா சந்தித்துக் கலந்துரையாடினார் என்றும் ஊடகங்கள் தெரிவித்திருந்தன. இது குறித்து கருத்து வெளியிட்ட அனோமா,

''அரசியலுடன் சம்பந்தப்பட்டிருப்பதை விடவும் குடும்பத்தலைவி என்ற நிலையில் நீடிக்கவே நான் பெரிதும் விரும்புகிறேன். சந்திரிக்கா பண்டாரநாயக்கவை சந்தித்தது உண்மைதான். ஆயினும் அரசியல் சம்பந்தப்படும் எந்தவொரு விடயம் பற்றியும் நாங்கள் இருவரும் அதன்போது உரையாடியிருக்கவில்லை. இந்தச் சந்திப்புத் தொடர்பாக வெளியான ஊடகத் தகவல்கள் எமக்கு புதிராக இருந்தது'' -என்றார். (ங-22)

# பஸ் கட்டண அதிகரிப்பு 10 சதவீதம் வேண்டும்

## பஸ் உரிமையாளர்கள் சங்கம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.8

அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளபடி 7 % பஸ்கட்டண அதிகரிப்பு எந்த வகையிலும் போதுமானதல்ல. உண்மையில் 10 % கட்டண அதிகரிப்பே தேவை-இவ்வாறு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹெமுனு விஜயரத்தின தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசியக்கொள்கைக்கு அமைவாக பஸ் கட்டண மீளாய்வுக்கு கருத்தில் கொள்ளப்படும் 12 வகையான செலவீனங்களை கவனத்தில் கொள்ளாமலேயே இந்த 7 சதவீத உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் ஒரு போதும் ஏற்பதற்கு தயாராக இல்லை

இந்த முறை வரவு செலவுத்திட்டத்தின் மூலம் வருமான வரி, அனுமதிப்பத்திரக் கட்டணம், மின்சாரக் கட்டணம், எரிபொருள் விலை என்பன அதிகரித்துள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக ரயர்களினதும் , மீள் நிரப்பப்படும் ரயர்களினதும் விலையும் அதிகரித்துள்ளது. இவற்றின் அடிப்படையில் 10% பஸ் கட்டண அறிவிப்பையே எம்மால் ஏற்றுக்கொள்ள முடியும் அவ்வாறு இல்லாத விடத்து, போராட்டங்களில் இறங்குவதே எமக்குள்ள ஒரே வழி- என்றார். (ங-22)

## குழியில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
நேற்று உயிரிழந்தனர். மேலும் ஒருவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

குழியில் வெளிவந்த விஷவாயுவை சுவாசித்ததன் காரணமாக இவர்கள் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை இடம்பெற்ற இந்த அனர்த்தத்தில் குறித்த ஹோட்டலில் பணிபுரியும் இரு இளைஞர்களே உயிரிழந்தவர்களாவர். இதன்போது பாதிக்கப்பட்ட மற்றுமொரு இளைஞர் களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார். (ங-சி)

## கிடைக்க...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
காரணமாக பழுதடைந்து நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

இதனை அவதானித்த இந்தியக் கடற்படையினர், விமானப் படையின் துணையோடு படகில் பயணித்த 120 பேரையும் மீட்டனர். மீட்கப்பட்டவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டபோதே தாம் குடியுரிமை இல்லாத காரணத்தாலேயே சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்ததாக தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

''வெளிநாடுகளில் 5 ஆண்டுகள் வசித்தாலே அந்த நாட்டுக் குடியுரிமை கிடைத்து விடுகிறது. ஆனால் நாங்கள் இந்தியாவுக்கு வந்து 10, 15 வருடங்கள் கழிந்த போதும் குடியுரிமை இன்றி அகதிகளாகவே நடத்தப்படுகிறோம்.

இந்தியாவில் தங்கியிருப்பதால் எமது பொருளாதார நிலையையும் மேம்படுத்த முடியவில்லை. நாங்கள் அகதிகளாக நடத்தப்படுவதால் உரிய வேலை வாய்ப்பையும் பெற்றுக்கொள்ள முடிவதில்லை. இதனாலேயே நாங்கள் சட்டவிரோதமாகவேணும் வெளிநாடு செல்ல முயற்சி எடுத்தோம்'' - என்றனர். (ங-13)

## சிங்களத்தில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
ருப்தி வெளியிட்டனர். இரு மொழிகளில் தேசிய கீதம் இசைக்கப்படுவதால் மட்டும் இனங்களுக்கிடையில் கருத்தொற்றுமை ஏற்படும் வாய்ப்பு உருவாகாதெனவும், மாறாக சிங்கள மக்களிடையே பிரிவினையை தூண்டவே வழி செய்யும் எனவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்தே இரு மொழி தேசிய கீதம் என்ற திட்டத்தை கிடப்பில் போட்டுவிட்டு வழமை போன்று சிங்கள மொழியில் மட்டுமே இசைப்பதென்று அரச உயர்மட்டம் முடிவெடுத்துள்ளது. இது குறித்து அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவிடம் 'உதயன்' கருத்துக் கேட்டபோது,

நாட்டின் நல்லிணக்கத்தைக் கருத்திற்கொண்டு தேசிய கீதத்தை இரு மொழிகளிலும் பாடவேண்டும் என கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது நான் தெரிவித்திருந்தேன். இருப்பினும், எனது கருத்துக்கு அமைச்சரவை அனுமதியளிக்கவில்லை.

இதேவேளை, இது விடயம் குறித்து நான் ஜனாதிபதிக்கு கடிதமொன்றையும் அனுப்பியிருந்தேன். அந்தக் கடிதத்துக்கு ஜனாதிபதியிடமிருந்து இதுவரையில் உத்தியோகபூர்வ பதில் எதுவும் கிடைக்கவில்லை. எனினும் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இந்த முயற்சியை நான் கைவிடமாட்டேன். இது குறித்து நாட்டு மக்களின் கருத்தறிந்து அதன்படி அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளேன் - என்றார் அமைச்சர் வாசு. (ங-சி)

## இளையோருக்காக தலைமையைத் துறக்கத் தயார்

ஜே.வி.பி. தலைவர்

ஜேவிபியை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும் வகையிலும் நாட்டுக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமையும் வகையிலும் திறமை கொண்ட இளைய தலைமுறையினரிடம் தலைமைத்துவத்தை ஒப்படைக்கவிருக்கிறேன் என்று அந்தக்கட்சியின் தலைவர் சோமசிங்க அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சக்கர நாற்காலியில் செல்லும் வரையிலும் கட்சி தலைவராக இருப்பதற்கு நான் விரும்பவில்லை.

வர்க்கப் போராட்டமானது ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு செல்ல வேண்டும்.

'நாங்கள் எப்போதும் தலைவர்களாக இருக்க விரும்பவில்லை,' என கியூபா தலைவர் ராவுல் காஸ்ட்ரோ சமீபத்தில் தனது ஓய்வு அறிவிப்பை அறிவித்தார். அதனை ஒரு முன்னோடியாகக் கொள்ளவேண்டும் - என்றார். (ங)

## 16 ஆவது மாதம்: 'கண்டுபிடித்த' ஆட்பதிவுத் திணைக்களம்

12 மாதங்களை கொண்டதே ஒரு வருடமாகும். எனினும் 16 ஆவது மாதம் என்று குறிப்பிட்டு இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆட்பதிவுத் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அடையாள அட்டை வழங்கப்பட்ட திகதி குறிப்பிடப்படும் அட்டையின் முன்புறத்தில் 2012.16.17 என குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் 16 ஆம் மாதம் என குறிப்பிடப்பட்டுள்ளமையானது . இந்தப் பதிவு அடையாள அட்டையின் நபருக்கு பல்வேறு சிக்கல்களை தோற்றுவித்துள்ளது. (ங)

## 'சுதந்திர...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
மைக்கப்பட்டுள்ளது.

15 மீற்றர் அகலமும், 80 கிலோமீற்றர் நீளம் கொண்ட இந்தப் பாதை மறுசீரமைக்கப்பட்டுள்ளதன் மூலம் வடமேல் மாகாணத்திலிருந்து பாதெனிய ஊடாக வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களுக்கு நேரடிப் போக்குவரத்து வசதி ஏற்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் நிர்மலகொத்தலாவல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளும் இந்தப் பாதை திறப்பு நிகழ்வில் கொரியக் கூட்டரசின் தூதுவர் சேஜோன் மூன் உள்ளிட்ட ஏராளமான இராஜதந்திர அதிகாரிகளும், அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்கவுள்ளனர். (ங-22)

## தமிழக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
53 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்களில் 34 பேர் நெடுந்தீவுக் கடற்படையினராலும், 19 பேர் மன்னார் கடற்படையினராலும் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் நெடுந்தீவுக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 34 மீனவர்கள் இரு தினங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

ஆயினும் மன்னாரில் கைது செய்யப்பட்ட 19 மீனவர்களும் எதிர்வரும் 11 ஆம் திகதிவரை வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் பாண்டிச்சேரியைச் சேர்ந்த 26 மீனவர்களை இலங்கைக் கடற்படை கடந்த வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளது.இவர்கள் யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தலைமன்னாரில் கைது செய்யப்பட்ட 30 மீனவர்களும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் தொடர்ந்து வருகிறது. இது குறித்து மத்திய அரசிடம் பல தடவை முறையிட்டோம். ஆனால் இதுவரை ஆக்கபூர்வமான பதில் எதுவும் கிடைக்கவில்லை. இதனாலேயே மீண்டும் கால வரையறையற்ற பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் குதிக்க முடிவுசெய்துள்ளோம். இந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக எதிர்வரும் 12 ஆம் திகதி சாலை மறியல் போராட்டத்திலும் ஈடுபடவுள்ளோம் - என்றார். (ங-13)

## புகலிடம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வைக்கப்பட்டுள்ள 19 இலங்கையர்களை மீண்டும்எதிர்வரும் 11ஆம் திகதி இலங்கைக்கு அனுப்ப அந்த நாட்டு அரசு தீர்மானித்துள்ளது. (ங-சி)

## முதலமைச்சர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்த நிலையில் உடனடியாக வடக்கு மாகாணத் தேர்தலை நடத்துமாறு இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்து வந்தன. அண்மையில் நிறைவேற்றப்பட்ட ஜெனிவாத் தீர்மானத்திலும் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு கோரப்பட்டிருந்தது. இந்த நிலையில் செப்ரெம்பர் மாதம் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தேர்தலில் போட்டியிடவுள்ள முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பது இதுவரை முடிவு செய்யப்படாமல் இருந்தது. இந்த நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பெருமளவிலான முக்கியஸ்தர்களின் ஆதரவுடன் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவைசேனாதிராசர முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று கொழும்பிலிருந்து வெளியாகும் 'லங்காதீப' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

ஆனாலும் இந்த முடிவை இன்னும் சில வாரங்களின் பின்னரே கூட்டமைப்பு உத்தியோக பூர்வமாக அறிவிக்கும் என்றும் 'லங்கா தீபா' தெரிவித்துள்ளது. (ங-22)

## மக்களைக்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கடந்த வாரம் வெளியிட்ட ஓர் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. பணிக்குழு நிறுவப்பட்ட காலத்தில் இருந்து இதுவரை.இலங்கை அரசுக்கு காணாமல்போனோர் தொடர்பாக 12 ஆயிரத்து 433 சம்பவங்கள் தொடர்பாக அறிவித்திருக்கின்றது.

இவற்றில் 40 சம்பவங்கள், அவைகளுக்குரிய இடங்களில் இருந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையிலும், 6 ஆயிரத்து 535 சம்பவங்கள் அரசு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலும் தீர்க்கப்பட்டன. இதைவிட 222 சம்பவங்கள் மிகைப்படுத்தப்பட்டவையாக இருந்தமையால் அவை நீக்கப்பட்டன. எனினும் 5ஆயிரத்து 576 சம்பவங்கள் தீர்க்கப்படாமல் எஞ்சியுள்ளன.

இவற்றில் 4 சம்பவங்களை அவற்றின் அவசரத்தன்மை கருதி உடனடியாகத் தீர்க்குமாறு இலங்கை அரசைக் கேட்டிருந்தோம்.

மக்கள் போராட்ட இயக்கத்தின் யாழ்ப்பாண ஒருங்கிணைப்பாளர் லலித் வீரராஜா மற்றும் நாம் இலங்கையர் மாணவர் இயக்கத்தின் செயற்குழு உறுப்பினர் குகன் முருகானந்தன் ஆகியோர் 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் 9 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் காணாமற் போனமை, இந்திய வம்சாவளியினரான தொழிலதிபர் இராமசாமி பிரபாகரன் 2012 ஆம் ஆண்டு பெப்ரவரி 12 ஆம் திகதி சிவில் உடையில் வந்தவர்களால் கடத்தப்பட்டமை, திருமதி வசந்தமாலா பத்மநாதன் என்பவர் வவுனியாவில் ஒரு வங்கிக்கு அருகில் 2011ஆம் ஆண்டு மே 4ஆம் திகதி புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தமை என்பனவே அந்தச் சம்பவங்களாகும்.எனினும் இவை குறித்து முன்னேற்றகரமான பதில் எதுவும் இலங்கை அரசிடமிருந்து கிடைக்கவில்லை.

சகல மக்களும் வலுக்கட்டாயமாக காணமற் போகச் செய்வதிலிருந்து காப்பற்றப்பட வேண்டும் என்ற பிரகடனத்தை செயல்படுத்துவதில் இலங்கையில் நடந்த போரின் இறுதிக்கட்டத்தில் எதிர் நோக்கப்பட்ட இடையூறுகள் தொடர்பாக 2011 ஆம் ஆண்டு மே 4 ஆம் திகதி ஐ.நா. பணிக்குழு இலங்கை அரசுக்கு அனுப்பிய குற்றச்சாட்டுகளுக்கும் இலங்கை அரசிடம் இருந்து பதில் கிடைக்கவில்லை. அத்துடன் இது குறித்து 2012 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 13 ஆம் திகதி அனுப்பப்பட்ட நினைவூட்டல் கடிதமும் புறக்கணிக்கப்பட்டுள்ளது. (ப)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முஸ்லிம், தமிழ் அரசியல் தலைவர்கள் 'கந்தறு' நிலை போக்க முன்வருவரா...?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தமக்குள்ளான வேறுபாடுகளை மறந்து, துறந்து–

தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் நல்லுறவைக் கட்டி எழுப்ப வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிப்பது மிக அவசியமாகும்–

இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறார் கிழக்கு மாகாண சபையின் அமைச்சர் ஹபீஸ் நஸீர் அகமத்.

வடக்கு, கிழக்கில் ஆரம்ப காலம் தொட்டு அண்ணன்– தம்பி உறவையே இரு சமூகத்தினரும் பேணி வந்துள்ளனர். தமிழர்களுக்காக முஸ்லிம்களும் முஸ்லிம்களுக்காக தமிழர்களும் ஒருவருக்கு மற்றவர் உதவியும் ஒத்துழைத்தும் வந்துள்ளனர்––

தமிழ் மக்களின் அரசியல் போராட்டம் ஆயுத மயமானதைத் தொடர்ந்து, இரு சமூகங்களினதும் நல்லுறவையும் ஒற்றுமையையும் சீர்குலைக்கும் சூழ்ச்சிகளும், சதிகளும் முன்னெடுக்கப்பட்டன. அதனால் சதியாளர்களே பயன் அடைந்தார்கள்––

ஆகவே, இரு சிறுபான்மைச் சமூகங்களுக்கும் இடையிலான ஒற்றுமையையும், ஐக்கியத்தையும் புரிந்துணர்வையும் மீண்டும் கட்டி எழுப்புவது அவசியம். அதற்கான நடவடிக்கைகளை, ஏற்பாடுகளை அரசியல் பேதங்களுக்கு அப்பால் நின்று, உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்––

மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பனவற்றை அடிப்படையாக வைத்து இந்தப் பணிகளை ஆரம்பிக்க இயலும். இந்த விடயத்தில் இரு சமூகங்களினதும் அரசியல் தலைவர்கள் கவனம் செலுத்துவது அவசியம்–– என்று காலத்தின் தேவையை உணர்த்தி உள்ளார் கிழக்கு மாகாண சபையின் அமைச்சர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தின் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் தலையீடு அதிகரித்திருப்பதாக நீதியமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வைத்துப் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டி உள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கில் படைக்குவிப்பு மக்களின் இயல்பு வாழ்வில் கடுமையான தாக்கங்களைச் செலுத்தி வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ச்சியாகக் கூறி வரும் ஒரு சூழ்நிலையிலும்–

வடக்கு,கிழக்கில் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் படையினர் தலையீடு செய்வதாக சர்வதேச சமூகம் சுட்டிக்காட்டி வரும் இந்தச் சந்தர்ப்பத்திலும், அமைச்சர் ஹக்கீமின் இந்தக் குற்றச்சாட்டு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்; விவகாரமும் ஆகும்.புறமொதுக்கத்தக்க ஒரு விடயமாகவும் கருதி விட முடியாது.

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிரான சிங்கள பௌத்த பேரினவாதம் அமோகமாகத் தலை தூக்கியிருக்கும் ஒரு கால கட்டத்தில், நீதியமைச்சர் என்ற பதவியில் இருந்து கொண்டு, இராணுவத்தினர் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சராக இருக்கும் ஜனாதிபதியிடமே நெற்றிக்கு நேராகக் கேட்டிருப்பது வரவேற்கத்தக்க துணிச்சல் எனலாம்.

வடக்கு,கிழக்கில் மக்கள் பாதுகாப்பு தொடர்பாடல்களுக்காக பொலிஸ் கட்டமைப்பு இருக்கும்போது, இராணுவத்தினர் சிவில் நிர்வாகச் செயற்பாடுகளில் ஈடுபடுவது, மக்களை பல வகைசார் அழுத்தங்களுக்குள் வைத்திருக்கிறது என்பதே இன்றைய நிலைமை. மக்களின் பாதுகாப்புக்காகவே வடக்கு, கிழக்கில் படைகள் நிலை கொண்டிருப்பதாக இலங்கை அரசு சர்வதேச சமூகத்திடம் சப்பைக்கட்டு கட்டினாலும், வடக்கு, கிழக்கில் நடக்கும் தாக்குதல் சம்பவங்கள், அரச வன்முறைகள் ஆகியன இலங்கை அரசு கூறும் சளப்பல், சப்புக்கட்டு நியாயத்தை ஏற்றுக்கொள்ள முடியாது.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் இதர அரசியல் தலைவர்கள், இப்போது இராணுவப் பிரசன்னம் பற்றிக் குரல் எழுப்பினாலும், ஏற்கனவே நீண்ட காலமாக அதனை மௌனிகளாகப் பார்த்துக் கொண்டுதான் இருந்தனர் என்பதே உண்மை. அரசியல் காரணங்களுக்காக, பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக அவர்கள் மௌனிகளாக இருக்கிறார்கள் என்று தீர்மானித்து மக்கள் ஓரங்கட்டுவதற்கு முன்னர், இப்போதாவது குரல் எழுப்ப ஆரம்பித்திருக்கிறார்களே என்று முஸ்லிம் மக்கள் ஆறுதல் கொள்ளலாம்.

வடக்கு, கிழக்கில் இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிடுவதாகத் தமிழ்க் கூட்டமைப்பு கடந்த பல வருடங்களாக சுட்டிக்காட்டி வந்து கொண்டிருக்கின்றது. இந்தத் தலையீட்டால் தமிழ் மக்கள் மட்டுமே பாதிக்கப்படுகின்றனர் என்று ஒரு போதும் தமிழ்க் கூட்டமைப்பு கூறவில்லை. மாறாக, வடக்கு, கிழக்கின் அனைத்து மக்களுமே பாதிக்கப்படுகின்றனர் என்றே கூட்டமைப்பு சுட்டிக்காட்டி வந்தது.அத்தகைய சந்தர்ப்பங்களில் எல்லாம் முஸ்லிம் அரசியல் தலைமைகள் வாய் திறக்கவில்லை என்பதே உண்மை.

இப்போது கிழக்கில் முஸ்லிம் புத்திஜீவிகள், கல்வி மான்கள் விசாரணை என்ற போர்வையில் இராணுவ முகாம்களுக்கு அழைக்கப்படும் போதே, வெள்ளம் தலைக்கு மேல் போகப் போவதை முஸ்லிம் அரசியல் தலைமைகள் உணர்ந்துள்ளன. தலையிடியும் காய்ச்சலும் அவர் அவருக்கு வந்தால் மட்டுமே வேதனை தெரியும் என்பது போல.

சிவில் நிர்வாகத்தில் இராணுவப் பிரசன்னம் என்று குற்றஞ்சாட்டும் இதே முஸ்லிம் அரசியல்வாதிகள், வடக்கு, கிழக்கில் ஆளுநர்களாக, அரச அதிபர்களாக ஓய்வு பெற்ற படை அதிகாரிகளைச் சேர்க்க அனுமதி வழங்கும் போது எங்கிருந்தனர்? எல்லாமே கிரமப்படி நடக்க அனுமதியளித்து விட்டு, இப்போது கொந்தளிப்பதும், கோபப்படுவதும் எதற்கு? பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கா?

சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும். கண்கள் கெடுவதற்கு முன்னர் அல்லவோ.... !

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் பிட்டும் தேங்காய்ப் பூவும் போன்று ஒன்றிணைந்து வாழ்ந்தவர்கள் வடக்கு, கிழக்கு தமிழர்களும் முஸ்லிம்களும் என்பது இப்போது சரித்திரமாகிவிட்டது. அதனை மீட்பது காலத்தின் தேவை என்பதனை இரண்டு இனங்களின் அரசியல் தலைவர்களும் உணர்ந்து, அதனை நாடி உழைப்பது அவசியமானது. அதன் மூலமே அவர்கள் தத்தமது இன அடையாளங்களைக் காப்பாற்றி மூன்றாமவர் காலால் ஏறி மிதிக்கும் இப்போதைய 'கந்தறு' நிலையைப் போக்க முடியும். இரு இனத் தலைவர்களும் முயற்சிப்பார்களா? மனங்கொள்வார்களா? முன் வருவார்களா.....?

# 10 ஆயிரம் பட்டதாரிப் பயிலுநருக்கு அடுத்த வாரத்தில் நிரந்தர நியமனம்

## நிர்வாக சேவை அமைச்சர் தகவல்

கொழும்பு, ஏப்.8

ஓராண்டு கால சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மேலும் 10 ஆயிரம் பேர் வரையிலான பட்டதாரிப் பயிலுநர்களை அடுத்த வாரத்தில் நிரந்தர சேவையில் உள்ளீர்த்துக் கொள்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிர்வாக சேவைகள் மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யூ.டீ. ஜே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 5, 491 பட்டதாரிப் பயிலுநர்கள் நிரந்தரமாக்கப் பட்டு பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வேலைவாய்ப்புக்கள் அற்ற 51 ஆயிரம் பட்டதாரிகளுக்கு ஒரே தடவையில் வேலைவாய்ப்புக்களை வழங்குவது என்ற பெரிய செயற்றிட்டம் ஒன்று இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு இடம்பெறுவது இதுவே முதல் தடவையாகும்.

இது எமக்குப் பெருத்ததொரு சவாலாகவும் அமைந்திருந்தது. இது சம்பந்தமாக பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் அமைப்புக்கள் பல்வேறுபட்ட கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தன.

அவர்கள் அனைவருக்கும் இன்று முறையான பதில்கள் கிடைத்துள்ளன.

35 வயதுக்கு மேற்பட்ட பட்டதாரிகள் நிரந்தர சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட மாட்டார்கள் எனவும் அவர்கள் அரசியல் இலாப நோக்கிலான செயற்பாடுகளுக்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள் என்றவாறும் போலிப் பிரசாரங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு இராணுவப் பயிற்சிகள் வழங்கப்படுவதாகவும் குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் இரண்டுவார கால தலைமைத்துவப் பயிற்சி ஒன்றே அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

அது இராணுவப் பயிற்சி அல்ல.

அரச சேவையில் இணைந்து கொள்ளும் அவர்கள் பொது மக்களுடன் செயலாற்றும் விதங்கள் குறித்த மனப்பாங்கை அவர்கள் பெறவேண்டியுள்ளது.

தரமான அரசசேவை ஒன்றுக்கு அத்தகைய பயிற்சிகள் மிகுந்த அவசியமாகின்றன. அதை இராணுவப் பயிற்சியொன்றுக்குச் சமப்படுத்துவது காழ்ப்புணர்ச்சியை ஏற்பத்தி விடும் என்று அவர் மேலும் கூறினார். (ம-22)

## மே 10 இற்கு முன்னர் மீள் திருத்தத்துக்கு விண்ணப்பிக்கலாம்

வடமராட்சி, ஏப்.8

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த. சாதாரணதரப் பரீட்சை பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அந்தப் பரீட்சைக்கான விடைத்தாள்களை மீள்திருத்தம் மேற்கொள்ள எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் மூலம் இந்தப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் அதிபர் மூலமும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் மீள் திருத்தத்துக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## இடமாற்றங்களை நடைமுறைப்படுத்தாத சபைகளின் விவரங்கள் திரட்டத் திட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.8

வட மாகாணத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டும் இதுவரை இடமாற்றத்தை நடைமுறைப்படுத்தாத சபைகளின் விவரங்களை உள்ளூராட்சி ஆணையாளர் திரட்டவுள்ளார்.

வடமாகாணத்தில் பிரதேச சபை, நகரசபை, மாநகரசபை, பிராந்திய உதவி உள்ளூராட்சி அலுவலகம், அமைச்சுகள் என்று பல அலுவலகங்களுக்கு கடந்த மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் இடமாற்றப் பட்டியல் வழங்கப்பட்டு வந்தது.

இவற்றில் 40 வீதமான இடமாற்றங்கள் இடம்பெற்றும் 60 வீதமான இடமாற்றங்கள் இடம்பெறாமலும் உள்ளன.

தற்போது உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் சிலர் தமக்குப் பிடித்தமான அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்காமலும் அதே போல் செயலாளர்கள் தமக்கு பிடித்தமான அலுவலர்களுக்கு இடமாற்றம் வழங்காமலும் முரண்படுவோருக்கு இடமாற்றங்களை வழங்கியும் உள்ளனர்.

இதனால் கடந்த 3 வருடங்களுக்குப் பின்னர் வழங்கப்பட்ட இட மாற்றப் பட்டியலின் பிரகாரம் இடமாற்றம் பெற்றுச் செல்லாத அனைத்து அலுவலர்களுக்கும் ஏப்ரல் முதல் வேதனம் இடைநிறுத்துவது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

எதிர்காலத்தில் ஏழு வருடங்களுக்கு ஒரு முறை ஒரு அலுவலருக்கு இடமாற்றம் வழங்கவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-41)

## சிறுவர் சேமிப்புக் கணக்கு வைத்திருந்த 5 சிறுவருக்கு பரிசில்

தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தில் மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளையில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

வடமராட்சி,ஏப். 8

பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையில் சிசு உதான மற்றும் இசுறு உதான சிறுவர் சேமிப்புக் கணக்குகளில் கணக்கு வைத்திருந்த 5 சிறுவர்கள் பரிசில்களைப் பெற்றுள்ளனர்.

சிசு உதான கணக்கில் கணக்கு வைத்திருந்த அல்வாயைச் சேர்ந்த ஜே.எப்.ஜஸ்ரின்சேகர், புலோலி மத்தியைச் சேர்ந்த சி.சாம்பவி, பருத்தித்துறை வி.எம்.றோட்டைச் சேர்ந்த யாதவனானந்தன் பிரணவன் ஆகிய மூவரும்

இசுறு உதான கணக்கில் கணக்கு வைத்திருந்த இன்பருட்டியைச் சேர்ந்த இரா.தர்ஷா , இணுவில் கிழக்கைச் சேர்ந்த சி.சிவவரகி ஆகிய இருவரும் இந்தப் பரிசில்களைப் பெறுகின்றனர்.

இவர்களுக்கு எதிர்வரும் தமிழ், சிங்களப் புத்தாண்டு தினத்தில் மக்கள் வங்கி பருத்தித்துறைக் கிளையில் வைத்து பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தம் தெரிவித்தார். (ம-8)

## அராலி மத்தி வட்டுக்கோட்டையில் முன்பள்ளிக்கு கட்டடம் அமைக்க நிதி

### ஒதுக்கீடு செய்யுமாறு அரச சார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.8

அராலி மத்தி வட்டுக்கோட்டையில் உள்ள முன்பள்ளி பாடசாலை ஒன்றுக்கு கட்டடமும் சிறுவர் பூங்காவும் அமைத்துக் கொடுக்க அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

இதன் மூலம் அராலி மத்தியில் உள்ள சிறுவர்களின் எதிர்காலம் நல்ல நிலையை எட்டும்.

எனவே அரச சார்பற்ற நிறுவனங்கள் முழுமையான நிதிப் பங்களிப்பை வழங்கி உதவ வேண்டும்.

இவ்வாறு வலி. மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் கேட்டுள்ளார்.

அராலி மத்தி உலோல சிட்டிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் தலைவர் க.திருஞானசம்பந்தன், செயலாளர் சி.கையாலயபிள்ளை, பொருளாளர் பு.நாகேஸ்வரி ஆகியோர் கையொப்பம் இட்டு குறித்த முன்பள்ளி பாடசாலைக்கு இரு மாடிக் கட்டடத்தையும் சிறுவர் பூங்காவையும் அமைப்பதற்கு மூன்று பரப்புக் காணியை நிரந்தரமாக வழங்கியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுப்பதற்கு எமது பிரதேச சபை பூரண ஆதரவை வழங்கவேண்டும்.

எனவே, வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு உச்சப் பயனை அடையும் இலக்கின் அடிப்படையில் குறித்த முன்பள்ளிக்கு நவீன கட்டடம் அமைத்து கொடுக்கும் கடப்பாடு சகலருக்கும் உண்டு.

எனவே இதற்குரிய நிதியை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்க முன்வரவேண்டும்.- என்று தெரிவித்தார். (ம-41)

# வைகோ விடாப்பிடி

## இனப்படுகொலை தொடர்பாக பன்னாட்டு விசாரணை தேவை



பெங்களூர், ஏப்.8

இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை தொடர்பில் சுதந்திரமான பன்னாட்டு விசாரணை அவசியம் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வை.கோபாலசாமி.

நேற்றுமுன்தினம் பெங்களூரில் நடைபெற்ற ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான தமிழ் அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே வைகோ இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

''இலங்கையில் நடைபெற்ற இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர் குற்றங்கள் குறித்து சுதந்திரமான பன்னாட்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றோம். தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தமிழீழமே தீர்வு. தமிழீழம் தொடர்பாக பொதுவாக்கெடுப்பு ஒன்றை நடத்த வேண்டும். அத்துடன் விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடையை நீக்குவதுடன், இலங்கை அரசு மீது பொருளாதார தடை விதிக்க வேண்டும் என்பதையும் நாம் தீவிரமாக வலியுறுத்துகின்றோம்'' - என்று தெரிவித்தார் வை.கோ. (ற)



கடந்த வெள்ளிக்கிழமை மும்பையில் 7 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 72 ஆக அதிகரித்துள்ளது. இடிபாடுகளின் மத்தியில் இன்னமும் மக்கள் காயங்களுடன் மீட்கப்பட்டு வருகின்றனர். விபத்து நடந்து 24 மணி நேரத்தின் பின்னர் 10 மாதக் குழந்தை ஒன்றை மீட்புப் பணியாளர்கள் உயிருடன் மீட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

### கூடங்குளத்தில் அமைதியை ஏற்படுத்த முயற்சியுங்கள்

**-கருணாநிதி**

சென்னை, ஏப்.8

கூடங்குளத்தில் அமைதியை ஏற்படுத்த தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும்- இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி.

இதுகுறித்து கருணாநிதி நேற்றுமுன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

''கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டம் நீடித்து வரும் நிலையில் பேச்சுக்கள் அங்கு அமைதியான சூழலை உருவாக்க வேண்டும்.

மத்திய அரசும், மாநில அரசும் போராட்டக் குழுவினரின் முக்கிய பிரதிநிதிகளை அழைத்துப் பேச வேண்டும். ஆபத்து எதுவும் ஏற்படாமல் அரசினால் எடுக்கப்பட வேண்டிய அத்தனை நடவடிக்கைகளையும் செய்து கொடுப்போம் என்று அவர்களுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். உத்தரவாதம் அளிப்பதோடு அவற்றை செய்து முடிக்கவும் ஆவன செய்ய வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பில் இருப்போர் போராட்டக்காரர்களையும், பொதுமக்களையும் அடக்கி ஒடுக்க எண்ணாமல், இந்த முக்கியமான நேரத்தில் அவர்களின் பிரதிநிதிகளை அழைத்து வைத்து பேச்சுகளை நடாத்தி அமைதியான சூழ்நிலை அங்கே உருவாக வழிசமைக்க வேண்டும்.- என்றுள்ளது. (ற)

### ஊழலால் ஜனநாயகத்துக்கு பெரும் ஆபத்து

**-பிரணாப் முகர்ஜி**



புதுடில்லி, ஏப்.8

நாட்டில் ஜனநாயகத்தையும், அனைத்து மக்களிடையேயும் சமத்துவத்தையும் ஏற்படுத்தப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றுக்கெல்லாம் ஊழலே பெரும் அச்சுறுத்தலாக உள்ளது- இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியக் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி.

மத்திய புலனாய்வு அமைப்பின் (சி.பி.ஐ.) பொன் விழாவை முன்னிட்டு புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

''சமூகத்தின் பல குறைபாடுகளுக்கு நல்ல நிர்வாகம் இல்லாதமையே முக்கிய காரணம். அதனால்தான் மக்களின் பாதுகாப்பு, அவர்களின் சமூக மற்றும் பொருளாதார உரிமைகள் பறிபோகின்றன.

பெரும் மாற்றத்தின் விளிம்பில் இருக்கும் இந்தியா பல சவால்களை எதிர்நோக்கியிருக்கிறது. அவற்றை உறுதியுடனும் நம்பிக்கையுடனும் சந்திக்க வேண்டும். திறமையான நிர்வாகம் அதன் அடிப்படையாகும்.

திறமையாகச் செயல்படும் காவல் துறையும் புலனாய்வுத் துறையும் எந்த ஒரு குற்றத்துக்கும் தண்டனை பெற்றுத் தருவதை உறுதி செய்ய முடியும். வழக்குத் தொடுப்பதுடன், அதை விரைவாக நடத்தி குற்றவாளிகளுக்கு தாமதமின்றி தண்டனை கிடைக்கச் செய்ய வேண்டும். அது குற்றங்களைக் குறைப்பதன் மூலமே நாட்டில் மக்களிடையே நம்பிக்கையை அதிகரிக்க முடியும்-என்று தெரிவித்தார்.(ற)

### இந்தியாவை மாற்றவே உருவெடுத்தது பா.ஜ.க.

**குஜராத் முதல்வர் நரேந்திர மோடி**



அகமதாபாத், ஏப்.8

இந்தியாவையும், இந்தியர்களின் தலையெழுத்தையும் மாற்றுவதற்காகவே உருவெடுத்துள்ளது பா.ஜ.கட்சி. காங்கிரஸ் கட்சிக்கு இந்தியா ஒரு தேன் கூடு போன்றது. ஆனால் எங்களுக்கு தாய் போன்றது.- இவ்வாறு தெரிவித்துள்ளார் குஜராத் முதல்வர் நரேந்திர மோடி.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்-

''இந்த நாட்டில் உள்ள கோடிக்கணக்கான மக்களின் தலையெழுத்தை மாற்றவே பா.ஜ.க பிறந்தது. காங்கிரஸுக்கு இந்தியா ஒரு தேன் கூடு போன்றது. ஆனால் எங்களுக்குத் தாய் போன்றது. காங்கிரஸ் திருந்தும் என்று காத்திருக்க வேண்டாம். அது ஒரு போதும் நடக்காது.

பா.ஜ.கவுக்கும், காங்கிரஸுக்கும் இடையே பெரிய வித்தியாசம் உள்ளது. இரண்டு கட்சிகளின் சிந்தனைகளும் வேறுபட்டது. நாட்டில் தண்ணீர் பிரச்சினை உள்ளது என்பது கூட காங்கிரஸ் அமைச்சர்களுக்கு தெரிய வில்லை. இவ்வாறானவர்களால் இந்த நாட்டுக்கு எந்த உபயோகமும் இல்லை.

இந்தியா எங்களுக்கு தாய் போன்றது. தாயின் வலியை எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது. சி.பி.ஐயைப் பார்த்து பா.ஜ.க. அஞ்சவில்லை. காங்கிரஸ் சி.பி.ஐ.யைப் பயன்படுத்தி பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் தொண்டர்களை கொடுமைப்படுத்துகிறது.

ஆனால் பா.ஜ.க. தொண்டர்களை மிரட்டும் காங்கிரஸின் முயற்சி தோல்வியுறும்''- என்று தெரிவித்தார். (ற)

# கருப்புப் பணம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பம்

## நிதி அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

புதுடில்லி, ஏப்.8

வெளிநாடுகளில் கறுப்புப் பணம் பதுக்கி வைத்துள்ளவர்கள் என்று சர்வதேச அமைப்பால் வெளியிட்ட அறிக்கையில் இடம்பெற்றுள்ள இந்தியர்களுக்கு எதிரான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் கூறியுள்ளார்.

இந்தியா உட்பட நாடுகளைச் சேர்ந்த 2.5 இலட்சம் தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் கணக்கில் காட்டப்படாத பணத்தை வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கி வைத்திருப்பதாக சர்வதேச ஊடக அமைப்பு அறிக்கை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையில் இடம்பெற்றுள்ள இந்தியர்கள் பற்றிய விசாரணைகளே ஆரம்பிக்கப்பட்டுள்ளனவென்று ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

கணக்கில் காட்டப்படாத பணத்தை பதுக்குவதற்காக வெளிநாடுகளில் நிறுவனங்களை அமைத்து அந்தப் பணம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தியா உட்பட சுமார் 100 நாடுகளைச் சேர்ந்த தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டியல் தம்மிடம் இருப்பதாக புலனாய்வு பத்திரிகையாளர் சர்வதேச கூட்டமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ற)

# கைதான தமிழக மீனவர்கள் விரைவில் விடுவிக்கப்படுவர்

## மத்திய அமைச்சர் நாராயணசாமி உறுதி

சென்னை, ஏப்.8

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 26 காரைக்கால் மீனவர்களும் விரைவில் விடுவிக்கப்படுவார்கள் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி உறுதியளித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்-

காரைக்கால் மீனவர்கள் 26 பேர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட சம்பவம் எனது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அதையடுத்து நான் இலங்கையில் உள்ள இந்தியத் தூதரைத் தொடர்புகொண்ட போது மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதை அவர் உறுதிப்படுத்தினார்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்ப்பாணம் பகுதியில் உள்ள நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். உடனடியாக காரைக்கால் மீனவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இந்திய தூதரிடம் கேட்டுக்கொண்டேன். அவர்துணை தூதர் மோகனை நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்க இருப்பதாக உறுதி அளித்துள்ளார். - என்று தெரிவித்தார்.

இதேவேளை, 15 நாள்களுக்கு முன்னர் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட கன்னியாகுமரியைச் சேர்ந்த மீனவர்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

### குர்ஷித்துடன் கலந்துரையாடினார் இத்தாலி வெளிவிவகார அமைச்சர்

புதுடில்லி, ஏப்.8

இரு இந்திய மீனவர்கள் மீது இத்தாலிக் கடற்படை வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை தொடர்பான வழக்கு விசாரணைகள் நடைபெற்று வரும் நிலையில் அதுகுறித்து இத்தாலி வெளியுறவுத்துறை துணை அமைச்சர் மிஸ்துரா இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் தொலைபேசியில் கலந்துரையாடியுள்ளார்.

தற்போது புதுடில்லி வந்துள்ள இத்தாலி வெளியுறவுத் துறை துணை அமைச்சர் மிஸ்துரா, அங்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்துடன் கலந்துரையாடியுள்ளார்.

வழக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து கேட்டறிந்துகொண்ட மிஸ்துரா, தமது நாட்டு வீரர்கள் மீது கொலை வழக்கு பதிவு செய்து இருப்பது குறித்துக் கவலை வெளியிட்டார் என்று கூறப்படுகிறது. (ற)

# கொரியப் பிரச்சினையில் சீனத் தலையீடு அவசியம்

## வலியுறுத்துகின்றது அமெரிக்கா

நியூயோர்க், ஏப்.8

வடகொரியா பிரச்சினைகளில் சீனா தலையிட்டு அங்கு நிலவும் பதற்றத்தைத் தணிக்க முயற்சிக்க வேண்டும். இல்லையெனில் கொரிய தீபகற்பத்தில் தனது இராணுவபலத்தை அதிகரிக்கவேண்டிய நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பப்படும்- என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

கொரிய தீபகற்பத்தில் தாம் நிர்மாணித்துவரும் ஏவுகணை எதிர்ப்பு அமைப்புகள் மற்றும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள போர்க் கப்பல்கள் குறித்து சீனாவுக்கு விளக்கமளித்துள்ள அமெரிக்கா, கொரியப் பிரச்சினைகளில் தலையிட்டு அமைதியை ஏற்படுத்த சீனா முயற்சிக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, எப்போதும் போர் மூளக்கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுவதால் வடகொரியாவில் உள்ள அனைத்து நாட்டுத் தூதரக அதிகாரிகளையும் வெளியேறுமாறும் அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ள்து. போர் நடைபெறும் பட்சத்தில் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு பாதுகாப்பு அளிப்பது சாத்தியமற்றசெயல்என்றும்அமெரிக்கா எச்சரித்துள்ளது.

எனினும் ஐ.நா நிவாரணக் குழுவினர் வடகொரியாவிலேயே தொடர்ந்து தங்கியிருக்க முடிவு செய்துள்ளனர்.

ஐ.நாவைச் சேர்ந்த 57 பணியாளர்கள் அங்கு பணிபுரிந்து வருகின்றனர். போர்ச் சூழல் நிலவினாலும் அங்கேயே தங்கி மேம்பாடு மற்றும் மனிதநேய பணிகளில் ஈடுபட உள்ளதாக அதன் செய்தித் தொடர்பாளர் மார்ட்டின் நெசிர்கி தெரிவித்துள்ளார். (ற)



# 'நான் சிங்கிள் மதர்' சிக்கினார் மிச்சல்



நியூயோர்க், ஏப்.8

தான் ஒரு 'சிங்கிள் மதர்' என்று கூறிச் சிக்கலில் மாட்டியுள்ளார் மிக்சல் ஒபாமா.

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கு நேர்காணல் வழங்கும்போதே மிச்சல் இவ்வாறு வாய் தடுமாறிக் கூறிவிட்டார். அதையடுத்து அமெரிக்காவில் இந்தக் கருத்துக்கு கடும் எதிர்ப்புக் கிள்ம்பியுள்ளது.

அப்பேட்டியில் மிச்சல் கூறுகையில்,

''நான் ஒரு பிசியான, சிங்கிள் மதராக இருக்கும்போது... மன்னிக்கவும், நான் சிங்கிள் என்று சொல்லியிருக்கக் கூடாது. பிசியான தாயாக இருக்கும்போது, அதிலும் ஜனாதிபதி மனைவியாக இருக்கும் பட்சத்தில், தனிமையான ஒரு உணர்வு ஏற்படுவது உண்மைதான்.

ஆனால் அந்த தனிமை உணர்வை எனது கணவர் போக்குகிறார். ஒரு தந்தையாக அவர் கை கொடுக்கிறார்'' என்று தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் ஒபாமாவின் மனைவி மிச்சல் வாய் தவறிப் பேசிய கருத்துக்கு கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

இதேபோன்று ஜனாதிபதி பராக் ஒபாமா, கலிபோர்னியா அட்டர்னி ஜெனரல் கமலா ஹாரிஸ் அழகாக இருப்பதாக பாராட்டிப் பேசி சர்ச்சையில் சிக்கினார். இது தொடர்பாக கமலாவிடம் அவர் போனில் தொடர்பு கொண்டு வருத்தமும், மன்னிப்பும் கேட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.(ற)

# நம்பிக்கையின் சின்னம் மலாலா

## பான் கீ–மூன் பாராட்டு



நியூயோர்க், ஏப்.8

பாகிஸ்தானைச் சேர்ந்த கல்வி உரிமைப் போராளி மலாலா யூசுப்சாய், நம்பிக்கையின் சின்னமாக விளங்குகிறார் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூன் பாராட்டியுள்ளார்.

பாகிஸ்தான் பள்ளியில் படித்து வந்த மாணவி மலாலா, பெண் குழந்தைகள் கல்வி கற்பதன் அவசியம் குறித்தும், அதற்குத் தலிபான்கள் தடை விதிப்பதை எதிர்த்தும் கடந்த ஆண்டு பிரசாரத்தில் ஈடுபட்டார். இதனால் ஆத்திரமடைந்த தலிபான்கள் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தினர். அதில் படுகாயமடைந்த மலாலா தற்போது குணமடைந்துபிரிட்டனில் தனது கல்வியைத் தொடர்ந்து வருகின்றார்.

இந்தநிலையில் மலாலாவும், ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூனும் கடந்த வெள்ளிக்கிழமை வீடியோ தொலைபேசி மூலம் உரையாடினர்.

அப்போது பான் கீ- மூன் கருத்துக் தெரிவிக்கையில்,

''நீ நம்பிக்கையின் சின்னமாகவும், ஐ.நா. சபையின் மகளாகவும் விளங்குகிறாய். ஐ.நா. சபை எப்போதும் உனக்கும், உன்னைப் போன்றவர்களுக்கும் ஆதரவாக இருக்கும். ஒரு பெண்ணுக்கு நாம் கல்வியை அளிக்கும்போது, ஒரு குடும்பத்துக்கும், ஒரு சமூகத்துக்கும், ஒரு நாட்டுக்கும் நாம் கல்வியை அளிக்கின்றோம். உனது கருத்துகளால் என்னை ஈர்த்துள்ளாய். உன்னைச் சந்திக்க ஆர்வமாகக் காத்திருக்கிறேன்'' என்று குறிப்பிட்டார்.

அவருக்குப் பதிலளித்த மலாலா ''நான் ஒரு தலைவியாகி, ஒட்டுமொத்த உலகுக்கும் சேவை புரிய விரும்புகிறேன். சிறுமிகளின் உரிமைகளுக்காகவும், அனைத்து மக்களின் உரிமைகளுக்காகவும் உழைக்க என்னை நானே ஈடுபடுத்திக் கொண்டுள்ளேன்''-என்று தெரிவித்துள்ளார். (ற)

# பிரசாரக் கூட்டத்தில் குண்டுவெடிப்பு 20 பேர் சிதறிச் சாவு; பலர் காயம்

பாக்தாத், ஏப்.8

ஈராக்கில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 20 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

ஈராக்கில் எதிர்வரும் 20ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதையடுத்து அங்கு பிரசாரப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. ஈராக் தலைநகர் பாக்தாத்தில் இருந்து 60 கி.மீற்றர் தூரத்தில் உள்ள பாக்குபாவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்திலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பிரசாரம் நடைபெற்ற இடத்துக்கு வந்த தற்கொலைக் குண்டுதாரி முதலில் கையெறி குண்டை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளார். பின்னர் தனது உடலில் கட்டப்பட்டிருந்த வெடி குண்டையும் வெடிக்க வைத்துள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் உரிமை கோரவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)



எகிப்தில் அரசுக்கு எதிராகக் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களின் முடிவில் பெரும்பாலும் வன்முறைச் சம்பவங்களே பதிவாகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது வன்முறை வெடித்தது. பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசி ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைத்தனர்.

## முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீதான

# தேசத்துரோக வழக்கு வருகிறது விசாரணைக்கு

லாகூர், ஏப்.8

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பரவேஸ் முஷாரப் மீதான தேசத்துரோக வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அந்நாட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

அடுத்த மாதம் தேர்தலில் போட்டியிடுவதற்காக முஷாரப் பாகிஸ்தான் திரும்பியுள்ள நிலையில் நீதிமன்றத்தால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராவல்பிண்டி உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்க முன்னாள் தலைவர் தவ்பீக் ஆசிப், முஷாரப் மீது தேசதுரோக வழக்கை தாக்கல் செய்துள்ளார்

இந்த வழக்கை உச்ச நீதிமன்றம்விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. ஆசிப் தாக்கல் செய்த மனுவுடன் மேலும் 2 மனுக்கள் சேர்த்து விசாரிக்கப்படுகிறது. அடுத்த வாரத்தில் இதன் மீதான விசாரணை தொடங்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, முஷாரப் தற்போது கராச்சி, இஸ்லாமாபாத், சித்ரல், கசூர் ஆகிய 4 தொகுதிகளில் போட்டியிட வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இவற்றில் பஞ்சாப் மாகாணம் கசூர் தொகுதி தேர்தல் அதிகாரி முஷாரப்பின் வேட்பு மனுவை நிராகரித்துள்ளார். தேசிய அடையாள அட்டையில் உள்ள முஷாரப்பின் கையெழுத்தும், வேட்பு மனுவில் உள்ள கையெழுத்தும் ஒத்துப்போகவில்லை என்று காரணம் கூறி மனு நிராகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற)

# படை வீரர்கள் 1,000 பேர் மாலியில் நிலைகொள்வர்

## பிரான்ஸ் அரசு அறிவிப்பு

பாரிஸ், ஏப்.8

ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள மாலியில், தனது படைகளைத் தொடர்ந்து நிறுத்தி வைக்க பிரான்ஸ் தீர்மானித்துள்ளது. அதன்படி 1000 படையினர் மாலியில் தொடர்ந்து நிலைகொள்வார்கள் என்று கூறப்படுகிறது.

மாலியில் 2012ஆம் ஆண்டு ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்கள் இன்னும் ஓயவில்லை. அரசைக் கவிழ்க்க இஸ்லாமியத் தீவிரவாதிகள் தொடர்ந்து முயற்சித்து வருகின்றனர். அரசுக்கு உதவி செய்ய பிரான்ஸ் படைகளை மாலிக்கு அனுப்பி வைத்துள்ளது. பிரான்ஸ் படைகளின் உதவியுடன் மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின் மூலம் தீவிரவாதிகள் ஒடுக்கப்பட்டனர். இருப்பினும் அவர்கள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். பிரான்ஸ் தனது துருப்புகளை இந்த மாத இறுதிக்குள் திரும்ப அழைக்க முடிவு செய்திருந்தது.



இருப்பினும் தற்போது 1000 துருப்புகளை நிரந்தரமாக மாலியில் நிறுத்த முடிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. (ற)

# மோடிக்கு விசா இல்லை

## முடிவில் மாற்றமில்லை – அமெ.

நியூயோர்க், ஏப்.8

குஜராத் முதல்வர் நரேந்திர மோடிக்கு விசா வழங்குவதில்லை என்ற முடிவில் எந்த மாற்றமும் இல்லை என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, குஜராத் முதல்வர் நரேந்திர மோடியை அவரது இல்லத்தில் கடந்த வாரம் சந்தித்தது. அப்போது தொழில், வர்த்தகம் தொடர்பான பல்வேறு விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டன. அதையடுத்து அமெரிக்காவுக்கு வருமாறு மோடிக்கு அழைப்பு விடுத்தது அந்தக் குழு.

அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் அழைப்பு விடுத்துள்ளமையால் மோடிக்கு விசா தரப்படுமா என்ற கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் விக்டோரிய நுலாண்ட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

''கலாசாரம், தொழில், வர்த்தகம் உள்ளிட்ட விடயங்களில் இரண்டு நாடுகளுக்கும் இடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தவே அமெரிக்க குழு இந்தியா சென்றது.

அமெரிக்க குழு அழைப்பு விடுத்ததால் நரேந்திர மோடிக்கு உடனே விசா வழங்கப்படாது. அமெரிக்காவின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே யாருக்கும் விசா வழங்கப்படும். ஆனாலும் விசாவுக்காக மோடி விண்ணப்பித்தால் நாங்கள் அதை வரவேற்று நிச்சயம் பரிசீலிப்போம்.''- என்று அவர் கூறியுள்ளார்.(ற)

# சிரிய விமான தாக்குதலில் 15 பேர் சாவு

பெய்ரூட், ஏப்.8

சிரியாவின் அலெப்போ நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வான் தாக்குதலில் 9 சிறுவர்கள், 3 பெண்கள் உட்பட 15 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதி பஷார் அல் அசாத்துக்கு ஆதரவான இராணுவத்தினர் இத்தாக்குதலை நடத்தியதாக சிரிய கிளர்ச்சிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

சிரியாவில் ஜனாதிபதி அசாத்துக்கு எதிராக கடந்த ஓராண்டுக்கு மேலாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் சுமார் 70 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

### சீரற்ற மின்விநியோகத்தால் மக்கள் பாதிப்பு

வவுனியா, ஏப்.8

வவுனியா கிராமப்புறங்களுக்கான மின்விநியோகம் கடந்த சில நாள்களாகச் சீராக இல்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த மாதத்தின் ஆரம்ப நாள்களில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுவதால் தமது இலத்திரனியல் உபகரணங்கள் பழுதடைவதுடன் அன்றாடக் கடமைகளும் பாதிக்கப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பில் வவுனியா மின்சார சபையினரிடம் அறிவித்தபோதும் மின்விநியோகம் சீராகக் கிடைக்கவில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை - முன் அறிவிப்பற்ற மின்தடை காரணமாகவும் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (ஐ-421)



கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியின் சுற்றாடல் முன்னோடிப் படையணியின் பதக்கம் வழங்கும் நிகழ்வு நேற்று கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.அருட்செல்வன், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பொறுப்பதிகாரி திருமதி அ.தமிழ்ச்செல்வி, கண்டாவளை கோட்டக் கல்விப் பணிப்பாளர் இராஜகுலசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்த நிகழ்வு கிளிநொச்சி வலயத்தின் முதல் பாடசாலையாக தெரிவு செய்யப்பட்டு நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. (க-6)

### பொதுக்கூட்டத்துக்கு அறிக்கை கோரல்

வவுனியா, ஏப்.8

வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் மே மாதம் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது தொடர்பான பிரேரணையை பொதுச்சபை உறுப்பினர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மன்றத்துக்கு அனுப்பிவைக்குமாறு அதன் செயலர் க.தர்மதேவன் கேட்டுள்ளார்.

குறித்த பொதுக்கூட்டத்தில் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படவிருப்பதால் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொண்டு தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-402)

## திருமண மண்டபம்

வவுனியா, ஏப்.8

வவுனியா இறம்பைக்குளம் நாகபூஷணி கருமாரி அம்பாள் ஆலயத்தில் புதிதாகத் திருமண மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

மண்டபத்தின் கட்டடப் பணிகள் துரித கதியில் இடம்பெற்றுவரும் நிலையில் வெகுவிரைவில் திறந்து வைக்கப்படும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

பல இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இந்த மண்டபம் அழகுத் தோற்றத்துடன் காட்சியளிக்கவுள்ளது. (ஐ-421)

## வவுனியாவின் தூரக் கிராமங்களுக்கு

# நடமாடும் மருத்துவ சேவையை மீள வழங்க மக்கள் கோரிக்கை

வவுனியா, ஏப்.8

வவுனியா மாவட்டத்தின் தூரக் கிராமங்களுக்கு நடமாடும் சுகாதார சேவையை வழங்குமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஏற்கனவே நடமாடும் சேவைகள் மூலம் தாம் அதிக பயன்பெற்றதாகவும் தற்போது இந்தச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதால் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக சேமமடு, அரசன்குளம், குஞ்சுக்குளம், விளாத்திக்குளம், கிடாச்சூரி, பாலமோட்டை, கூமாங்குளம் உள்ளிட்ட தூரக் கிராம மக்களே தமக்கு நடமாடும் சுகாதார சேவையை மீள வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தப் பிரதேசங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களும் சீராக இயங்காத நிலையில் அவசர மருத்துவ தேவை முதற்கொண்டு எல்லாவற்றுக்கும் வவுனியா பொது மருத்துவமனைக்கே செல்ல வேண்டியுள்ளதாகவும், இதனால் தாம் பல்வேறு இடர்களையும், ஆபத்துக்களையும் எதிர்கொள்வதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாவட்ட வைத்திய சாலையில் நிலவும் ஆளணி வளப் பற்றாக்குறையே இந்த நடமாடும் சேவை நிறுத்தப்படுவதற்கு காரணம் என வைத்தியசாலைத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைச் சேர்ந்த வைத்திய அதிகாரி டாக்டர் எம்.மகேந்திரனிடம் கேட்ட போது;

தற்போது கடமையாற்றி வரும் பெண் மருத்துவர் ஒருவர் பிரசவ விடுமுறையில் சென்றுவிட்டார். ஆளணிப் பற்றாக்குறையே மக்களுக்கு சேவை வழங்குவதற்கு தடையாக உள்ளது. எமக்கு போதிய ஆளணி வளம் கிடைக்கப்பெற்றதும் மக்களுக்கான சேவை தொடரும் - என்றார். (ஐ-402)

புலம்பெயர்ந்து மீளத்திரும்பாத நிலையில்

## ஆனைவிழுந்தான் கிராமத்தின் 50 குடும்பங்கள் இந்தியாவில்

அக்கராயன், ஏப்.8

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்தில் இருந்து போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியா சென்ற 50 குடும்பங்கள் இதுவரை மீளத்திரும்பவில்லை என புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

1983 ஆம் ஆண்டு தென்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தை அடுத்து அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு தொகுதியினர் ஆனைவிழுந்தான் கிராமத்தில் குடியேறினர்.

இவர்களில் 50 வரையான குடும்பங்கள் பின்னர் ஏற்பட்ட போர் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியா சென்றனர்.

இவர்கள் இதுவரை மீளத் திரும்பாததால் இவர்களது காணிகள் வெற்றுக் காணிகளாகக் காணப்படுகின்றன.

அந்தக் காணிகள் பராமரிக்கப்படாது காடு வளர்ந்து காணப்படுவதால் அயல் காணிகளில் குடியிருப்பவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக வீட்டுத்தோட்டம், கோழி வளர்ப்பு முதலான முயற்சிகளை மேற்கொள்ளும்போது பற்றைக் காட்டுக்குள் இருந்து வரும் விலங்குகள் அவற்றை நாசம் செய்வதாக மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

இந்தக் காணிகளைப் பராமரிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரியுள்ளனர். (ஐ-18)

## வவுனியாவில் 7,500 பயனாளிகளுக்கு குறைந்த வட்டியுடன் கடனுதவி

### சி.க.கூ.சங்கம் வழங்கியது

வவுனியா, ஏப். 8

குறைந்த வட்டியுடன் கூடிய கடனாக வவுனியா மாவட்டத்தில் 7,500 பயனாளிகளுக்கு 85 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாக வவுனியா சிக்கன கடன் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் நா.சேனாதிராஜா தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா வடக்கு பிரதேசத்தில் போரால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த குடும்பங்களுக்கு, வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான சுடன் திட்டம் ஒன்றையும் உருவாக்கியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் விவசாயம், மேட்டுநிலப் பயிர்ச்செய்கை, கால்நடை வளர்ப்பு, சிறு வியாபாரம், சிறுகைத்தொழில் போன்ற முயற்சியாளர்களில் சுமார் 100 பேருக்கு தலா 35,000 ரூபா வீதம் குறைந்த வட்டியுடனான கடன் கடந்த வருடம் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

**இந்த வருடம் 40 பேருக்கு 14 லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.**

இந்தக் கடனை சிறந்த முறையில் பயன்படுத்தி மீளச் செலுத்தும் பயனாளிகளுக்கு மீண்டும் 5,000 ரூபா அதிகரித்து 40,000 ரூபாவாக கடன் வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில், இதன் முதற்கட்டமாக இந்த வருடம் 40 பேருக்கு 14 லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலும் 60 பேருக்கு 21 இலட்சம் ரூபா கடனை விரைவில் வழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார். (ஐ)

#### தேசிய மட்ட ஆங்கிலப் போட்டியில் வவுனியா மாணவர்கள் வெற்றி

வவுனியா, ஏப்.8

வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் தேசிய மட்ட ஆங்கில மொழித்தினப் போட்டியில் முதலிடங்களைப் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

உறுப்பெழுத்தில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தரம்-12 மாணவி அ.சிவசுந்தரி, இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை தரம்-11 மாணவியும் முதலாமிடத்தைப் பெற்றனர்.

சொல்வதெழுதுதல் போட்டியில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம்-11 மாணவி சி.சௌமியா முதலாமிடம் பெற்றார்.

மேடைப்பேச்சுப் போட்டியில் வவுனியா தமிழ் மகா வித்தியாலய தரம்-13 மாணவன் பு.ஜெனார்த்தனன் முதலாமிடம் பெற்றார்.

எழுத்தாக்கல் போட்டியில் இறம்பைக்குளம் மகளிர் பாடசாலை தரம்-7 மாணவி சிம்மயி மூன்றாமிடத்தையும், சொல்வதெழுதுதல் போட்டியில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் -12 மாணவன் தி.ஜனார்த்தன் இரண்டாமிடத்தையும் பெற்றனர். (ஐ-402)

## ஆனைவிழுந்தான் மக்களுக்கு ஓர் ஏக்கர் வயற்காணி

அக்கராயன், ஏப்.8

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் கிராமத்திலுள்ள குடும்பங்களுக்கு அந்தக் குளத்தின் கீழ் ஓர் ஏக்கர் வீதம் வயற்காணி வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனைவிழுந்தான் குளம் புனரமைக்கப்பட்டு அதன் கீழுள்ள 300 ஏக்கர் வயற்காணியை இந்தக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் ஆனைவிழுந்தானில் இடம்பெற்றது. இதன்போது அந்தக் கிராம மக்கள் தமக்கு வயற்காணி வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

கரைச்சிப் பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேள், நீர்ப்பாசனப் பொறியியலாளர் சி.விகிர்தன் உட்படப் பலர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ஐ-18)

## உயர்தரப் பொருளியல் செயலமர்வு



கிளிநொச்சி, ஏப். 8

சீ.ஐ.எம்.ஏ. நிறுவன அனுசரணையுடன் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த 2 ஆம் திகதி உயர்தர மாணவர்களுக்கான பொருளியல் பாட செயலமர்வு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

வடமாகாண வர்த்தக பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளர்களாக கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பொருளியல் துறை விரிவுரையாளர்களான கலாநிதி எஸ்.கணேசமூர்த்தி, கலாநிதி ஆர்.ரவீந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களைச் சேர்ந்த நானூறுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். (ஐ-405)

# சந்திரிகா- ரணில் இரகசிய சந்திப்பு?

## அரசியல் விடயங்கள் குறித்து ஆராய்வு



கொழும்பு,ஏப்.8

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் இரகசிய சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த இரகசிய சந்திப்பு கொழும்பு, 7 இல் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் இல்லத்திலேயே இடம்பெற்றது. இந்தச் சந்திப்பில் சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்கும் அதிகமாக இருவரும் பல்வேறு அரசியல் விடயங்கள் தொடர்பாக கலந்தாலோசித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டில் நடைபெறக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையிலேயே அவர்களுக்கிடையில் இரகசிய சந்திப்பு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

தற்போது ஆட்சியிலிருக்கும் அரசை தோல்வியடையச் செய்து ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான நோக்கிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இரகசிய சந்திப்பில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் எவ்வாறு வெற்றியீட்டுவது? அதற்கான திட்டங்களை எவ்வாறு முன்னெடுத்துச் செல்வது? போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரை சந்தித்து இரகசிய பேச்சு மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



இலங்கையின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த கதிர்காமத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரை சமாதான யாத்திரை மேற்கொண்ட திபெத் நாட்டைச் சேர்ந்த பௌத்த துறவியான கயல்வாங் டுர்பக்கிற்கு புத்த பெருமானின் புனித சின்னமொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கையளித்தார். அருகில் பிரதமர் தி.மு. ஜயரத்ன ,அமைச்சர்களான டலஸ் அழகப்பெரும, பந்துல குணவர்தன, விமல் வீரவன்ச உட்படப் பலர் காணப்படுகின்றனர்.

# இந்தியப் படையால் தமிழருக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து அரசு கணக்கெடுப்பு

## மேற்குலக நாடுகளின் வாயை மூட எடுக்கும் முயற்சி

கொழும்பு,ஏப்.8

இலங்கையில் இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களால் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களை பட்டியலிட்டு வெளியிடும் முயற்சியில் இலங்கை சனத் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் ஈடுபட உள்ளது.

நம்பகமான, சுதந்திரமான போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள அழுத்தம் கொடுக்கும் இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் வாயை அடைக்கும் முயற்சியே இது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய இந்தியப் படையினர் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள் பற்றிய விவரங்களை திரட்ட சனத் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் முன் ஆயத்தங்களில் ஈடுபட்டு வருகிறது.

முதல் கட்டமாக, இரண்டாவது ஜே.வி.பி கிளர்ச்சி இடம்பெற்ற காலப்பகுதியில் கொல்லப்பட்டவர்கள், காயமடைந்தவர்கள், சொத்து இழப்புகள் குறித்த கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பு அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்று சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தலைவர் சி.ஏ.குணவர்த்தன தெரிவித்தார்.

குறிப்பாக 1980 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கையில் இந்தியத் தலையீட்டுக்குப் பின்னர், கொல்லப்பட்டவர்களின் விவரங்களை வெளிப்படுத்துவது இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து நம்பகமான, சுதந்திரமான விசாரணைகளை நடத்த வேண்டும் என்று இந்திய வலியுறுத்தி ஆரம்பித்துள்ள நிலையில், இலங்கை இந்தக் கணக்கெடுப்பை மேற்கொள்ள முடிவு செய்துள்ளது.

இந்தியப் படையினரால் பெருமளவு தமிழர்கள் கொல்லப்பட்ட நிலையில், அதனை வைத்து இந்தியா தன் மீது கொடுக்கும் போர்க்குற்ற விசாரணை அழுத்தங்களை குறைக்க இலங்கை முற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)


# இரண்டாம் ஆண்டு நினைவினில்



மண்ணில்
20★ 10★ 1925

விண்ணில்
08 ★ 04★ 2011

அமரர் வைரமுத்து குழந்தைவேலு

அனைவரையும் விட்டுச் சென்று
எங்கே போனீர்கள் ஐயா ?
ஆண்டுகள் இரண்டு ஆனதுவோ!
எம் இதயத்து வேதனை தீரவில்லை!
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு.
(நயினாதீவு –2)
– குடும்பத்தினர்.
(35767) (6)


# ஜனாதிபதித் தேர்தலில் பொதுவான வேட்பாளர்

## எதிர்க்கட்சிகள் ஆர்வம்

கொழும்பு,ஏப்.8

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவான வேட்பாளர் ஒருவரை நிறுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வாறு பொதுவான வேட்பாளர் ஒருவரை நியமிப்பதில் பொது அமைப்புக்களும், எதிர்க்கட்சிகளும் சிவில் செயற்பாட்டாளர்களுமே ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

2014 ஆம் ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. ஆளும் கட்சிக்கு முன்னரே பிரசாரப் பணிகளை ஆரம்பிக்க எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

நாட்டுக்கு அழிவை ஏற்படுத்தியுள்ள அரசமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வேட்பாளர் ஒருவரை நியமிக்க பொதுவான வேட்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்று என்று மாதுலுவே சோபிததேரர் தெரிவித்தார். (ச)


# சேவைநலன் பாராட்டு



கடந்த 31 வருடகாலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய சேவையில் இணைந்து தாதியாகவும், பொறுப்புத் தாதிய உத்தியோகத்தராகவும், விடுதித் தாதிய சகோதரியாகவும் கடமையாற்றி 25.03.2013 அன்று தனது சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி ராகினி இராசேந்திரம் அவர்களை சீரும் சிறப்புமாகப் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச் சங்கம்,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
(30779) (6)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.08.1945

மறைவு
17.03.2011

மனோன்மணி நாகராசா

திதி– அமாவாசை வந்தபின் திரயோதசி

என் அருமை அம்மாவே!
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலா.

61/10, மில் லேன்,
பிரம்படி 2 ஆம் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(35717) (6.11)

குடும்பத்தினர்,
021 205 2306,
077 975 8011

☎0215671111
advt@uthayan.com

# 50ஆவது பிறந்த நாள் வாழ்த்து

மீசாலை மேற்கைச் (வாகையடி) சேர்ந்த

திருமதி பூபாலசிங்கம் லதாமதி

தனது 50ஆவது பிறந்த நாளை
தனது இல்லத்தில் கொண்டாடுகிறார்.
இவர் மேன்மேலும் பல்லாண்டு காலம்வாழ வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துபவர்கள்:

மகள்மார்: மதிவதனா-மீசாலை,
தயாநிதி -டென்மார்க்,
தபோதினி - சாவகச்சேரி

மகன்மார்: கிருபா - சுவிஸ்
கிசோகுமார்-மீசாலை

மருமகன்மார்: மதன் -மீசாலை
கிருபதாஸ்-டென்மார்க்,
சுரேஸ் -சாவகச்சேரி

மருமகள்மார்: கிருசாந்தி -சரசாலை
நிறஞ்சினி-மீசாலை

பேரப்பிள்ளைகள்:
சந்தோஸ் - மீசாலை, சாருஜன் -மீசாலை,
திவானுசா - சரசாலை,
தட்சயன்- மீசாலை, பிரணவி - மீசாலை
டெனுசியா - டென்மார்க், நிக்சொன் - டென்மார்க்,
டஸ்னி (சுவிதா) - டென்மார்க், ராசன் - டென்மார்க்,
சனோஜன் - டென்மார்க்.

கந்தையா-இந்திராணி குடும்பம் - கைதடிவடக்கு,
லோகன்-கவிதா - சுவிஸ்.

(C 8099) (10.6)

## தேயிலை லொறி கடத்தல்

பசறை, ஏப்.8

பசறையிலிருந்து கொழும்பு நோக்கிவந்த தேயிலை லொறி ஹப்புத்தளை, கஹகல்ல பிரதேசத்தில் வழி மறித்து கடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கஹகல்ல தோட்டப்பகுதியில் வாகனமொன்றில் வந்த சிலர், லொறியை வழிமறித்து சாரதியினையும் உதவியாளரையும் கட்டி வைத்து விட்டு, லொறியை பண்டாரவளை ஹீல்ஓய பிரதேசத்துக்குக் கடத்திச் சென்றுள்ளனர். குறித்த லொறிச் சாரதி, உதவியாளர் ஆகியோர் பிரதேச வாசிகளால் காப்பாற்றப் பட்டுள்ளனர் என்று ஹப்புத்தளைப் பொலிஸார் தெரிவித்தனர் . (ச)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 03.10.1933 உதிர்வு 09.03.2013

திருமதி சுப்பிரமணியம் நிர்மலாதேவி

கடந்த (09.03.2013) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி நிர்மலாதேவி சுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து உதவிகள் புரிந்தோருக்கும், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும், மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

இன்று (08.04.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கண்ணகை அம்மன் வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய். (35559)(6.11)

குடும்பத்தினர்.



இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



டேவிட் அன்ரனி
(முன்னாள் ஆசிரியர்)

தோற்றம் 24.05.1942
மறைவு 08.04.2011

ஈராண்டு ஓடி மறைந்தாலும் உம் நினைவு
என்றென்றும் எம் மனதில் நிறைந்திருக்கும்
காலங்கள் விடைபெறலாம் ஆனாலும்
கண்முன்னே நிழலாடும் உம் நினைவுகள்
ஒருபோதும் எம்மை விட்டு அகலாது

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

721, வைத்தியசாலை வீதி,
யாழ்ப்பாணம். (35753)(8.7)

சகோதரர்கள்.



மரண அறிவித்தல்

திருமதி அருளப்பு பிறக்சீடா (லில்லி)



சில்லாலை புனித சூசையப்பர் வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாக்வும் கொண்ட திருமதி அருளப்பு பிறக்சீடா 06.04.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்ப்பிள்ளை-திரேசம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற தம்பித்துரை அருளப்புவின் அன்பு மனைவியும் யூட்ஸ் வசந்தகுமாரின் அன்புத் தாயும், ஸ்ரெல்லா ஜீவநாயகியின் (யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) அருமை மாமியும், விஷாக்கா மிலேனியா, வர்ஷிக்கா மிலேனியா (மாணவிகள், வ/ இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மதுரநாயகம், காலஞ்சென்ற அமிர்தநாயகி தம்பதியரின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்காக இன்று (08.04.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர் சில்லாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புனித சூசையப்பர் வீதி,
சில்லாலை. 077 087 9926,
021 720 0523 (35784)(6.11)

தகவல்:
யூட்ஸ் வசந்தகுமார்
(மகன்).


# இலங்கை அகதிகளை வெளியேற்ற வேண்டாம்

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை

கொழும்பு,ஏப்.8

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் புகலிடம் கோரி தங்கியிருக்கும் இலங்கையர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டாம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது.

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் தங்கியுள்ள 19 இலங்கையர்களை எதிர்வரும் 11ஆம் திகதி திருப்பி அனுப்ப அந்தநாட்டு அரசு தீர்மானித்துள்ளது.

சட்டவிரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்த போது விபத்துக்குள்ளான படகிலிருந்தவர்களே இவ்வாறு திருப்பி அனுப்பப் படவுள்ளனர்.

அவர்களை ஏற்றிச் சென்ற படகு கடந்த ஒக்டோபர் மாதம் 14 ஆம் திகதி விபத்துக்குள்ளானது.

அதனையடுத்து அவர்கள் சிங்கப்பூருக்கு சொந்தமான கப்பலின் மூலம் காப்பாற்றப்பட்டு ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மு.காவின் அடுத்த கூட்டம் 27 இல்

கொழும்பு,ஏப்.8

அரசுடன் தொடர்ந்தும் இணைந்திருப்பதா இல்லையா என்பது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸின் அடுத்த அரசியல் உயர்பீடக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது. இந்தக் கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அறவித்துள்ளது.

எனினும் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டு முன்னதாகவே அரசியல் உயர்பீடத்தை கூட்ட வேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் கோரி இருந்தனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

ஆனால் அவசரமாக முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பீடத்தை கூட்டுவது தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை. எனினும் இது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம் என்று கட்சியின் பொதுச் செயலர் ஹசன் அலி தெரிவித்தார். (ச)

## முஸ்லிம்களுக்கு எதிரான பிரசாரம்; அமெரிக்க அரசின் அறிக்கை விரைவில்

கொழும்பு,ஏப்.8

நாட்டில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில மாதங்களாக முஸ்லிம்களுக்கு எதிராக முஸ்லிம் எதிர்ப்பு இயக்கங்களினால் பிரசாரங்கள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்று அமெரிக்கத் தூதரக ஊடகப் பிரிவின் பொறுப்பாளர் கிரிஸ்டோபர் டீல் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அனுசரணையுடன் முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் புத்தளம் மாவட்ட ஊடகவியலாளர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கு சிலாபத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை முதல் இடம்பெற்றுவருகிறது.

இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அமெரிக்க அரசு உத்தியோகப்பூர்வமான அறிவிப்பை விரைவில் வெளியிடவுள்ளது என்று அவர் மேலும் கூறினார். (ச)

## 2100 இல் கடல் உயரும்; வடபகுதி, கொழும்பு மூழ்கிவிடும் அபாயம்

### சுற்றாடல் அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு,ஏப்.8

கடல் மட்டம் உயர்வதனால் வடக்கு, கொழும்பு மற்றும் காலி போன்ற பிரதேசங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடிய அபாயம் காணப்படுகிறது என்று தெரிவிக்கப் படுகிறது.

வடக்கு, வடக்கை அண்டிய சிறிய தீவுகள், காலி வீதி, ரயில் பாதை போன்றன நீரில் மூழ்கக் கூடிய அபாயம் காணப்படுகிறது.

2100 ஆம் ஆண்டளவில் கடல் மட்டம் உயர்வடையும். இதனால் முக்கிய சில பகுதிகள் நீரில் மூழ்கக் கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று சுற்றாடல் அமைச்சின் தொழில்நுட்ப ஆலோசகர் டபிள்யு.எல்.சுமதிபால தெரிவித்தார்.

**இடரை எதிர்நோக்க தற்போதிருந்தே ஆயத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது**

இந்த இடரை எதிர்நோக்க தற்போதிருந்தே ஆயத்தம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

குறிப்பாகத் தீவுகளில் வாழ்ந்து வரும் மக்களை வேறிடங்களில் மீள்குடியேற்றுவது குறித்த திட்டங்கள் முன்கூட்டியே வகுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப் பட வேண்டியது அவசியமானது என்று அவர் மேலும் வலியுறுத்தினார். (ச)


வீடு விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு, முத்துமாரி அம்மன் வீதியில் 12 பரப்பு காணியில் சகல வசதியுடன் கூடிய வீடு வளவும், நெற் காணியும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: சு. மாதவன்
075 071 9707 (35762)(6.11)



மரண அறிவித்தல்

திருமதி வள்ளியம்மை சுந்தரம்



கரம்பொன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், அம்மன் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை சுந்தரம் 06.04.2013 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நாகமணி-சிவக்கொழுந்து தம் பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற சுந்தரத்தின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, கணபதிப்பிள்ளை (பஞ்சாட்சரம்), நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நாகம்மா மற்றும் தர்மபூபதி, காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம், சிவஞானம் மற்றும் விமலாதேவி, காலஞ்சென்றவர்களான பர மேஸ்வரி, சிவகாமி அம்மை மற்றும் தங்கராசா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், இராசகோபால் (Island Timber Work Shop-Chundikuli), அமிர்தாம்பிகை, சறோஜினிதேவி, விஜயலெட்சுமி, ஸ்ரீஸ்கந்தராசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், அன்னலெட்சமி, தங்கவேலாயுதம், மகாலிங்கம், காலஞ்சென்ற இலட்சுமணன் மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்பு மாமியும், கம்சத்வனி, ஜனார்த்தனன், விஸ்வத்தனன், றிஜி கீர்த்தனன், கஜலக்சன், கௌசல்யா, கேசவன், நிறஞ்சனா, விசித்திரா, அனுஷன், சுதாகரன், காலஞ்சென்ற யசோதினி மற்றும் நிரோஜினி,சசிகரன், பவன்ஜா, நிஷாந்தன், திவாகர், தர்சிகா, மதுஷா, சாருஜா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிந்துஜா, நிரூபன், கிருசாந், குகன்யா, அரிசாந், ஸ்ரீதர், பாரதி, ஜனகன், லாருசன், கௌசி, கம்சிகா, சாருதிகன், ஜீவிகன், சாருன், கஜித், சாளினி ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.04.2013) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

அம்மன் வீதி,
திருநெல்வேலி. (35769)(10.6.7)

தகவல்:
மகன்மார்
க.இராசகோபால்,
க.ஸ்ரீஸ்கந்தராசா.

## புத்தாண்டு வியாபாரம்: திடீர் தேடுதல்கள் நடக்கும்

### இன்று முதல் பொருள்கள் பரிசோதனை

கொழும்பு,ஏப்.8

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலத்தில் அத்தியாவசிய பாவனைப் பொருள்களின் விலைகளை கட்டுப்பாடின்றி தமது விருப்பத்துக்கு அதிகரிக்க இடமளிக்கப்படமாட்டாது என்று அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். நிறைகுறைவாக உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்கள், பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் ஆகியோர் சுற்றிவளைத்துப் பிடிக்கப் படுவர். இதற்கான திடீர் தேடுதல்களை நாடு முழுவதும் நடத்துமாறு பாவனையாளர் அதிகார சபைக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இன்று முதல் நாடு முழுவதும் கடைகளின் பொருள்கள் பரிசோதிக்கப்படும். அதற்கு பாவனையாளர் அதிகார சபையின் அதிகாரிகளும் பொது சுகாதாரப் பரிசோதகர்களும் தயாராகவுள்ளனர் என்று அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் பாவனைக்கு உதவாத அத்தியாவசியப் பொருள்களை விற்பனைக்காக களஞ்சியப்படுத்தி வந்த 2000 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அபராதம் திரட்டவும் பாவனையாளர் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை தமிழ் - சிங்களப் புத்தாண்டு காலத்தில் பொருள்களை வாங்க வரும் பாவனையாளரின் பாதுகாப்புக்காக விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மாறுவேடம் தரித்த பொலிஸார் பிரதான நகர, நெடுந்தூர பஸ்களில் ஈடுபடுத்தப்பட்டு பிரயாணிகளைப் பாதுகாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

நடமாடும் ரோந்து சேவைகளும் நடைமுறைப்படுத்தப்படும். பாதசாரிகளினதும், சாரதிகளினதும் தவறுகள் தொடர்பாக கடும் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

இத்தகையோரைக் கைது செய்யவும் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க சிறிவர்தன தெரிவித்தார். (ச)

# போர் முடிந்தும் தமிழருக்கு நரகத்திலேயே வாழ்க்கை

### பிரபாகரனை விடவும் மோசமான வன்முறைகளில் அரசு ஈடுபடுகின்றது என்கிறார் தம்பர அமில தேரர்

கொழும்பு,ஏப்.8

வடக்கில் மீளக் குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்கள் இன்னும் குடிசைகளிலேயே வாழ்கின்றனர். போர் முடிந்து 4 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவர்கள் நரகத்திலேயே வாழ்கின்றனர். நெடுஞ்சாலைகளைப் புனரமைப்பதன் மூலம் தமிழர்களது வாழ்க்கை மேம்பட்டு விடுமா?

**பிரபாகரன் இருந்த சந்தர்ப்பத்தில் மோசமான சம்பவங்கள் நாட்டில் இடம்பெறவில்லை. தற்போது கோயில்கள், பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறுகின்றன.**



இவ்வாறு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்பர அமிலதேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் அமெரிக்காவும், இந்தியாவும் பயங்கரவாதத்தை ஒழிக்க உதவியுள்ளன. அமெரிக்கா தொழில்நுட்பத்தை வழங்கியது. இந்தியா ரேடார் தொகுதிகளை வழங்கியுள்ளது. அதனால் தான் நாம் போரில் வெற்றி கொண்டோம்.

உலகம் இலங்கைக்குள் இருக்கின்றது என்ற ரீதியில் செயற்படாமல் இலங்கை உலகத்துக்குள் இருக்கின்றது என்ற யதார்த்தத்தைப் புரிந்து செயற்பட வேண்டும்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை விட மோசமான வன்முறைகளில் இந்த அரசு ஈடுபடுகின்றது. பிரபாகரன் இருந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான மோசமான சம்பவங்கள் இடம்பெறவில்லை. தற்போது கோயில்கள், பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்கள் இடம்பெறுகின்றன. பொதுபலசேனா அமைப்பு பூசகர்கள், மத குருமார்கள் மீது தாக்குதல்களை நடத்துகிறது.

அரந்தலாவ பிக்குகள் கொலையுடன் தொடர்புபட்ட சூத்திரதாரிகளும் இன்று அரசில் அங்கம் வகிக்கின்றனர். தாக்குதலை நடத்த ஆயுதம் விநியோகித்த கே.பி.யும் இன்று அரசுடனேயே இருக்கிறார்.-என்றார். (ச)

## சீன நீர்மூழ்கிகள் குறித்து எதுவுமே தெரியாது

### இலங்கைக் கடற்படை தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.8

இலங்கைக்கு அருகே சீனாவின் அணுசக்தி நீர்மூழ்கிகளின் நடமாட்டம் குறித்து எதுவும் அறியவில்லை என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்து சமுத்திரத்தில் சீன நீர்மூழ்கிகளின் ஊடுருவல் அதிகரித்துள்ளது. அண்மைக் காலத்தில் 22 தடவைகள் இத்தகைய ஊடுருவல்கள் கண்டறியப்பட்டுள்ளன என்று இந்தியக் கடற்படை தகவல் வெளியிட்டிருந்தது.

அவற்றில் 13 ஊடுருவல்கள் இலங்கைக்குத் தெற்கே இனம் காணப்பட்டன என்று இந்தியக் கடற்படை வட்டாரங்கள் கூறியிருந்தன.

எனினும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளது போன்று, இலங்கைக்கு அருகே எந்தவொரு சீன நீர்மூழ்கிகளினதும் நடமாட்டம் குறித்து நாம் அறியவில்லை என்று இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீர்மூழ்கிகள் அல்லது எந்தவொரு வெளிநாட்டுக் கப்பலும் இலங்கைக்கு அப்பாலுள்ள அனைத்துலக கடற்பரப்பில் பயணம் மேற்கொள்ள முடியும். அதன் பொருட்டு இலங்கைக் கடற்படையின் அனுமதி பெறத் தேவையில்லை என்று அவர் கூறினார். (ச)

15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
மண்ணில் 29.08.1944
விண்ணில் 08.04.1998
அமரர் முத்தன் இராசரத்தினம்
(வெற்றிலைக்கடை-சங்கானை)



பதினைந்து ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு
அகலாது எம் அன்புத் தெய்வமே.
ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.
நிரந்தர முகவரி: பொன்னாலை மேற்கு, சுழிபுரம்.
தற்காலிக முகவரி: தேவாலய வீதி, சங்கானை.
(35786)(6.11)
குடும்பத்தினர்.

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி
தோற்றம் 14.07.1930
மறைவு 15.04.2007
அமரர் சின்னத்தம்பி கந்தையா
(முன்னாள் ஆசிரியர்)



ஆண்டாறு மறைந்ததையா-- நீர்
எமை விட்டுப் பிரிந்து
நாள் தோறும் தவிக்கின்றோம் உமையிழந்து.
புலவனார் வீதி,
கல்வியங்காடு.
(35785)(6.11)
குடும்பத்தினர்.

0215671111
advt@uthayan.com

மரண அறிவித்தல்

உதயச்சந்திரன் மதுரன்



சுவிஸைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட உதயச்சந்திரன் மதுரன் 05.04.2013 இல் காலமானார்.

அன்னார், கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட உதயசந்திரன், உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும், சுவிஸை வசிப்பிடமாகவும் கொண்ட ரூபசவுந்தினி தம்பதியரின் மூத்த மகனும், பவித்திரா, ஆதீசன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தங்கராசா, சிவலட்சுமி மற்றும் மாணிக்க வாசகர், தவமணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் புதன்கிழமை (10.04.2013) சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்தை வீதி,
உடுப்பிட்டி.
T.P: 021 790 2547.

தகவல்:
த. சிவலட்சுமி (அம்மம்மா).
(35791)(10.6)

# வாழ்க்கை ஓர் வரைபடம்



■ நிவேதிதா மோகன்.

3

பாடசாலைக்குச் சென்ற நிலாவுக்கு பாடத்தில் கவனம் செலுத்த முடியவே இல்லை. அவள் மனதில் பல பேர் இருக்கும் போது இப்படி ஆகிவிட்டதே? என்று அவள் மனம் உறுத்திக் கொண்டே இருந்தது. அதே போல அந்த ஆணுக்கும் நிலாவை இப்படி பொது இடத்தில் கேட்டுவிட்டோமே, என்று அவன் மனமும் உறுத்திக் கொண்டேதான் இருந்தது.

மறுநாள் நிலா பாடசாலை செல்லும் வழியில் அவன் நிலாவிடம் "நான் உங்ககிட்ட கொஞ்சம் பேசலாமா? " என்றான். அதற்கு நிலா "ம் சொல்லுங்க" என்று கூறிவிட்டு, "நீங்கள் சொல்லுவதற்கு முன்னால் நான் ஒன்று சொல்லலாமா?" என்று கேட்டாள். அதற்கு அவன் "சொல்லுங்க" என்றான். உடனே நிலா "நான் நேற்று என்ன நடந்தது என்று தெரியாமல் உங்களுடன் தகராறு செய்து விட்டேன். அதனால் என்னை மன்னித்து விடுங்கள்" என்று கூறினாள்.

உடனே அவன் "ஐயோ! நீங்க ஏன் என்னிடம் மன்னிப்பு கேட்கிறீங்க?, நான்தான் உங்ககிட்ட மன்னிப்பு கேட்கணும் என்று கூறிவிட்டு, நேற்று என்ன நடந்தது என்று விளக்கமாக கூறினான். நண்பனுக்காக நடந்த தகராறு அது. அதற்கு பின் இருவரும் மன்னிப்பு கேட்டுக் கொண்டனர். பின் நிலா "சரி எனக்கு பாடசாலைக்கு நேரமாகிவிட்டது" என்று சொல்லிவிட்டு திரும்பினாள். அப்போது அவன் "உங்க பேர் நிலான்னு தெரியும். என்னோட பெயர் ஆதவ்" என்று கூறிச் சென்றான். பாடசாலைக்குச் செல்லும் வழி முழுக்க நிலாவின் கேள்வி எல்லாமே "இவனுக்கு எப்படி என் பெயர் தெரியும்?" என்றுதான். நிலா பாடசாலை வாசலை அடைந்ததும் நிலாவின் உற்ற நண்பன் டிலக்ஷன், நிலாவிடம் "ஏய் லூசு! ஆதவ் நேற்று உன்பெயர் என்னவென்று கேட்டான். நானும் உடனே சொல்லிவிட்டேன். அவன் உங்ககிட்ட ஏதாவது கேட்டானா?" என்று ஒன்றுமே தெரியாதவன் போல் கேட்டான். அதற்கு நிலா "உன்ன மாதிரி நண்பன் கிடைக்க நான் எந்த ஜென்மத்தில் புண்ணியம் செய்தேனோ?" என்று கோபமும், நக்கலும் சேர்ந்த ஒரு பதில் சொல்லிவிட்டு வகுப்பறைக்குச் சென்றாள்.

மறுநாள் பாடசாலைக்குச் செல்லும் வழியில் நிலா சுற்றும் முற்றும், எங்காவது ஆதவ் நிற்கிறானா! என்று பார்த்துக் கொண்டு போனாள். ஆனால் ஆதவ் அங்கு இல்லை. மனத்திருப்தியோடு வகுப்பில் போய் அமர்ந்தாள். ஆனால் அவளது இருக்கையில் ஒரு ரோஜாப் பூவும், ஒரு கடிதமும் இருந்தது. அதில் "என் தேவதை நிலாவுக்கு! உன்னைப் பார்த்த அந்த நொடியிலேயே, என்னை காணவில்லை. என்னைத் தேடிப் பார்க்கையில் என் இதயம் உன்னிடம்தான் இருக்கிறது உன் வரவுக்காக.... ஆதவ்" என்றிருந்தது. *(தொடரும்)*

# அவதானமும் நிதானமும்

## தற்காப்பு கவசங்கள்

பெண்கள் வாழ்க்கையில் நிதானத்துடனும், அவதானத்துடனும் பயணிக்க வேண்டும். தவறின் மன வேதனைகளும், மன உடைவுகளும் மட்டுமே மிஞ்சும். வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பெண்களுக்கு அவதானமும் நிதானமும் தேவை. குடும்ப வாழ்க்கையில் உள்ள பெண்கள் வாயின் வார்த்தைகள் முதல் சமையல் உள்ளடங்கலாக படுக்கையறை வரை கணவன் தொடங்கி இருவீட்டு உறவுகள் உள்ளடங்கலாக அயலவர் வரை அவதானத்துடனும் நிதானத்துடனும் நடந்து கொள்ள வேண்டும்.

புகுந்த வீடு செல்லும் பெண்கள் பல புதிய உறவுகளையும், புதிய முகங்களையும் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. சில வீடுகளில் குடும்பப் பெண்ணாக வந்தவளை பல கோணங்களிலும் உற்று நோக்கும் நிலையுள்ளது. இங்குதான் பெண் என்பவள் நித்தானத்தையும் அவதானத்தையும் தற்காப்புக் கவசமாக அணிந்து கொள்ள வேண்டும். மாமி மைத்துனியின் வாயின் வார்த்தைகள் அதிகார தொனியாக இல்லாமல் அன்பான வார்த்தைகளாக வரும்படி நடந்துகொள்ள வேண்டும். மீறியும் அதிகாரம் தொனித்தால் அன்பால் நிர்மூலமாக்க வேண்டும்.



சமையலில் வாய்க்கு ருசியான சத்தான உணவுகளை சமைத்து உறவுகளை திருப்திப்படுத்த வேண்டும். தாயின் சமையலை ருசித்த கணவன் மனைவியின் சமையலை ஏளனம் செய்யா மலும் தாயிடமே சாப்பாட்டுக்கு செல்லும் நிலை வராமலும் அவதானமாக இருக்க வேண்டும்.

இன்று வாழ்க்கைச் செலவு குடும்பத்துக்கு போதுமானதாக இல்லை இதனை சமாளித்து ஈடு கொடுத்து வாழ பெண்களே சிக்கனமாக வாழ வேண்டும். ஆடம்பரங்களை விடுத்து தேவைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நேரம் என்பது நல்ல தகப்பனும் கணவனும் கூட. நேரத்தை அவதானமாக கையாளாவிட்டால் நேரம் பெண்களின் வாழ்வை சூறையாடிவிடும். எனவே தினசரி வாழ்க்கையில் இரவு நேரத்தில் ஒரு காலநேர அட்டவணையை மனதுக்குள் தயார் படுத்திக்கொண்டு விடிந்ததும் அதனை அடியொற்றி குடும்ப வேலைகளை செய்து வந்தால் பெண்கள் வாழ்வில் எப்போதும் சந்தோசமும், அமைதியும் திருப்தியும் உண்டாகும்.

நேரத்தை சரிவரப் பயன்படுத்தினால் நாளாந்தம் குடும்பத்துக்கு மகிழ்ச்சியும், வருமானமும் வரக்கூடிய பல காரியங்களைச் செய்யலாம். அத்தோடு புகுந்த வீட்டு உறவுகளுக்கிடையே மன முறிவு ஏற்படாமலும் கணவன் தாய்க்காக மனைவியையோ, மனைவிக்காக தாயையோ கடிந்து கொள்ளாத சுமுக நிலை ஏற்படும். எனவே பெண்கள் மனதில் நிதானத்துடனும் நடைமுறையில் அவதானத்துடனும் செயற்பட வேண்டும்.

# சிறைக் கூ(ட்)டு



பாடும் நிலாவுக்கு இங்கொரு
காடும் நினைக்காத தனிமை
பாவற் கொடியின் பந்தலின் கீழ்
சுவாசக் காற்றுக்காய் படுத்திட்டால்...
பாவற் கசப்புதான் காற்றேடு வருமா என்ன?
சேடம் இழுத்துக் கிடக்கும் மனித வாழ்வின்
கடைசி நிமிடத்தில்...
ஒரு சொட்டு - இரண்டு சொட்டு... மூன்றாவது?
எங்கே நிம்மதியாய் சாகமுடியுமோ...
விலாசமிருந்தால்
எனக் கொருமுறை அனுப்புங்களேன்
அன்றைய பிரிவுபசாரத்திற்காய் - என்
துஞ்சிய உடல் வானத்தைப் பார்த்த படி...
தள்ளிய கடைசி நிமிடத்தில்
மெல்லமாய் துளி நீர் என்னுள் ஊர்ந்தது
சந்தனமப்பிய என் இரு கண்களும்
ஒரு ரூபாய் குற்றியினால் - அன்று மட்டும்
பூசாரியான என் திருநுதலும்
காதிருந்த செவ்வரத்தம் பூவிதழும்
இதற்கு முன்பு கூட என்னைத் தழுவியதேயில்லை
முன்ஜென்ம என் பணிகள்
பூரணமாகாதது - அந்த
கடைசியிலும் கூட ஞாபகமேயில்லை
கல்நெஞ்சப் பாதகர் உலகில்
கடவுளே நீயும் எப்படியோ?
மெல்லப் போன என் ஜீவனை
காற்றுக்கூட இரக்கமின்றி - இக்
கூட்டுக்குள் பூட்டியதும் தகுமோ?
கடவுளே கருணையிருந்தால்
என் ஜீவனை
கூட்டை விட்டு வெளியேற்றிவிடு

அருணா அகிலன்,
வல்லிபுரம்,
பருத்தித்துறை.

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ–9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021 2262789, 021 226 2395

**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' – மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதிபுக் சென்ரர் – மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்ரிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# தொடரும் தலையிடிகள்

இறுதிப்போரில் விடுதலைப்புலிகளை இலங்கை அரசால் தோற்கடிக்க முடிந்தமைக்கு பிரதான காரணிகளுள், கடற்புலிகளின் செயற்பாடுகள் முடக்கப்பட்டமையும் ஒன்று.

புலிகள் இயக்கம் தோற்றுவிக்கப்பட்டு பல ஆண்டுகளுக்கு பின்னரே அவர்கள் தமக்கென தனியான கடற்படை ஒன்றை அமைத்தனர். ஆரம்பத்தில் தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையேயான போக்குவரத்துக்காக கடல் வழியை புலிகள் உள்ளிட்ட இயக்கங்கள் பயன்படுத்தி இருந்தன. பயிற்சிகளுக்கு என போராளிகளை அனுப்புதல், உணவு மருந்து என்பவற்றை தருவித்தல் போன்ற தேவைகளுக்காக போராளி குழுக்களுக்கு இருந்த ஒரே மார்க்கம் கடல் மட்டுமே.

அதன் பின்னர் விடுதலைப்புலிகள் ஆனையிறவு தளத்தை கைப்பற்ற 1991 ஆம் ஆண்டு மேற்கொண்ட ஆகாய கடல் வெளி நடவடிக்கை தோல்வியில் முடிவடைந்திருந்தது. இந்தச் சமரின் பின்னர் கருத்து வெளியிட்ட புலிகளின் தலைவர் "எங்களிடம் தனியான திறமையான கடற்படை பிரிவு இருந்திருந்தால் ஆனையிறவை பிடித்திருக்கலாம்" என்று கூறியிருந்தார். அதன் பின்னர் கடற்புலிகள் அணி தனிப்படையணியாக கட்டமைக்கப்பட்டு, இந்து சமுத்திரத்தில் மூன்றாவது சக்தியாக உருவெடுத்தது. ஒரு கட்டத்தில் இலங்கை கடற்படையை விடவும் வல்லமை கொண்டவர்களாக கடற்புலிகள் எழுச்சி பெற்றிருந்தனர் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. பல்வேறு புதிய நுட்பங்களை கடற்புலிகள் கொண்டிருந்தனர். அண்மையில் சுவீடன் அமைச்சர் ஒருவர் புலிகளின் கரும்புலி படகு கட்டுமான நுட்பத்தைக் கண்டு வியந்திருந்தார்.

ஆனாலும் கடற்புலிகளை வளர விடுவது தமது பிராந்திய ஆதிக்கத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துவிடும் என்று இந்தியா அஞ்சியது. எனவே இலங்கையை விடவும் கடற்புலிகளை அழிப்பதில் இந்தியா அதீத அக்கறை எடுத்தது. கூடவே உலகச் சண்டியன் அமெரிக்காவும் இந்தக் கைங்கரியத்தில் கூட்டுச் சேர்ந்தது. புலிகளின் ஆயுத கப்பல்கள் இலங்கையை அடைய முன்னரே நடுக்கடலில் மூழ்கடிக்கப்பட்டன. அத்துடன் கடற்புலிகளின் நடமாட்டங்கள் குறித்த தகவல்கள் உடனுக்குடன் இலங்கைக்கு அனுப்பப்பட்டது. புதிய தொழில்நுட்ப வசதிகள் கொண்ட ராடார்களை இந்தியா அன்பளிப்பாக இலங்கைக்கு வழங்கியது. இவையெல்லாம் கடற்புலிகளின் முள்ளந்தண்டை உடைத்தன. ஏறக்குறைய இறுதிப்போருக்கு முன்னதாகவே கடற்புலிகளின் செயற்பாடுகளை இந்தியா கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தது. புலிகளின் அழிவோடு "அப்பாடா! இனி எந்த அச்சுறுத்தலும் இல்லை" என்று நிம்மதி பெருமூச்சையும் அது விட்டுக்கொண்டது.

ஆனாலும் இந்தியாவை பிடித்த சனியன் விடுவதாக இல்லை. இப்போது சீனா, புலிகளின் இடத்தில் இந்தியாவுக்கு த்லையிடி கொடுக்கத் தொடங்கியுள்ளது. சீனா புலிகளைப் போல ஒரு போராளிக் குழு அல்ல. மாறாக இந்தியாவை விடவும் இராணுவ ரீதியில் உயர் நிலையில் உள்ள, உலகில் அதிக சனத்தொகை கொண்ட ஒரு வல்லரசு. அத்துடன் இந்தியாவின் நிரந்தர எதிரியும் கூட. இப்போது சீன நீர்மூழ்கிகள் இலங்கையை அண்மித்த கடற்பகுதியில் வகை தொகையாக வந்து போகின்றன. சீன நீர்மூழ்கிகள் வருவதை இலங்கையும் தடை செய்யப்போவதில்லை. ஏனெனில் சீனா இலங்கைக்கு உதவிகளை அள்ளி அள்ளிகொடுக்கிறது. மேலும் ஜெனிவாவில் இந்தியா தனக்கெதிராக செயற்பட்டதால், எதிரிக்கு எதிரி நண்பன் என்ற போக்கில் சீனாவை மேன்மேலும் ஆரத்தழுவத் தொடங்கியுள்ளது இலங்கை.

இத்தகைய பின்புலத்தில் சீன நீர்மூழ்கிகளின் இரகசிய படையெடுப்பு இந்தியாவை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. பேசாமல் கடற்புலிகளை இருக்க விட்டிருந்தால் இந்த நிலை வந்திருக்காதே என்று இப்போது இந்தியா புலம்புவதாகக் காதில் விழுகிறது.

# ஜெனிவாத் தீர்மானத்தை இலங்கை புறக்கணிக்குமா?

## அதிரடிக்கு ஆயத்தமாகிறது அமெரிக்கா

சண்டே ரைம்ஸ்
கட்டுரையிலிருந்து
■ கோகுலன்

கிழக்கு ஆசியா தொடர்பாக அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா முன்னெடுக்கும் ஒரு புதிய கொள்கை நிலைப்பாட்டில் இலங்கையும் ஒரு முக்கிய பங்கு பணி ஆற்ற முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து அரச தரப்பினரால் கடந்த வாரம் பரிகசித்து நிராகரிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியாவால் இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டு அமெரிக்க காங்கிரஸ் இணையத்திலும் அவரால் எழுதப்பட்டிருந்தது. இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமிடையில் பொருளாதார மற்றும் பாதுகாப்பு விடயங்களில் நெருக்கமான உறவுகள் ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

இந்தப் பிராந்தியத்தில் சீன அதிகார செல்வாக்கு அதிகரித்துவருவதை கட்டுப்படுத்தும் ஒரு முயற்சியாக இது பார்க்கப்பட்டது. இருந்தபோதிலும் அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதுவரின் மேற்படி கருத்தானது பெரும் எடுப்பில் பிரசாரத்துக்குள்ளாகியிருந்தபோதிலும் அது இலங்கை அரசின் அதிகாரபூர்வ கொள்கையல்லவென்பதை கடந்தவாரம் சீன ராஜதந்திரிகளுக்கு விளங்கப்படுத்துவதில் இலங்கை வெளியுறவு அதிகாரிகள் பெருமளவில் சிரமம் எடுத்துக்கொண்டார்கள். அதே விதமான விளக்கங்கள் இந்திய அதிகாரிகளுக்கு மட்டுமன்றி இலங்கைக்கு வருகை தந்துள்ள பாகிஸ்தான் வெளியுறவு செயலர் ஜலில் அப்பாஸ் ஜிலானிக்கும் வழங்கப்படுவதற்கு சிரமம் எடுத்துக் கொள்ளப்பட்டது. இருந்த போதிலும் அமெரிக்காவுடன் நெருக்கமான உறவுகளை வலுப்படுத்திக் கொள்வதற்கான முயற்சிகள் கடந்த வாரம் இடம்பெறவே செய்துள்ளன. வெளிப்படையாக அமெரிக்காவுக்கு எதிராக பெரும் எடுப்பில் கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுவந்தபோதிலும் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு அமெரிக்கா முயற்சி எடுத்துக் கொண்டிருந்த காலத்திலிருந்தே உறவுகளை நெருக்கமாக்கிக் கொள்வதற்கான திரைமறைவிலான முயற்சிகள் நடைபெற்றே வந்துள்ளன.

இந்த வகையில் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையானது அமெரிக்காவிலுள்ள தொம்சன் அட்வைசரி குரூப் LLC (TAG) நிறுவனத்துடன் கடந்த மார்ச் 16 ஆம் திகதியிலிருந்து தொடர்புகொண்டு வந்துள்ளது.

இலங்கையின் நீண்டகால அரசியல் மற்றும் பொருளாதார அபிலாசைகளைப் பலப்படுத்திக் கொள்வதற்கு அமெரிக்காவில் சூழ்நிலைகளை உருவாக்கிக் கொள்வதும், இலங்கையின் சமீப கால சாதனைகள் மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து அமெரிக்க கொள்கை வகுப்பாளர்களுக்கு விரிவான விளக்கங்களை வழங்குவதும், அமெரிக்காவிலிருந்து தனியார் துறையினரை பெரும் எடுப்பில் இங்கு முதலீடு செய்யத் தூண்டுவதும் இதன் நோக்கமாகும்.

இந்த ஏற்பாட்டின் காரணமாக இலங்கை வரியிறுப்பாளர்களின பணம் மாதம் ஒன்றுக்கு 66 ஆயிரம் அமெரிக்க டொலர் (ரூ.8,337,000) வழங்கப்படவிருக்கின்றது. 2014 ஆம் ஆண்டு வரை இது நீடிக்கவிருக்கிறது. இன்றுள்ள நிலையில் மத்தியவங்கி அதிகாரிகள் அமெரிக்கா செல்வதானாலும் அதற்கு மேற்படி நிறவனம் தான் பொறுப்பாக இருக்கப்போகிறது. மத்தியவங்கி உறுப்பினர்களின் வருகைக்கான ஏற்பாட்டைக்கூட நிர்வகிக்கமுடியாத அளவுக்கு வாஷிங்டனிலுள்ள எமது தூதரகம் தகுதியற்றதாகிவிட்டதா என்ற கேள்வி எழுகின்றது. எமது தூதுரகங்கள் எல்லாம் இப்போது தகுதியற்ற அரசியல் நியமனங்களால் நிறைந்து கிடக்கின்றன என்று தூதரக அதிகாரி ஒருவர் கருத்துக் கூறினார். பெயர் குறிப்பிட விரும்பாத அவர் மேலும் சொன்னது:

இந்த கவலையளிக்கும்நிலைமையால் நாங்கள் வெளியாரின் உதவியை நாட வேண்டியிருக்கிறது. எமது தூதரகங்களில் மேலதிகமாக அலுவலர்கள் நிரம்பிக் கிடக்கும் நிலையில் அவர்கள் செய்ய வேண்டிய வேலையை வெளியாரைக்கொண்டு செய்வித்து அதே அளவு பணத்தையும் கொடுக்கின்றோம்.

அவர் மேலும் கூறுகையில் ஒரு வெளிநாட்டுத் தூதுவரின் செயலாளராக கிராம சேவகர் ஒருவரின் மனைவி நியமிக்கப்பட்டார். அவருக்கு ஆங்கிலமும் தெரியாது. அவர் பணிபுரியும் நாட்டின் மொழியும் தெரியாது. இதன் விளைவாக அந்தத் தூதுவர் தாமே தமது செயலாளராகவும் செயல்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. ஆனால் அதற்குரிய சம்பளப்பணம் அந்த அரசியல் நியமனதாரிக்கு கிடைக்கிறது. இராணுவ அதிகாரிகள் ராஜதந்திர நியமனங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள். விசுவாசத்துக்கான கௌரவத்துக்கும் ராஜ தந்திரத்துக்கும் வேறுபாடு இருக்கிறது. இது வேறு அது வேறு என்றார்.

முன்னர் வாஷிங்டனிலுள்ள இலங்கைத் தூதரகம் அங்குள்ள பாட்டன் பொக்ஸ் நிறுவனத்துக்கு -இது பொதுத் தொடர் நிறுவனம், பல மாதிரியான வகைகளில் பணம் செலுத்திவந்துள்ளது. இந்த நிறுவனம் வாஷிங்டன் அரசியல் பற்றி அறிந்திருக்கவும் இல்லை. வெள்ளை மாளிகை அல்லது காங்கிரஸ் சபையில் செல்வாக்கு பெற்றதாகவும் இருக்கவில்லை. எனவே அதன் இடத்தில் டாக் குரூப் நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது. இதனால் வாஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகத்துக்காக இரண்டு நிறுவனங்கள் செயலாற்றப் போகின்றன என்பது தெளிவு.

லண்டனிலுள்ள பெல்பொட்டிங்கர் நிறுவனத்துக்கும் இலங்கை சார்பில் பணிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த குழுமத்தின் லண்டன் கிளை அலுவலகம்தான் 2009 ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஐ.நா.பொதுச் சபைக்கான சொற்பொழிவை எழுதி வழங்கியதாக கூறியிருந்தது.

இது பற்றி பிரிட்டனில் வெளியாகும் இண்டிபெண்டன் பத்திரிகை பெல் பொட்டிங்கர் நிறுவனம் தயாரித்திருந்த சொற்பொழிவு இலங்கை வெளியுறவு அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த சொற்பொழிவுக்குப் பதிலாக முதலிடம் கொடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்ததாக அந்த நிறுவனத்தின் அதிகாரிகள் பெயர் குறிப்பிடாமல் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்திருந்ததாக செய்தி வெளியிட்டிருந்தது. அதற்காக பணம் பெற்றுக்கொண்டதாகவும் அவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர்.

அமெரிக்காவுடனும், இந்தியாவுடனும் உறவுகளை மேலும் நெருக்கமாக்கிக் கொள்வது அரசின் இப்போதைய உத்தியாக இருக்கின்றது. கடந்தவாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரை நிகழ்த்தியபோது இது இன்னும் தெளிவாகத் தெரியவரலாயிற்று. ஜனாதிபதியின் செயலணி நல்லிணக்க குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கான தேசிய செயல்திட்டத்தை எவ்வாறு கையாளுகின்றது என்பது பற்றி ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க சுருக்கமாக விளக்கியதுடன் இப்போது முடிவு பெற்றுள்ள திட்டங்கள் மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திட்டங்கள் பற்றிய விவரம் அடங்கிய பட்டியல்களையும் அமைச்சர்களுக்கு வழங்கினார். அவ்வாறு முற்றுப்பெறாமல் இருக்கும் பரிந்துரைகளில் ஒன்று அரசுக்கு எதிராகச் செயல்படும்படி ஆள்களைத் தூண்டுவதைத் தடுப்பதற்கான சட்டங்கள் தீட்டப்பட வேண்டியிருப்பதாகும்.

கடந்தவாரம் இலங்கை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்கு சென்றிருந்தபோது காங்கிரஸ் அரசு (சல்மான் குர்ஷித்) பி.ஜே.பி, (சுஷ்மா சுவராஜ்) மற்றும் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி முதலானோர் பொதுவாக எழுப்பியிருந்த கேள்வி நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை இலங்கை அரசு ஏன் செயல்படுத்தாமல் இருக்கிறது என்பதே.

இந்தியா தனி ஈழம் அமைவதை ஆதரிக்கவில்லை. இலங்கை தொடர்பான தமிழ்நாட்டின் அரசியல் நிலைப்பாட்டையும் புதுடில்லி ஆதரிப்பதாக இல்லை. ஆனால் இலங்கைத் தமிழர்களின் கௌரவத்தை நிலைநாட்டுவதற்கான செயற்பாடுகளை இலங்கை அரசு ஏன் முன்னெடுக்காமல் இருக்கிறது என்ற கேள்வியையே அவர்கள் முன்வைத்திருக்கிறார்கள். 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் அதிகாரப் பகிர்வு மற்றும் எல்.எல்.ஆர்.சி பரிந்துரைகளின் பிரகாரம் நல்லாட்சி உருவாக வேண்டும் என்பதை அவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்தியாவுக்கு ராஜபக்ஷ வழங்கிய உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவை நிறைவேற்றப்படாவிட்டால் ஈழம் கோரிக்கையானது மீண்டும் முளைத்தெழக் கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என்று அவர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி வரும் செப்ரெம்பரில் 24 ஆவது மாநாட்டில் இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மனித உரிமைகள் ஆணையாளர் மனித உரிமை சபைக்கு வாக்கு மூலம் விளக்கம் கொடுக்க வேண்டும். பின்னர் வரும் மார்ச்சில் 25 ஆவது மாநாட்டில் எழுத்து மூலம் அறிக்கை வழங்க வேண்டும்.

அமெரிக்க தீர்மானம் நிறைவேற்றப்படாது போகுமானால் ஐ.நா. மனித உரிமை சபையிலும் அதற்கு வெளியிலும் இலங்கைக்கு எதிராக செயல்படுவதற்கு என்ன செய்யலாம் என்பதை தெரிவு செய்யும் உரிமை தனக்கு இருப்பதாக அமெரிக்கா ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளது. ★

தருவது வித்தியா

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். தைரியமாகச் சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உயரதிகாரி ஆதரிப்பார். நட்பு வட்டம் விரிவடையும். தாழ்வு மனப்பான்மை நீங்கும்.

**இடபம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். எதிர்பாராத பணவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். வியாபாரத்தில் திடீர் இலாபம் உண்டு. உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதர வகையில் நன்மை கிட்டும். பழைய கடன் தீரும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து இலாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**கடகம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டி சூழ்நிலை உருவாகும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும். வியாபாரத்தில் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். உத்தியோகத்தில் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

**சிங்கம்:** குடும்பத்தின் அடிப்படை வசதிகள் அதிகரிக்கும். சகோதரர்களால் பயன் அடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங் கள் பலம், பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**கன்னி:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். சகோதரர் பாசமழை பொழிவார். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்குமாறு நடந்து கொள்வீர்கள்.

**நாளை**

பங்குனி-27 செவ்வாய்க்கிழமை 09.04.2013
திதி: சதுர்த்தசி பி.ப.03.28 வரை
நட்சத்திரம்: உத்திரட்டாதி மு.இ. 08.59 வரை
சுபநேரம்: 10.36- 12.06 வரை
இராகுகாலம்: 03.06- 04.36 வரை

**துலாம்:** உறவினர்கள் பாராட்டுவார்கள். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். கொடுக்கல்-வாங்கலில் சுமுகமாக நிலை காணப்படும். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். உடன்பிறந்தவர்களால் ஆதாயம் உண்டு. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மகரம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. சகோதர வகையில் நன்மை கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**கும்பம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். நெருங்கிய வர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**மீனம்:** குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனத்தை இயக்கும் போது தொலைபேசியில் பேச வேண்டாம். யாருக்காகவும் சாட்சி கையொப்பமிட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களால் பிரச்சினைகள் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரியை அனுசரித்துப் போங்கள்.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5 | 9 | 2 | 3 | |
| 9 | 2 | 5 | | | 6 | | | |
| | 6 | | 4 | | | | | |
| | 4 | 8 | 1 | | 2 | | 6 | |
| 7 | | | 5 | | 8 | | | 3 |
| | 9 | | 3 | | 7 | 1 | 8 | |
| 1 | | | | | 3 | | 9 | |
| | | | 9 | | | 8 | 2 | 4 |
| | 8 | 9 | 6 | 7 | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 9 | 7 | 2 | 4 | 8 | 1 | 3 |
| 3 | 8 | 4 | 5 | 1 | 9 | 2 | 7 | 6 |
| 2 | 1 | 7 | 8 | 3 | 6 | 9 | 4 | 5 |
| 1 | 7 | 8 | 9 | 5 | 3 | 6 | 2 | 4 |
| 4 | 2 | 6 | 1 | 8 | 7 | 3 | 5 | 9 |
| 5 | 9 | 3 | 6 | 4 | 2 | 1 | 8 | 7 |
| 8 | 4 | 2 | 3 | 9 | 5 | 7 | 6 | 1 |
| 7 | 3 | 1 | 4 | 6 | 8 | 5 | 9 | 2 |
| 9 | 6 | 5 | 2 | 7 | 1 | 4 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## சன சமூக நிலைய ஆண்டு விழா

ஆவரங்கால் மேற்கு சர்வோதய சன சமூக நிலையத்தின் 55 ஆவது ஆண்டு விழா புதுவருட தினமான எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெற வுள்ளது. அன்றைய தினம் கோப் பாய் பிரதேச செயலகத்துக் குட்பட்டோருக்கான 10 கி.மீ. மரதன், 50 கி.மீ. ஓட்டம் ஆகிய போட்டிகள் நடைபெற வுள்ளன.(வ)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, புனித யுவானியர் தேவாலயத்திற்கு அருகில் நிலப்பரப்பு 1 குளி 3.95 அளவு கொண்ட காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 163 6394, 075 508 5715
(35696) (45.6.7)

**தவறிவிட்டது**

அல்லைப்பிட்டிக்கும் மண்கும்பானுக்கும் இடையில் இரண்டு கூறைச்சாறிகள் கடந்த (05.04.2013) வெள்ளிக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்) (35738) (6.7)

தொடர்பு:077 9322602, 077 6142645

**After O/L** பரீட்சைப் பெறுபேறுகள் வெற்றியோ தோல்வியோ

யாழ்ப்பாணத்தில் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெற்றிடங்களுடைய தனியார் வைத்தியத்துறையில் ஆய்வுகூடம் முதல் மற்றைய அனைத்து வைத்திய பணிகளிலும் வைத்திய அதிகாரிகளிற்கு உதவியாளராகச் செயற்படும் பதவிகளுக்கான பயிற்சியினை இலங்கை மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்த அரச வைத்தியர்கள் மூலமாக நடத்தி அவர்கள் கையொப்பமிட்ட சான்றிதழையும் வழங்கி பயிற்சி முடிவில் தொழில் வாய்ப்பையும் வழங்குகிறது கே.யு எடியுகேசன் நிறுவனம்.

உங்கள் O/L மற்றும் A/L கல்வித்தரம் வாழ்வின் முன்னேற்றத்திற்கு தடை அல்ல....

**KU EDUCATION**
Creating Employable Graduates

**CMA- மருத்துவ உதவியாளர் பயிற்சி**

பயிற்சி முடிவில் வேலைவாய்ப்பு உறுதி

KU Education 6 months தற்போது மட்டும்.. ~~25,000/=~~ 12,500/=
(35731) (6)

விபரங்களுக்கு - 0773164617/021-3208342
http://edu.kugroup.info

இல 75.கோவில் வீதி(லாவா வைத்தியசாலை மேல்மாடி),யாழ்ப்பாணம்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
20 . 09 . 1990

மறைவு
08. 04. 2009

**அமரர் தவராசா டக்சன்**

திங்கட்கிழமை - 08.04.2013

ஆண்டுகள் நான்கு பறந்தோடினாலும் - உன்
நினைவு எம் உள்ளத்தில் நீங்கா
நீ விட்டுச் சென்ற நினைவுகள்
எங்கள் - மனதினை வாட்டுதடா
இந்நன்னாளில் உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

தம்பகாமம்,
பளை.
(35731) (45.6)

குடும்பத்தினர்.
077 2791 551

## தொழிலாளருக்கான சம்பள உயர்வை தொழிற்சங்கங்கள் ஏற்க வேண்டும்

### பிரபா கணேசன் வேண்டுகோள்

நுவரெலியா,ஏப்.8

தோட்டத் தொழிலாளர்களுக்கான அதிகரிக்கப்பட்ட சம்பள உயர்வு ஓரளவு நியாயமானதாக இருப்பதனால் அதனை ஏனைய தொழிற்சங்கங்களும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தொழிற்சங்கத்தின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளம் கிடைக்கப் பெற வேண்டும் என்ற ஏனைய தொழிற்சங்கங்களின் கோரிக்கைகளை வரவேற்கின்றோம். ஆனால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸை மட்டுமே குறிவைத்து செயற்படும் தொழிற்சங்கங்களின் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது.

2012 ஆம் ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கும் சம்பள உயர்வு வீதத்தை விட அதிகமான வீதத்தை தோட்டத் தொழிலாளர்கள் இந்த முறை பெறுகின்றனர். வெறுமே சம்பள உயர்வு 70 ரூபா என்று சொல்வது பிழையான தகவலாகும்.

வரவுக்கான ஊக்குவிப்பு தொகை 105 ரூபாவிலிருந்து 140 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் சரியாக வேலைக்கு செல்வார்களேயாயின் 15, 000 ரூபாவுக்கு அதிகமான சம்பளத் தொகையைப் பெற்றுக் கொள்ள கூடியதாக இருக்கும். அவர்களது குடியிருப்புகளுக்கு எவ்வித வாடகையும் அறவிடப்படுவதில்லை என்பதைப் பார்க்கும் போது இது அரச ஊழியர் ஒருவரின் சம்பளத்தை விடவும் அதிகமானதாகும்.

தொழிலாளர்கள் சரியாக வேலைக்கு செல்லாததன் காரணமாக தேயிலை பயிர்ச்செய்கை இன்று வீழ்ச்சியடைந்து வருகின்றது. அதற்கு மூல காரணம் தொழிலாளர்கள் சரியாக வேலைக்கு செல்லாததேயாகும். அதனால் தான் வேலைக்கு வருவதற்கான ஊக்குவிப்பு தொகை 140 ரூபாவாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டு ஒப்பந்தத்தை விமர்சிக்கும் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்கள் கட்டாயம் வேலைக்கு செல்ல வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு கூட்டங்களை ஏற்படுத்துவதில்லை. அவர்களது மதுபாவனையை குறைப்பதற்கான எவ்வித செயற்றிட்டங்களையும் முன்வைப்பதில்லை.

கூட்டு ஒப்பந்தத்தில் சம்பளத்தை தவிர்ந்த ஏனைய தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய பல சலுகைகள் மறைக்கப்பட்டிருப்பது வேதனைக்குறிய விடயமாகும். அவர்களது குடியிருப்புகள் திருத்தி அமைக்கப்படவும், வீடு கட்டுவதற்கான நிலங்கள் வழங்கப்படவும் வேண்டும். அவற்றைப்பற்றிய தெளிவு மாற்று தொழிற்சங்கங்களிடமோ, அதன் தலைவர்களிடமோ இல்லை- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

**வீடு விற்பனை/ வாடகை**

நல்லூர் வாக்கு, புதிய செம்மணி வீதியிலுள்ள காணியும் வீடும் விற்கப்படும் அல்லது வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு: 077 4321 110

(35789) (45.6)

# இஸ்லாமியத் தீவிரவாதத்தின் அடையாளம் தாடி, தொப்பியா?

### இவ்வாறு கூறுவோர் முட்டாள்கள் என்கிறார் பஷீர்

மட்டக்களப்பு,ஏப்.8

தாடியும், தொப்பியும், ஹபாயாவும் தான் இஸ்லாமியத் தீவிரவாதத்தின் அடையாளம் என்று சொன்னால் அது அடிமட்ட முட்டாள்தனம் என்பதில் சந்தேகம் இல்லை. இப்படிக் கூறுபவர்கள் முட்டாள்களே.

இவ்வாறு உற்பத்தித்திறன் விருத்தி அமைச்சர் பஷீர் சேகுதாவூத் குறிப்பிட்டார்.

ஏறாவூர் அமீரலி வித்தியாலயத்தில் இடம்பெற்ற ஐயாயிரம் பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இருக்கின்ற அமைதியைச் சீர்குலைப்பதற்காக ஒரு பெரிய சக்தி திட்டமிட்டுச் செயற்படுகின்றது.

அரசின் மீது வேண்டுமென்றே பழி சுமத்தி முஸ்லிம்களின் மனநிலையில் நூறு வீதம் அதன் மீது வெறுப்பை ஏற்படுத்தி முஸ்லிம்களை ஓரங் கட்டிவிட நினைக்கின்றார்கள்.

மஹிந்த ராஜபக்ஷ மாணவர்களின் கல்வியிலே அபிவிருத்தியைக் காண வேண்டும் என்று விரும்புகின்றார்.

சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னராகவே இலங்கையில் இனங்களுக்கிடையில் பிளவுகள் வளர ஆரம்பித்து விட்டன. ஆங்கிலேயரே பிரிவினையைத் தூண்டினார்கள்.



கல்வியிலும் அதனை உட்புகுத்தினார்கள். மதரீதியான பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இப்பொழுது புதிது புதிதாக வெளிநாட்டு உதவிகளுடன் இயக்கங்கள் முளைக்கின்றன.

இவர்கள் தங்களுக்கான எதிரிகளைத் தாங்களே கட்டமைக்கின்றார்கள்.

உலகில் எந்தப்பாகத்திலும் பேரினவாதம் அல்லது பெருந்தேசிய வாதம் எதிரிகள் இல்லாமல் வாழ முடியாது; அரசியல் செய்யவும் முடியாது.

தொடர்ந்து இலங்கையில் வாழ்கின்ற தமிழர்களை இனி சிங்கள மக்களின் எதிரிகளாகக் காட்ட முடியாது.

வெளிநாடுகளிலே புலம் பெயர்ந்து வாழ்கின்ற இலங்கைத் தமிழர்களைத்தான் எதிரிகளாகக் காட்ட முடியும்.

ஆகவேதான் இலங்கையிலே வாழ்கின்ற முஸ்லிம்களை இன்னுமொரு எதிரிகளின் கூட்டமாகக் காட்டுவதற்கு பொதுபலசேனாபோன்ற சிங்கள அமைப்புக்கள் களமிறங்கியிருக்கின்றன.

இவர்கள் கூட்டாகச் சேர்ந்தும் தனித்தனியாகவும் தங்களது செயற்றிட்டத்தை இலங்கையிலே விஸ்தரித்திருக்கின்றார்கள். அடிப்படைவாதம் என்று பொதுபல சேனா கூறுவது அடிப்படையிலே தவறான விடயம்.

இலங்கையிலே இஸ்லாமிய அடிப்படை வாதம் என்ற ஒன்று இருந்து எத்தனை குண்டுகள் வெடித்திருக்கின்றன; எத்தனை பேரை ஆயுதங்களுடன் கைது செய்திருக்கின்றீர்கள் என்று பொது பல சேனாவிடம் நான் கேட்க விரும்புகின்றேன்.-என்றார்.(ச)

**சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னராகவே இலங்கையில் இனங்களுக்கு இடையில் பிளவுகள் வளர ஆரம்பித்து விட்டன. ஆங்கிலேயரே பிரிவினையைத் தூண்டினார்கள்.**

**மரண அறிவித்தல்**

**திருமதி செல்லம்மா வயித்திலிங்கம்**



மூளாயைப் பிறப்பிடமாகவும் சித்தங்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா வயித்திலிங்கம் நேற்று முன்தினம் (06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை வயித்திலிங்கத்தின் (ஓய்வு பெற்ற மத்திய வங்கி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான M.K. சுப்பிரமணியம், தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், சத்தியபாமா, யோகேஸ்வரி, மங்களேஸ்வரி (லண்டன்), சந்திரலேகா (ஜெயந்தி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான அருட்பிரகாசம், மைசூர்நாதன் மற்றும் லோகநாதன் (லண்டன்), இராசகுலசேகரன் ஆகியோரின் அன்பு மாமியும், கிருபாகரன் (லண்டன்), கலைச்செல்வி (லண்டன்), கருணாகரன் (நோர்வே), சிவகரன், தயாழினி, தர்மினி, கணநாதன்(லண்டன்), செந்தூரன்(லண்டன்), தேவகி (லண்டன்), இராசகுமாரன்(லண்டன்), அனுசாதேவி (நோர்வே), அஜிதா, பாலராஜ் (சூரபி), ரவிவர்ணன், நிஷாந்தினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அரவிந் (லண்டன்), மயூரா (லண்டன்), ஆரணி (நோர்வே), ஆதீசன் (நோர்வே), ஆரபி (நோர்வே), அபிரா (லண்டன்), ஆதிபன், அபிசாலினி, அபிசனா, சகானா, பிரசன்னா, மீனாட்சி, கபிஷன் (லண்டன்), சிந்துசா (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2013) திங்கட்கிழமை காலை 8 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[illegible] வீதி, சித்தங்கேணி.
தொ.பே. 021 320 6667. (சி.8254) (45.6)

## லஞ்சம் பெற்ற அதிகாரிகள் கைது

கொழும்பு,ஏப்.8

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் இருவர், லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் நியதிகளுக்கு புறம்பாக வீதி போக்குவரத்துச்சான்றிதழை வழங்குவதற்காக பணம் பெற்றுக்கொள்ள முயற்சித்துள்ளனர்.

1.5 மில்லியன் ரூபாவை லஞ்சமாக பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் அவர்கள் லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர். (ச)




**தவறிவிட்டது**

26/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடைய செல்வநாயகம் பரமேஸ்வரி என்பவரின் தேசிய அடையாள அட்டை (626182780 V) புனித யுவானியார் ஆலயத்துக்கும் HNB வங்கிக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 077 653 6623.

(35787) (45.6)

**கடை வாடகைக்கு**

டிப்போ றோட், கனகபுரம், கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பட்ட 900 சதுர அடி விஸ்தீரணம் உள்ள கடை வாடகைக்கு உண்டு. சுப்பர் மார்க்கெற், Show Room, Hardware Shop மற்றும் அலுவலக பாவனைக்கு நீர், மின்சாரம், வாகனத்தரிப்பிட வசதி உண்டு. உகந்தது. தொடர்பு: 072 9188 595

(28272) (45.6)

## கைவிடப்பட்டிருந்த வயோதிபர் கைதடி முதியோர் இல்லத்தில்

யாழ்ப்பாணம்,ஏப். 8

எவரது உதவியும் இன்றி நோய்வாய்ப்பட்ட நிலையில் கைதடி அரச முதியோர் இல்லத்துக்கு முன்பாகக் கைவிடப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் முதியோர் இல்லத்தில் இணைக்கப்பட்டுத் தங்க வைக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மணிக்குளம் ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த ஜெகநாதன் இராமையா (வயது-93) என்ற வயோதிபர் எவரது உதவியும் இன்றித் தனிமையில் வாழ்ந்து வந்துள்ளார்.

தற்போது நோய்வாய்ப்பட்ட நிலையில் உள்ள அவரை பராமரிப்பதற்கு உறவினர்கள் முன்வராமையினால் அவர் கடந்த வெள்ளிக்கிழமை கைதடி அரச முதியோர் இல்லத்தை நாடிச் சென்றார். இவரின் நலன்கருதி உடனடியாக அவர் இல்லத்தில் இணைக்கப்பட்டார் என்று இல்ல அத்தியட்சகர் ரி.கிருபா கரன் தெரிவித்தார். (த-17)

நாயன்மார்கட்டு குளத்துக்கு அருகில்

## இடிந்து வீழ்ந்திருந்த பாலத்தின் புனரமைப்புப் பணி ஆரம்பம்



கொழும்புத்துறை,ஏப். 8

நாயன்மார்கட்டு குளத்துக்கு அண்மையில் கனகரத்தினம் வீதியில் இடிந்து வீழ்ந்திருந்த பழைமையான பாலத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புனரமைப்புப் பணிகள் காரணமாக குறித்த வீதியூடாக போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அதற்கான மாற்றுப் பாதைகளாக நாயன்மார் வீதி, திருமகள் வீதி என்பன பயன்படுத்தப்படுகின்றன.

இதே வேளை, மேற்படி புனரமைப்புத் தொடர்பாக வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் அறிவுறுத்தல்களும் , இரவு நேர வெளிச்ச சமிக்ஞையும் ஏற்படுத்தப்படவில்லை என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறித்த வீதி அரியாலைப் பிரதேசத்தையும், கல்வியங்காடு முத்திரைச் சந்தைப் பகுதிகளை இணைக்கும் பிரதான பாதை என்பது குறிப்பிடத்தக்கது. (வ-135)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றுங்கள்

யாழ்ப்பாணம்,ஏப். 8

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 9-11 மணிவரை மூத்த விநாயகர் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை ஆசீர்வாதப்பர் வீதி, சுகாதாரக்கல்வி மையத்திலும்,

11 ஆம் திகதி காலை 9-11 மணிவரை நாயன்மார் வீதி, சுகாதாரக் கல்வி மையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை கடுக்காய் வீதி சுகாதாரக் கல்வி மையத்திலும்,

12 ஆம் திகதி காலை 9-11 மணிவரை கச்சேரி நல்லூர் வீதி சுகாதாரக் கல்வி மையத்திலும் முற்பகல் 11.30 -1.30 மணிவரை நாவலர் வீதி நாற்சந்தியிலும்

17 ஆம் திகதி காலை 9-11 மணிவரை செட்டியார் தோட்டத்திலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை விவசாயக் கந்தோர் லேனிலும்,

18 ஆம் திகதி காலை 9-11 மணிவரை ஜமுனா வீதி சுகாதாரக் கல்வி மையத்திலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை சங்கிலியன் மன்றம் பருத்தித்துறை வீதியிலும்,

19 ஆம் திகதி காலை 9-11 மணிவரை நல்லூர் குறுக்குத்தெரு சந்தியிலும், முற்பகல் 11.30-1.30 மணிவரை கைலாயபிள்ளையார் கோயிலடியிலும் விலங்கு விசர் நோய்த்தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் இந்தத் தடுப்பூசியினை நாய்களுக்கு ஏற்றிக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அ.எ.ஞானசோதி தெரிவித்துள்ளார். (ந)

## வீதியோட்டத்தில் வெற்றி பெற்றனர்

கொழும்புத்துறை, ஏப். 8

கொழும்புத்துறை சன சமூக நிலையத்தின் 62 ஆவது ஆண்டு விழாவையும், சித்திரைப் புத்தாண்டையும் முன்னிட்டு 5 மைல் வீதியோட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

15 வயதுக்கு கீழ்

1ஆம் இடம் -த.யசிந்தன், 2ஆம் இடம் -சோ.லக்‌ஷன்,3ஆம் இடம்- றூ.துஷந் தன்.

15 வயதுக்கு மேல்

1ஆம் இடம் -கி.வசீகரன், 2 ஆம் இடம் -த.சயந்தன், 3 ஆம் இடம்- கு.தனுசன். (ந-135)

## சமூகமணி பட்டம் வழங்கி மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 8

வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபையில் 40 வருடங்கள் பணியாற்றி இளைப்பாறிய, வருமானப் பரிசோதகர் சிதம்பரநாதன் சிறிகாந்தனுக்கு சமூகமணி எனும் பட்டமும் உயர் விருதும், வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.

வலி.மேற்கு பிரதேச சபைப் பணியாளர் நலன்புரி சங்கத்தின் தலைவர் நா.அருணகிரிநாதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் அ.புத்திசிகாமணி கலந்துகொண்டார். சபையின் செயலாளர் திருமதி சாரதா உருத்திரசம்பவன் பட்டத்தை வழங்கிக் கௌர வித்தார்.

நினைவுச் சின்னத்தை பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் வழங்கினார். (ந)

# மரண அறிவித்தல்



## மயில்வாகனம் பொன்னுத்துரை

(இளைப்பாறிய நடத்துநர், இ.போ.ச)

மீசாலை வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், 43/20, குலுடா கொட வீதி, கல்கிசையைத் (Mountlavaniya) தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பொன்னுத்துரை கொழும்பில் நேற்று முன்தினம் (06.04.2013) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - இராசம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், சரவணையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், கருணாநிதியின் அன்புக் கணவரும், அருணாசலம் (இளைப்பாறிய பிரதி அதிபர் - யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி) அவர்களின் அன்புச் சகோதரனும், பரணிதரன் (ஜேர்மனி), சிற்சபேசன் (பாங்கொக்), கவிதா (லண்டன்), ரஜனி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மஞ்சுளா (ஜேர்மனி), சிவதர்மிகா (அமெரிக்கா), சசிகுமார் (லண்டன்), ராகவன் (கனடா) ஆகியோ ரின் அன்பு மாமனும், அஸ்வின் (லண்டன்), அஸ்வினா (லண்டன்), அர்ச்சுன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை இல்லத்தில் இடம் பெறும். விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

| | |
|---|---|
| ம. அருணாசலம் | - 077 768 1166, |
| பொ. பரணிதரன் | - 0049 152 145 49617, |
| பொ. சிற்சபேசன் | - 0015 102 743 555, |
| ச. கவிதா | - 0044 208 997 76068, |
| ரா. ரஜனி | - 0016 472 821 408. |

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
ம. அருணாசலம் (சகோதரன்),
மீசாலை வடக்கு,
மீசாலை.

(F.8258) (45.6)

## பண்ணை கடற்கரை வீதியிலுள்ள பாலத்தின் கட்டுமானம் ஆரம்பம்



கொழும்புத்துறை,ஏப். 8

யாழ்.பண்ணைப் பகுதியை நோக்கி பழைய நகர சபைக்குப் பின்புறமாகச் செல்லும் கடற்கரை வீதியில் நீண்டகாலமாகச் சேதமடைந்திருந்த பாலத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குறித்த பாலம் கடந்த காலப் போர் நடவடிக்கைகளால் பெரியளவில் சேதமடைந்திருந்தது. இதனால் அந்த வீதியூடாகப் பயணம் செய்யும் கடற்றொழிலாளர்களும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். குறித்த வீதியில் தற்போது புனரமைக்கப்பட்டு வரும் பாலத்தினூடாக யாழ். நகரில் சேரும் கழிவு நீர், கடலுக்குச் செல்லும் பிரதான கால்வாய் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் குறித்த பாலம் கடந்த சில வருடங்களாக முற்றாக உடைந்து வீழ்ந்ததையடுத்து இந்த வீதியூடாக போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. (வ-135)

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஏப்.8

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 2012 பெறுபேறுகள். அண்மையில் வெளியாகியிருந்தன. அதனடிப்படையில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகள் வருமாறு:-

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

பிரியங்கா கந்தசாமி 9ஏ, கஜானி கிருஸ்ணகுமார் 8ஏ,பி, வராயினி சுப்பிரமணியம் 8ஏ,பி, ரம்ஜயா சுபாஸ்கரன 8ஏ,பி, உதிர்சியா உதயமோகன் 7 ஏ,பி,சி, ஜெயந்தினி சண்முகராஜா 6ஏ,2பி,சி, கஜீந்சனா தியாகராசா 6ஏ,பி,2சி, தர்சினி நகுலேஸ்வரன் 6ஏ, 3சி, செந்தாரகா செல்வராசா 5ஏ, பி,3சி.

**வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**தமிழ்மொழி மூலம்**

1வெண்ணிலா முரளி 9ஏ, சுரேக்கா ரவீந்திரன் 9ஏ, கீர்த்தனா கார்த்திகேசு 9 ஏ, கோகிலா சிவகுமார் 9 ஏ,

**ஆங்கில மொழி மூலம்**

டிலோஜி சந்திரமோகன் 9ஏ

**தமிழ் மொழி மூலம்**

அர்ச்சனா குமாரசாமி 8 ஏ,பி , கஜித்தா வீரசிங்கம் 8 ஏ,பி, ரஜிதா குலநாயகம் 8ஏ,சி, சியாமளா தர்மலிங்கம் 8ஏ, சி, கபில்ஜா இராஜமோகன் 8 ஏ, பி

**ஆங்கில மொழி மூலம்**

ரூபினி கருணாகரன் 8ஏ,பி கிருஷிகா தயாளகாந்தா 7ஏ, 2பி, வாகினி வேல்முருகு 7 ஏ,பி,சி, சர்மிளா பிரபாகரன் 7ஏ,பி,சி, மோகன் அருளாநந்தம் 6ஏ,2பி,சி, கோமகள் தேவராசா 6ஏ,பி,சி, டிலக்சினி சிவஞானம் 6ஏ, பி, 2சி, நீரஜா ஸ்ரீகணேசன் 6ஏ, பி, சி, சர்மிஷா சர்வேஸ்வரன் 6ஏ,3சி, இந்துஜா மகேந்திரன் 6ஏ,3சி. பவித்திரா ஈஸ்வரபாதம் 5ஏ, 4பி,தர்சிகா உதயகுமார் 5ஏ, 2பி, 2சி, சாதனா சிவகுமார் 5ஏ,பி,3சி, துவாரகா கிருஸ்ணமூர்த்தி 4ஏ, 4பி,சி, சாம்பவி பொன்ராசா 4ஏ,2பி,3சி, தர்மினி சிவனேஸ்வரன் 4ஏ,பி,2சி,எஸ், வித்தியா இராமச்சந்திரன் 4ஏ, பி, 2எஸ்.

**பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி**

கே.பானுகோபன்-9ஏ, ஆர்.கீர்த்தனன்-9ஏ, எஸ்.கௌசிகன்-9ஏ, ரி.துஜானன் -9ஏ, ஆர்.கோகிலன்-8ஏபி, எஸ்.பிரதீஸ்-8ஏபி, என்.மனோஜ்-8ஏபி, எம்.சிவதர்சன்-8ஏபி, ரி.நிதாகரன்-8ஏபி, என்.இசைப்பிரியன்-8ஏபி, ஜே.கௌதமன் -8ஏபி, கே.மகிந்தன்-8ஏசி, ஜே.வசீகரன்-8ஏசி, ஆர்.இராமகிருஷ்ணன்-8ஏசி, ஜே.அமுதீசன்-8ஏசி,

**வட்டு. இந்துக் கல்லூரி**

மகேஸ்வரன் விவிதாரணி-9ஏ, இராமகிருஸ்ணன் தமிழினி-8ஏபி, சிவபாலன் சிவஜனனி-6ஏ3பி, தியாகமூர்த்தி இந்துஜா-5ஏ3பிசி, சுரேந்திரன் கிரிசா-4ஏ3பி2சி,ஸ்ரீ அருளானந்தராசா குகதாசன்-4ஏ2பி2சி.

**பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை**

**ஆங்கில மொழி மூலம்**

எலுக்சனா பாஸ்கரன்-9ஏ, அருள்ஜெனனி குமுதரஞ்சன்-9ஏ, லக்சனா ஸ்ரீதரன்-9ஏ,பிரதிகா துரைசிங்கம்-8ஏபி,றோஹினி சக்திவேல் -8ஏசி,சர்மிலா இராஜேந்திரம்- 7ஏ2பி, பொன்னரசி இராஜரட்ணம் -7ஏபிசி, பவுணா சிவஞானச்செல்வன்- 5ஏ4பி,சுதாசினி சிவபாதம் சித்திரவடிவேல்-5ஏ3பிசி

**தமிழ் மொழி மூலம்**

ரம்யா சிவசண்முகம்-9ஏ, மயூரி கோபிநாத்-8ஏபி, கிருசா நித்தியராஜா-8ஏபி, திரிசிகா பிரகலாதனன்-8ஏபி, ஒளிநிலா சங்கர்-8ஏசி, லாவண்யா நகுலானந்தம்-8ஏசி, கனிமொழி திருச்செல்வம்-8ஏசி, கோபிகாவேணுகோபாலவாணிதாசன்-8ஏசி, கஜேந்தினி செல்வராசா-8ஏஎஸ், துவாரகா நாகராசா-7ஏ2பி, ஆதுரி விவேகானந்தராசா-7ஏ2பி, துவர்ரகா திரவியராசா-7ஏ2பி, நிரோசினா கமலநாதன்-7ஏபிசி, தர்சிகா முத்துலிங்கம்-7ஏபிசி, சோபனா வின்சன்டிபோல்-7ஏ2எஸ், பபிதா குணசேகரம் -6ஏ2பிசி, அருண்யா ஜெயபாலன்-6ஏ2பிசி, எழிலினி சபாநாயகம்-6ஏ2பிசி, சிந்துராணி செல்வராஜா-6ஏ2பிஎஸ், மஞ்சுளா துரைரட்ணம்-6ஏபிசிஎஸ், உசாந்தினி ஜெயராசா-6 ஏபிசிஎஸ், ஜலனி ரகுவரன்-6ஏ3சி, மகிழினி புஷ்பாகரன்-6ஏ2சிஎஸ், மயூரிகா பாலேந்திரன்-5ஏ3பிசி, துஷாந்தினி ஜெயகுமார்-5ஏ3பிஎஸ், கஸ்தூரி தில்லையம்பலம்-5ஏ4சி, அகிலா தெய்வேந்திரன்-5ஏபி2சிஎஸ், கீர்த்திகா விக்னேஸ்வரராசா-5ஏபி2சிஎஸ்.

## படை முகாம் முன் சிற்றுண்டிச்சாலை

தென்மராட்சி, ஏப்.7

சாவகச்சேரி கச்சாய் வீதி தம்பு தோட்ட முகாமுக்கு முன்பாகச் சிற்றுண்டிச்சாலை ஒன்றை படையினர் கடந்த வெள்ளிக்கிழமை திறந்துள்ளனர்.

சாவகச்சேரி நகர்ப் பகுதியிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரம் வரையில் சிற்றுண்டிச்சாலை எதுவும் இல்லாத நிலையில் இது திறந்து வைக்கப்பட்டுள்ளது. (ந-9)

## இராச வீதிக்கு ஏன் இந்த அவலம்?

அச்சுவேலி,ஏப். 8

அச்சுவேலியில் இருந்து நல்லூர் வரை செல்லும் இராச வீதி அகலமாக்கப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றது. வீதி திருத்தப் பணி கிரவல் மண் கொட்டப்பட்டு இறுக்கப்படும் போது பெருமளவில் புளுதி வெளிக் கிளம்புவதால் வீதியால் செல்வோர் மற்றும் வீதியோரங்களில் குடியிருப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வீதித் திருத்த வேலையில் தூசி வெளிக்கிளம்பாமல் இருப்பதற்கு உரிய முறையில் நீர் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது வீதி அமைப்பின் விதியாக இருந்த போதிலும் நீர் பயன்படுத்தப்படாமல் வேலை நடைபெறுவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் சுகாதார குறைபாட்டுக்கு உள்ளாக வேண்டி இருப்பதுடன் சுவாசத் தொகுதி நோய்களுக்கு உள்ளாக வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ந-11)

## சமூக வாழ்வுக்கும் பிள்ளையின் முன்னேற்றத்துக்கும் தாயின் பங்களிப்பு பெருமைக்கு உரியதாகும்

### மகளிர் தின நிகழ்வில் அரச அதிபர் உரை

யாழ்ப்பாணம், ஏப். 08

எமது சமூக வாழ்வுக்கும் பிள்ளையின் முன்னேற்றத்துக்கும் தாய் என்பவளது பங்களிப்பு பெருமைக்குரியது. அதைச் சரியான முறையில் கொண்டு சென்றால் பெண்கள் சமுதாயம் முன்னேறும் என்று யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பெண்கள் சமாச மகளிர் தின விழா 2013 கடந்த சனிக்கிழமை நல்லூர் ஸ்தான சி.சி.பாடசாலையில் பெண்கள் சமாசத்தின் தலைவி திருமதி ஈஸ்வரி ஸ்ரீதரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பிரான்சிய அரசியல் புரட்சியுடன் ஆரம்பிக்கப்பட்டதாக மகளிர் போராட்டம் இருந்தாலும் 1911 இல் தான் சர்வதேச மகளிர் தினம் வலுப்பெற்ற ஒன்றாக உருவாக்கப்பட்டது. அரச, அரச சார்பற்ற அமைப்புகளில் பல்வேறுபட்ட தளங்களில் பணியாற்றும் மகளிர் சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாக இருக்கின்றது.

மகளிர் தினத்தில் சம உரிமைகள் வழங்கப்படவில்லை எனக் கூக்குரலிடும் அனைவருமே ஒன்றாக இணைய வேண்டும். அத்துடன் தொடர்ச்சியாக தமது குரல்களை ஒலிப்பதன் மூலம் தமது பலத்தை வெளிப்படுத்துவதுடன் எங்களால் ஆற்ற வேண்டிய கடமைகளை நாங்கள் சரியாகச் செய்கிறோமா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**சம உரிமை அடிப்படையில் பெண்களின் பிரச்சினைகளுக்கு குடும்பநிலை, பொருளாதாரப் பிரச்சினைகள் முக்கிய காரணமாக உள்ளன. வன்முறைகளுக்கான முதன்மைக் காரணமும் அதுவே.**

சம உரிமை அடிப்படையில் பெண்களின் பிரச்சினைகளுக்கு குடும்பநிலை, பொருளாதாரப் பிரச்சினைகள் முக்கிய காரணமாக உள்ளன. வன்முறைகளுக்கான முதன்மைக் காரணமும் அதுவே.

எனவே பொருளாதார ரீதியாக அவர்களை வலுப்படுத்த வேண்டும். பெண்களுக்கான வலுவான கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும். அரசு இதற்கான உதவிகளை வழங்குகின்றது. இந்த அடிப்படையில் பெண்களுக்கென அமைச்சு ஒன்றும் உள்ளது. இவற்றினூடாக பல தரப்பட்ட நலன்களை வழங்குகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள அமைப்புக்கள் ஒன்றிணைந்து உங்களுக்காக குரல் கொடுக்க வேண்டும். எமது பலம்தான் மாற்றங்களை உருவாக்க உதவும் பெண்களின் எதிர்காலத்துக்கு மாறுதல்கள் அவசியம்- என்றார். (எ-7)

## பணிகள் பூர்த்தி; திறக்க வருவாரா 'அவர்'?



இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்தினால் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட லீக்குக்கான பயிற்சிகளை மேற்கொள்ள செதியாக அரியாலையில் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானம் மற்றும் அரங்க அமைப்புப் பணிகள் நிறைவுற்ற நிலையில் திறப்பு விழாவுக்காகக் காத்திருக்கின்றது. திறக்கவுள்ளவர் எப்போது வருவார். (வ-135)

## கடமை நேரத்துக்கு மேல் பணி புரிந்தால் மேலதிக கொடுப்பனவு வழங்க வேண்டும்

### பிரதி தொழில் ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.8

தொழில் நிறுவனங்களில் பணி புரியும் பணியாளர்களுக்கு கடமை நேரத்துக்கு மேலதிகமாக பணியாற்றினால் அவர்களுக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்று வடமாகாண பிரதி தொழில் ஆணையாளர் கே.கணேகேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு தொழில் நிறுவனத்தின் பணியாளர் ஒருவரின் ஆகக் குறைந்த கடமை நேரம் ஒன்பது மணி நேரம் ஆகும்.

அதற்கு மேலதிகமாகக் கடமையாற்றினால் அவருக்கான மேலதிக கொடுப்பனவு தொழில் சட்டத்துக்கு அமைவாக வழங்கப்பட வேண்டும்.

அதனைவிட விடுமுறை நாள்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான கொடுப்பனவு மேலதிகமாகக் கணிக்கப்பட்டுவழங்க வேண்டும். பெரும்பாலும் தொழில் நிலையங்களில் இவ்வாறான கொடுப்பனவுகள் சீராக வழங்கப்படுகின்றன.

ஆனால் சில தொழில் நிறுவனங்களில் இவ்வாறான கொடுப்பனவுகள் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகின்றன. தொழில் சட்ட நடவடிக்கைக்கு முரணான கொடுப்பனவுகளை வழங்குகின்ற நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ந-17)

## யாழ்.முற்றவெளி கே.கே.எஸ்.வீதியில் இரு மருங்கிலும் நடைபாதைகள்



யாழ். முற்றவெளிப்பகுதியில் காங்கேசன்துறை வீதியின் இருமருங்கிலும் நடைபாதைகள் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு வீதி அகலிக்கப்பட்டதையடுத்து பொதுமக்கள் மற்றும் உள்ளூர், வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் வசதி கருதி குறித்த நடைபாதைகள் அமைக்கப்படுகின்றன. (வ-135)

# சிகரெட் இறக்குமதி செய்தோர் செலுத்தினர் 67 கோடி ரூபா

கொழும்பு,ஏப்.8

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு சிகரெட்டுக்களை இறக்குமதி செய்த இருவருக்கு 67 கோடி ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. சுங்கத் திணைக்களம் மேற்கொண்ட தேடுதலின்போதே சட்டவிரோத சிகரெட்டுக்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று கைப்பற்றப்பட்டது.

வரிப் பணம் செலுத்தாது இறக்குமதி செய்யப்பட்ட பத்தரைக் கோடி ரூபா பெறுமதியான சிக ரெட்டுக்கள் இதன்போது கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தக் கொள்கலனை இறக்குமதி செய்த நாத்தாண்டிய மற்றும் கொழும்பைச் சேர்ந்த இருவர் சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கொழும்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது அபராதம் விதிக்கப்பட்டது. இதன்போது அபராதத்தை செலுத்த தவறியமையின் காரணமாக இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச)


## வருடாந்த பெருந்திருவிழா

வடமராட்சி, ஏப்.8

துன்னாலை, வல்வியாணந்தம் ஆயில் நின்நொல்லை பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

ஆலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ந-8)

# கவனிப்பாரற்றுக் கிடக்கும் ஆனைக்கோட்டை ஆலயக் குளம்



நவாலி, ஏப்.8

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள குளம் கடந்த சில வருடங்களாக கவனிப்பாரற்றுக் கிடக்கின்றது.

இந்தக் குளத்துக்குள் பாசி போன்ற ஒருவகை சிறிய தாவரமும், தாமரைக் கொடியும் வளர்ந்து குளத்தை மூடியுள்ளன. குளத்துக் குச் செல்லும் படிக்கட்டை மூடி புல் பூண்டுகள், செடிகள் முளைத்துள்ளதால் பக்தர் கள் ஆலயத்துக்குள் செல்வதற்கு கால், கை கழுவ முடியாமல் செல்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் குளத்தைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்க மாட்டார்களா என அந்தப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ந-100)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் ம. பார்வதிநாதசிவம்



எமது கல்லூரியின் பகுதித் தலைவராகவுள்ள **மகாலிங்கசிவம்** ஆசிரியரின் அன்புத்தந்தை அமரர் பார்வதிநாதசிவத்தின் 31 ஆம் நாளை நினைவு கூர்ந்து, அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**ஆசிரியர் கழகம்,**
**யா/ ஸ்கந்தவரோதயா கல்லூரி,**
**சுன்னாகம்.**

(35793)(6.11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

கடந்த 09.03.2013 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

மண்ணில் 24.07.1924

விண்ணில் 09.03.2013

### அமரர் கந்தையா இளையதம்பி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.04.2013) திங்கட்கிழமை காலை 7 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் சபிண்டீகரண கிரியைகளிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

**மெய்யழகன்** (மகன்)
"நிர்மலஸ்தான்",
வதிரி, கரவெட்டி.

## தென்மராட்சி வலய பாடசாலைகளின் தமிழ்த் தின எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி, ஏப்.8

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடத்தப்பட்ட தமிழ்த் தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டிக ளின் முடிவுகள் வலயத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களினதும் பாடசாலைகளினதும் விவரம் வருமாறு:-

ஆக்கம் பிரிவு - 1

ச.சாருண்ஜா (கைதடி நாவற்குழி அ.த.க.பா.), வ.நிரோஜன் (வரணி வடக்கு அ.த. க.பா.), பா.கோபிகா (மட்டுவில் தெற்கு அ.மி.த.க.)

கட்டுரை வரைதல் பிரிவு - 2

க.கவினா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), ப.சுஜிர்தா (மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி.), யோ.வைஷ்ணவி (உசன் இராமநாதன் ம.வி.)

கட்டுரை வரைதல் பிரிவு - 3

சி.வினுஜா (மீசாலை வீரசிங்கம் ம.வி.), இ.அனற் சுதர்சிகா (மிருசுவில் றோ.க.த.க.பா.), ச.கிறிஸ்துயா (சாவகச்சேரி டிறி பேர்க்).

கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும் பிரிவு - 4

வே.கோகிலன் (வரணி ம.வி.), சி.சோபனா (சாவகச்சேரி இந்து.), க.கீர்த்தனா (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

தமிழியற் கட்டுரை வரைதல் இலக்கியம் நயத்தல் பிரிவு - 5

ப.கஜீவன் (வரணி ம.வி.), வி.திலக்ஷி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), செ.கீர்த்தனா (சாவகச்சேரி மகளிர்).

இலக்கணப் போட்டி பிரிவு - 4

கு.கௌசிகா (சாவகச்சேரி இந்து.), தி.கிருசாந்தி (மீசாலை வீரசிங்கம் ம.க.), சு.துர்க்கா (உசன் இராமநாதன் ம.வி.).

இலக்கணப் போட்டி பிரிவு - 5

த.கஜந்தினி (மீசாலை வீரசிங்கம் ம.க.), ப.சர்வோதினி(கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), சு.சுஜீபன் (வரணி ம.வி.).

திறனாய்வுப் போட்டி பிரிவு - 5

ஞா.சார்த்திகா (வரணி ம.வி.), ர.அனுசாளினி (கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.), து.பிரபாஜினி (உசன் இராமநாதன் ம.வி.).

குறுநாடகம் ஆக்கம் பிரிவு - 4

ஆ.கிருசாந்தினி (உசன் இராமநாதன் ம.வி), வி.வினோஜா (சாவகச்சேரி.டிறிபேர்க் கல்லூரி), வி.நிசாந்தினி (மிருசுவில் அ.த.க.பா.).

குறுநாடகம் ஆக்கம் - 5

அ.கார்த்திகா (வரணி ம.வி.), சு.துஷானா (கைதடி முத்துக்குமாரசாமி ம.வி.), ச.ஆர்த்திகா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.).

கவிதை ஆக்கம் பிரிவு - 4

பா.ஜெனிதா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி.), கு.சிந்தூரியா (சாவகச்சேரி இந் துக் கல்லூரி), கு.வாசுகி (உசன் இராமநாதன் ம.வி.)

கவிதை ஆக்கம் பிரிவு - 5

பி.பிரேமிஷா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), சி.நிறேகா (உசன் இராமநாதன் ம.வி.), எஸ்.லீன் (நாவற்குழி ம.வி.).

சிறுகதை ஆக்கம் பிரிவு - 4

சி.சரண்யா (மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.), த.அபிராமி (நாவற்குழி ம.வி.), க.கஸ்மி (சாவகச்சேரி மகளிர் கல்லூரி).

சிறுகதை ஆக்கம் பிரிவு - 5

ஜெ.சோபனா (நாவற்குழி ம.வி), ஞா.தனிஸ்ரா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), த.அர்ச்சனா (மீசாலை வீரசிங்கம் ம.க.). (ஒ-9)

## மரண அறிவித்தல்

### லீனப்பு எட்வீசம்மா

**(ரத்தினம்மா-செம்பியன்பற்று)**

செம்பியன்பற்றைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட லீனப்பு எட்வீசம்மா நேற்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குருசுப்பிள்ளை-றோசமுத்து தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்ற லீனப்புவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற றெஜீனா மற்றும் ஜெறாட், ஜெயமணி, பீயதாஸ் (கனடா), குணம் (கனடா), ஜெயம் (இத்தாலி), இதயராஜ் (இத்தாலி) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற வேதநாயகம் மற்றும் சீவரட்ணம், ஜேம்ஸ், குணசீலி, வசந்தி, றஞ்சினி, வசந்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் செம்பியன்பற்றில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (08.04.2013) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செம்பியன்பற்று புனித பிலிப்பு நேரியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து செம்பியன் பற்று சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜேர்ஸ் ஜெயமணி (மகன்).
செம்பியன்பற்று வடக்கு,
செம்பியன்பற்று.


(35794)(6.11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் தம்பிப்பிள்ளை சுப்பிரமணியம் (மணியண்ண)

தோற்றம்
06.05.1932

மறைவு
09.03.2013



கடந்த (09.03.2013) அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (08.04.2013) திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

லம்போதரன் ரான்ஸ்போட் சேவை,
நீர்வேலி மேற்கு,
கரந்தன், நீர்வேலி.

**த.ஞானசுந்தரம்**
**(மருமகன்).**

(35785)(6.11)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும் 09-04-2013

தோற்றம்
03*03*1935

மறைவு
10*03*2013



அமரர்
### அழகானந்தசுந்தரி இராஜேந்திரம்

வல்லமையும் சொல்வன்மையும் தந்தவரே!
வலிமையாய் எளிமையாய் தமிழ் தந்தகுருவே!
வித்தகத் தமிழும் வீரத்து சைவமும் கலந்த
வித்துவான் பெற்றெடுத்த வித்தகியே!

கனகமாய் சுந்தரமும், சிவமாய் சுந்தரியும்
கண்மணியாய் அழகாய் சுந்தரியாயம்மை பெற்றெடுக்க
சுந்தர ராஜனாம் இந்திரனைமணமுடித்து
சுந்தரமதியும் சுமதியும் ஸ்ரீ லோகமாய் பெற்றெடுத்தீர்!

எழுஏழு ஆண்டுகள் புன்னகையும் பூவும் பொட்டும்
எட்டெட்டு நாள்களில் அழிந்ததை பொறுக்காமல்
சட்டென்று எமைவிட்டு அப்பாவிடம்
பட்டென்று சிவமாய் ஜோதியில் கலந்தீட்டீர்!

பின் தூங்கி முன்னெழும் பத்தினியும் நீர்!
பாலூட்டி தமிழ் வளர்த்த தாயும் நீர்!
பாசமுடன் மகளாய் மாமியாய் தோழியாய்
நேசத்துடன் அரவணைத்த ஆச்சியும் நீர்!

எப்படி அம்மா முடிந்தது உடன் கட்டை ஏற?
ஞாயிறில் போனவரை தேடி ஒன்பதாவது ஞாயிறில் சென்றீரோ?

பொறுமை காத்து கிரியைசெய்து அவரை வழியனுப்பி
சிவராத்திரி வரை காத்திருந்தீரோ?

வசந்தத்தின் வாசலில் பூக்கள் சொரிந்துங்கள்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!!!

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கான எமது அம்மா சிவபதமடைந்த செய்தி கேட்டு ஓடோடி வந்து, ஆறுதல் கூறியும், தொலைபேசி மூலம் ஆறுதல் அளித்தவர்கள், அஞ்சலி செலுத்தியவர்கள், இறுதிக் கிரியையின் போது பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்தவர்கள், தேவையறிந்து செயற்பட்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், அம்மாவின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்தித்த மதகுருமார்கள், இறுதிக் கிரியைகளிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து கொண்ட அனைத்து நெஞ்சங்களுக்கும் எமது நன்றியை இதயபூர்வ மாக வெளிப்படுத்துகின்றோம்.

நாளை (09-04.2013) செவ்வாய்க்கிழமை மதியம், எமது இல்லத்தில் நடைபெற இருக்கும், அந்தியேட்டிக் கிரியை நிகழ்வுகளில் பங்கு பற்று மாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

"வசந்தம்"
கந்தஉடையார் ஒழுங்கை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

**பிள்ளைகள்:**
**சுமதி, லோகேந்திரா,**
**ஸ்ரீதர், மதிவதனி,**
**சுந்தரவதனி.**

(35323)(10.6)

# புத்தாண்டுக்காக யாழ்ப்பாணத்துக்கு படையெடுக்கும் தெற்கு வியாபாரிகள்

யாழ்ப்பாணம், ஏப்.8

சித்திரைப் புத்தாண்டு வியாபாரத்துக்கெனத் தென் பகுதியில் இருந்து நடைபாதை வியாபாரிகள் யாழ்ப்பாணத்துக்கு மிகப்பெரும் எண்ணிக்கையில் வந்துள்ளனர்.

சித்திரைப் புத்தாண்டுக்கு இன்னும் ஒரு வாரம் இருக்கும் நிலையில் இந்த நடைபாதை வியாபாரிகள் தற்போதே யாழ். நகரை முற்றுகையிட்டு தாம் வியாபாரம் செய்வதற்குரிய இடங்களை முன்கூட்டியே ஒதுக்கவதில் ஆர்வம் காட்டியுள்ளனர்.

குறிப்பாக யாழ். முற்றவெளியில் புல்லுக்குளம், வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள பகுதி மற்றும் முனீஸ்வரன் கோயிலடி பகுதி போன்றவற்றில் நடைபாதை வியாபாரத்துக்கான இடங்கள் ஒதுக்கப்படவுள்ளன.

தற்போது இந்தப் பகுதியில் நடைபாதை வியாபாரிகள் தமது வியாபாரத்துக்கான தற்காலிக கொட்டகைகளை அமைப்பதற்கும் மாநகர சபை அனுமதி வழங்கியுள்ளது.

இந்த முறை யாழ். நகரில் நடைபாதை வியாபரத்துக்கு கூடுதலாக அனுமதி வழங்கப்படமாட்டாது என்றும் முற்றவெளி பகுதியிலேயே நடைபாதை வியாபாரத்துக்கு கூடுதல் அனுமதி வழங்கப்படவுள்ளது என்றும் மாநகர அதிகாரி ஒருவர் கூறினார்.

இதேவேளை, இந்த வாரத்தில் மேலும் பல நடைபாதை வியாபாரிகள் யாழ். நகரை நோக்கி படையெடுப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)



சிறிய நடுத்தர தொழில் முயற்சியில் தகவல் தொழில்நுட்ப பயன்பாடு தொடர்பான கண்காட்சி நேற்று ஞாயிற்றுகிழமை பிள்ளையார் விடுதியில் நடை பெற்றது. யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தால் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் யாழ்.வர்த்தக தொழில்துறை மன்றத் தலைவர் கே.பூரணச்சந்திரன் உரையாற்றுகிறார். பொதுமுகாமையாளர் எஸ்.முரளிதரன், அனர்த்த முகாமைத்தவ பிரதிப் பணிப்பாளர் ச.ரவி, பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ்.வணிகர் கழகத் தலைவர் எஸ்.ஜெயசேகரம் ஆகியோர் அமர்ந்துள்ளனர். (ம-7)

# யாழ்.வைத்தியசாலைக்கு 4 புதிய அம்புலன்ஸ்கள்

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ். போதனா வைத்தியசாலைக்கு உரிய நான்கு புதிய அன்புலன்ஸ் நேற்று முன்தினமிரவு எடுத்துவரப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சால் வடமாகாண அரசினர் வைத்தியசாலைக்கு பத்து புதிய அன்புலன்ஸ்கள் வழங்கப்பட்டன.

இதில் நான்கு அன்புலன்ஸ்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் மிகுதி ஆறும் தேவைப்படும் ஆரசினர் வைத்தியசாலைக்கும் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆறு அன்புலன்ஸ்களும் இன்று வழங்கப்படவுள்ளன.

இந்த ஆறு அன்புலன்ஸ்களும் இன்று இங்கு எடுத்து வரப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# விளாவெளி மயானத்தைப் புனரமைக்க கருத்திட்டம் முன்வைக்கக் கோரிக்கை

## வலி. தென்மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஏப்.8

பிரான்பற்று விளாவெளி மயானத்தைப் புனரமைக்க வலி. தென் மேற்கு பிரதேச சபை கருத் திட்டங்களை முன்வைக்க வேண்டும் என்று வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

**வலிகாமத்தில் சனநெருக்கடி கூடிய விளாவெளி மயானத்தில் மின்னில் இயங்கும் எரிப்பகம் அமைக்க மானிப்பாய் பிரதேச சபை திட்டத்தை முன்வைத்து செயற்படுத்த வேண்டும்.**

மின் மூலம் இயங்கும் பிண எரிப்பகம் வவுனியாவில் உருவாக்கப்பட்டுள்ளது.

அதேபோல வலிகாமத்தில் சனநெருக்கடி கூடிய விளாவெளி மயானத்தில் மின்னில் இயங்கும் பிண எரிப்பகம் அமைக்க மானிப்பாய் பிரதேச சபை திட்டத்தை முன்வைத்து செயற்படுத்த வேண்டும்.

உள்ளூராட்சி உட்கட்டமைப்பு மேம்படுத்தல் திட்டத்தில் வவுனியாவில் மின்சாரம் மூலம் இயங்கும் பிண எரிப்பகம் உருவாக்கப்பட்டு செயலுருப் பெற்றுள்ளது.

இதேபோல் வடக்கு வலிகாமத்தில் விளாவெளி மயானம் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் இயங்கும் மயானம்.

இந்த மயானம் பரந்த பிரதேசத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

எனவே, இந்த மயானத்தில் நவீன மின்னிலான பிண எரிப்பகம் ஒன்று அமைக்கும் பட்சத்தில் சபைக்கு வருமானம் அதிகரிக்கும். அதே வேளை, குறித்த நேரத்தில் கிரியைகளை மேற்கொள்ள முடியும்.

எனவே, சபையினர் திட்டமிடல் அலகு ஊடாக பிண எரிப்பகத்தை அமைப்பதற்கான திட்ட முன்மொழிவை முன்வைத்து பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு சமர்பிக்க முன்வரவேண்டும்.- என்று மேலும் தெரிவித்தார். (ம-41)

# அனலைதீவில் திருத்தப்பட்ட பாலம் மீண்டும் சேதமானது

யாழ்ப்பாணம், ஏப்.8

அனலைதீவில் அண்மையில் திருத்தப்பட்ட பாலம் மீண்டும் சேதமடைந்துள்ளது என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.


அனலைதீவு பிரதான வீதியில் மகா சங்கநாதர் கணபதிப்பிள்ளையார் கோயிலுக்குச் சமீபமாக பிரதான வீதியில் உள்ள இந்தப் பாலமே மீண்டும் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

குறிப்பிட்ட பாலம் கடந்த பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையில் பொதுமக்கள் அடிக்கடி இது தொடர்பாக உரியவர்களுக்குத் தெரியப்படுத்தினர்.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்னர் மழை பெய்து கொண்டிருந்த வேளையில் இந்தப் பால வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

எனினும் அது முழுமையாக நிறைவேறாத நிலையில் மீண்டும் சேதமுற்றிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மதகை அண்டி பெரிய கிடங்கு காணப்படுவதாகவும் சைக்கிள் கூட பயணிக்க முடியாதுள்ளது என்றும் பஸ் சேவை எவ்வாறு இடம்பெற முடியும் எனவும் மக்கள் விசனப்படுகின்றனர். (ம-7)



யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் அமரர் எஸ்.எஸ். நவரெத்தினம் நினைவாக யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்துக்கு மின்சார தையல் இயந்திரம் மற்றும் ஒரு தொகுதி உடுபுடைவை என்பன விநியோகிக்கப்பட்டன. ஜேர்மனியில் தங்கியிருக்கும் அன்னாரின் புதல்வர் ந.சிவானந்தனின் உதவியுடன் இவை வழங்கப்பட்டன. (ம-17)

# உணவகங்களின் பின்புறம் புகைத்தலுக்கு இடங்கள்

## தகவல் கிடைத்தால் சட்ட நடவடிக்கையாம்

வலி வடக்கு, ஏப். 8

பொது இடங்களில் புகைத்தல் நடவடிக்கையில் ஈடுபடுவது பெரிய குற்றமாகும். இந்த வகையில் உணவகங்களின் பின்புறங்களில் இருந்து புகைத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவது குறித்துத் தகவல்கள் வெளியாகிவருகின்றன.

இத்தகையவர்கள் மீதும் குறித்த கடை உரிமையாளர்கள் மீதும் எதிர் காலத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

**உணவகங்களுக்கு வருபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.**

குறிப்பாகக் கடைகளின் பின் புறங்களில் இருந்து புகைத்தல் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களால் குறித்த உணவகங்களுக்கு வருபவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

புகைப்பவர்கள் யாராக இருந்தாலும் தமது சொந்த இடங்களில் புகைத்தல் நடவடிக்கையில் ஈடுபட முடியுமே அன்றி பொது இடங்களில் மறைந்து இருந்தும் புகைக்க முடியாது.

இத்தகைய நடவடிக்கைகள் கண்டு பிடிக்கப்பட்டால் எதிர் காலத்தில் பொலிஸார் மூலம் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-86)

## அடக்குமுறையை நிறுத்துக...



சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை கண்டி நகரில் கையெழுத்து சேகரிப்பில் ஈடுபட்டனர். நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்களில் உள்ள மாணவர் அமைப்புக்கள் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன.

# மாத்தளை மனித புதைகுழி குறித்து விசாரணை நடத்த ஆணைக்குழு

கொழும்பு,ஏப்.8

'மாத்தளை மனித புதை குழி' தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

இந்தப் புதைகுழியிலிருந்து மனித எலும்புக் கூடுகள் 154 மற்றும் மண்டையோடுகள் 81 மீட்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் பல்வேறு மட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது பல்வேறு வகையிலும் துன்புறுத்தப்பட்டு வெட்டிக்கொலை செய்யப்பட்டு முன்னர் புதைக்கப்பட்ட எலும்புக் கூடுகள் குறித்து முழுமையான அறிக்கை தயாரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இந்த எலும்புக் கூடுகளும் மண்டையோடுகளும் 1988-1989 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குரியவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இந்த மனிதப் புதைகுழி தங்களுடைய உறுப்பினர்களுடையதாக இருக்கலாம் என்று ஜே.வி.பி. சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இந்தச் சடலங்கள்1980 ஆம் ஆண்டில் புதைக்கப்பட்டிருக்கலாம் என்று தொல் பொருள் ஆய்வாளர்கள் ஏற்கனவே உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தச் சடலங்கள் சித்திரவதை செய்யப்பட்ட ஜே.வி.பி உறுப்பினர்களின் சடலங்களாக இருக்கக் கூடும் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது,

மாத்தளை வைத்தியசாலையில் புதிய கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கு குழிகளை தோண்டிய சந்தர்ப்பத்தில் இந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

இது தொடர்பல் பக்கச் சார்பற்ற சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜே.வி.பி கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சாதாரண தரத்தில் தேசியமட்டத்தில் சித்தியடைந்த தமிழ் மாணவரின் விவரங்களை வெளியிடுக

கொழும்பு,ஏப்.8

ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்கு தமிழ் மொழிமூலம் தோற்றி தேசியமட்டத்தில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் தவல்களை வெளியிடுமாறு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திடம் இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தால் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு பல நாள்கள் கழிந்துவிட்டபோதிலும், இதுவரை தமிழ்மொழிமூலமான தேசிய மட்டநிலை வெளியிடப்படவில்லை.

எனவே, இந்த நிலைமைகளைக் கருத்தில்கொண்டு மேலும் தாமதியாது தமிழ் மொழி மூல பெறுபேறுகளின் தேசிய மட்ட நிலைகளை துரிதமாக வெளியிட வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**Personal Class**

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கும் English Personal Class உம் Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கும் அடிப்படையில் இருந்து எழுத, வாசிக்க, பேச வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:- **சீனியர் ஒழுங்கை, கொக்குவில்.**
0778361521

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974ஆம் ஆண்டு பிறந்த லண்டன் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. இலக்கினம் துலாம், உதயத்துச் செவ்வாய் கிரகபாவம் 19½ மணமகன் இலங்கையிலுள்ளார்.

தொடர்புக்கு:-0776314178

## மத்திய கிழக்குச் செல்ல தயாராகும் பெண்களுக்கு பாலியல் ரீதியில் திகில்

### முகவர்கள் குறித்து முறைப்பாடுகள்

கொழும்பு, ஏப்.8

மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் பெண்கள் முகவர்களால் தவறாக நடத்தப்படுவதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்கள் இலங்கையை விட்டு மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் முன்னரே இந்தத் திகிலூட்டும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன.

இந்தப் பெண்களுக்குரிய அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்பட்ட பின்னர் கருத்தரிப்பதைத் தடைசெய்யும் ஊசி மருந்துகள் ஏற்றப்படுகின்றன. அத்துடன் ஆபாசமான படங்களைப் பார்க்கு மாறும் இவர்கள் வற்புறுத் தப்படுகின்றனர்.

மேலும் இவர்கள் இங்குள்ள உப - முகவர்களாலும், தவறான பாலியல் நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுகின் றனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகம் தெரிவிக்கையில்;

மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் பெண்களிடம் இருந்து பல்வேறு துன்புறுத்தல் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

இதில் நீண்டகாலமாக வேதனம் வழங்கப்படாமை, உடல் ரீதியான துன்புறுத்தல் சம்பவங்கள் என்பன அடங்கியுள்ளன.

மேலும் கருத்தரிப்பதைத் தடை செய்யும் ஊசி மருந்துகளை ஏற்றுவதற்கும், ஆபாசமான படங்களைப் பார்ப்பதற்கும் மறுக்கும் பெண்கள் முகவர்களால் பயமுறுத்தப்படுவதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(ஒ-க)

## டயரில் துளை ஏற்பட்டால் தானாகவே மூடிவிடும் 'ஜெல்'

### இலங்கைப் பொறியியலாளர் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஏப்.8

ஓடிக்கொண்டிருக்கம் வாகனத்தின் 'டயர்' ஒன்றில் துளை (பெச்) ஏற்படும்போது அந்தத் துளையை தானானவே மூடி மறைத்து சீராக்கி விடும் ஒரு வகை யான "ஜெல்'லை இலங்கையரான விமானப்படையின் பொறியியலாளர் ஒருவர் தயாரித்துள்ளார்.

"ரியூப்" அற்ற டயர்களுக்கே இந்த ''ஜெல்''லைப் பயன்படுத்த முடியும் என்பதோடு சாதாரணமான பஸ் டயர் ஒன்றுக்கு 30 மி.லீற்றர் ஜெல்லை ஒரு முறை உட்செலுத்தி விட்டதன் பின்னர் அந்த டயரின் பாவனைக் காலம் வரையிலும் துளை ஏற்படும் ஒவ்வொரு தடவையிலும் அந்தத் துளைதானாகவே மூடிக்கொள்ளும் எனவும் அதைத் தயாரித்திருக்கும் பொறியியலாளர் ஜே.குலதிலக்க தெரிவித்துள்ளார்.

ஏனைய வாகனங்களின் டயர்களின் அளவுப் பிரமாணங்களுக்கு ஏற்றவாறு இந்த ஜெல்லைப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறுகிறார். (ஒ-22)

## மரண அறிவித்தல்

### திருமதி கிருஷ்ணதேவி கனகரத்தினம்



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வசிப்பிடமாகவும் ஆனைக்கோட்டை, ஆறுகால் மடத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணதேவி கனகரத்தினம் கடந்த (05.04.2013) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரெத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், பத்மநாதன் (பொலிஸ் சார்ஜன்ட்), சிவஞானசுந்தரம் (உரும்பிராய்) மற்றும் கனகேந்திரராசா (கொலண்ட்), தனலட்சுமி, கனகாம்பிகை ஆகியோரின் சகோதரியும் ரகுமார், இராசகுமார், காலஞ்சென்ற விஜயகுமார் மற்றும் கவிதா (பிரான்ஸ்) ஆகியோரின் தாயும் அகிலராணி, இரஞ்சிதமலர், சுகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் சிவதீபன், யதுசன், தனுஷ்கன், சாகித்தியன், சங்கவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2013) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 1.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மயிலு வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

(35797) (23-16,14)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தவமணிதேவி மகாலிங்கம்



யாழ்ப்பாணம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணிதேவி மகாலிங்கம் நேற்று (07.04.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மகாலிங்கத்தின் (உரிமையாளர்- மகாலிங்கம் கூல்பார், இல.11, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பையா - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பு - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சுந்தரம்மாவின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசசேகரம், இராசரத்தினம், சிவஞானம்மா, தங்கரத்தினம்மா மற்றும் அன்னலட்சுமி, சிந்தாமணி ஆகியோரின் மைத்துனியும் செல்வமலர், சுந்தரவல்லி (பூபதி), காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா, தங்கராசா, செந்தில்நாதன், பாலதுரை ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.மகாலிங்கர்
(கணவர்)

இல.25, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

(35800) (23-16,14)

# பாதுகாப்பு அமைச்சு அத்துமீறல் கிழக்கில் இராணுவத் தலையீடு

## ஜனாதிபதி முன்னிலையில் ஹக்கீம் போர்க்கொடி

வடக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு அதிகரித்திருப்பதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டிவரும் தற்போதைய சூழ்நிலையில், கிழக்கு மாகாணத்திலும் சிவில் சமூகத்தில் இராணுவத்தின் தலையீடுகள் அதிகரித்திருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரடியாகவே முறையிட்டுள்ளார்.

ஆளுங்கட்சியிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி நேற்று முன்தினம் மாலை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதில் அமைச்சர்களான டியூ குணசேகர, திஸ்ஸவிதாரண, வாசுதேவ நாணயக்கார, ரவூப் ஹக்கீம், அதாவுல்லா, ரிஷாட் பதியுதீன், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் மேல் மாகாணசபை உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோர் கலந்து கொண்டனர். நாட்டின் தற்போதுள்ள முக்கியமான பிரச்சினைகள் குறித்து இந்தப் பேச்சின் போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

நாட்டின் சில தரப்பினரின் செயற்பாடுகளால் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்கள் ஹர்த்தாலில் ஈடுபடும் ஒரு துர்ப்பாக்கிய நிலைமை இருப்பதாக இங்கு சுட்டிக்காட்டியிருக்கும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, முஸ்லிம் மக்கள் கிழக்கு மாகாணத்தில் ஆத்திரத்துடன் இருப்பதாக தெரிவித்துள்ளார். இதன்போது கிழக்கு மாகாணத்தின் சிவில் செயற்பாடுகளில் இராணுவத்தினரின் தலையீடு இருப்பதை ஏற்கமுடியதென அமைச்சர் ரவூப் ஹக்கீமும் பகிரங்கமாக தெரிவத்திருப்பதுடன் மக்களை ஆத்திர மூட்டும் மிகத்தவறான வேலையை பாதுகாப்பமைச்சு செய்து வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.



கிழக்கில் சாதாரண ஒரு விடயத்துக்கும் பள்ளிவாசல் சபைத் தலைவர்களும், உலமாக்களும் இராணுவ முகாம்களுக்கு அழைத்து விசாரிக்கப்படுவதாகத் தெரிவித்திருக்கும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பொலிஸார் மட்டுமே மக்களின் தொடர்பாடல் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டுமேயொழிய இராணுவம் அல்லவென சுட்டிக்காட்டியிருக்கிறார்.

கிழக்கில் வேறு வேலைகள் இல்லாமல் விவசாயத்தில் ஈடுபடும் வேலைகளிலும் காணிகளை எடுக்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருக்கும் இராணுவம் சிவில் நிர்வாகத்தில் தலையிடுவது முஸ்லிம் மக்களை கடுமையாக ஆத்திரப்படுத்தியுள்ளதாகவும், ஏதாவது ஒரு பிரச்சினையை பேசவேண்டுமானால் பொலிஸார் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் பேசலாமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட இதர முஸ்லிம் அமைச்சர்களும் அமைச்சர் ஹக்கீமின் இந்தக் குற்றச்சாட்டை ஆதரித்துள்ளனர். இந்த குற்றச்சாட்டுக்களை நன்கு செவிமடுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த விடயத்தை பாதுகாப்பு செயலாளரின் கவனத்துக்கு கொண்டுவரவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

## நிதி ஒதுக்கீடு தாமதத்தால் கட்டடப்பணி நிறுத்தம்

வடமராட்சி, ஏப்.8

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகக் கட்டடம் பூர்த்தியடையாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மருதங்கேணி - தாளையடி வீதியில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கான புதிய மாடிக்கட்டடம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் 52.76 மில்லியன் ரூபா செலவில் கட்ட ஒப்பந்தம் செய்யப் பட்டது. இந்தப் பணிகள் கடந்த இரு வருடங்களாக நடைபெற்று வருகின்றன. ஆனால் தற்போது கட்ட டத்தின் கட்டுமானப் பணிகளில் 80 வீதமே பூர்த்திய டைந்துள்ளன. எஞ்சிய 20 வீதமான கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்ய போதுமான நிதி இல்லையெனத் தெரிவிக்கப்பட்டு கட்டடப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கட்டடத்தைப் பூர்த்தி செய்ய மேலதிக நிதியை ஒதுக்கித் தருமாறு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டு, அது ஏற்றுக் கொள்ளப்பட்டும் இன்றுவரை நிதி வழங்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்கு கட்டடம் இன்மையால் பிரதேச செயலகம் மருதங்கேணி சமுர்த்திச் சங்க கட்டடத்தில் தற்காலிகமாக சில வருடங்களாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-8)

## புலமைப்பரிசில் கொடுப்பனவு

வடமராட்சி, ஏப்.8

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களின் பிள்ளைகள் 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்திருப்பின் அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கழகத்தில் 2011,2012 ஆம் ஆண்டில் சந்தா செலுத்தி உறுப்பினர்களாக உள்ளோரின் பிள்ளைகளுக்கே இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளது. (ஐ-8)

## கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக வெடிக்கிறது தொடர் போராட்டம்

### தொழிற்சங்கங்கள் தீர்மானம்

கூட்டு ஒப்பந்தக் காட்டிக் கொடுப்பு சதிக்கு எதிராக, பெருந்தோட்டத்துறைத் தொழிலாளர்களை அணிதிரட்டி தொடர் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு மலையக தொழிற்சங்கக் கூட்டமைப்பு நேற்றுத் தீர்மானித்துள்ளது.

இதன்படி இம்மாதம் 21 ஆம் திகதியை கறுப்பு தினமாகப் பிரகடனப்படுத்தி கொட்டகலையில் தொழிலாளர் எழுச்சிப் பேரணியை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள அதேவேளை, 22 ஆம் திகதி தலைநகர் கொழும்பில் எதிர்ப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இதற்கெனத் தொழிலாளர் இயக்கமொன்று உருவாக்கப்படவுள்ளது.

அத்துடன், கூட்டு ஒப்பந்த விடயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை என்னவென்பதையும் மலையகத் தொழிற்சங்கக் கூட்டமைப்பு அன்றைய தினத்தில் தொழிலாளர்களுக்கு அறிவிக்கவுள்ளது.


2011 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தமானது கடந்த மார்ச் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. எனினும், குறித்த ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கான ஆரம்பக் கட்டப் பேச்சுகள் மார்ச் 11 ஆம் திகதியே ஆரம்பித்துவிட்டன.

இரண்டாம் சுற்றுப் பேச்சுகள் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நடைபெற்றதுடன், அன்றைய தினம் ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. இதன்படி 450 ரூபா அடிப்படைச் சம்பளம் உட்பட தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 620 ரூபா நிர்ணயிக்கப்பட்டது.

எனினும், இந்தச் சம்பள உயர்வை ஏற்றுக்கொள்ளமுடியாது என போர்க்கொடி தூக்கிய கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத தொழிற்சங்கங்கள், அதற்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தீர்மானித்தன.

இதற்கிணங்க, கூட்டு ஒப்பந்த விவகாரம் குறித்து ஆராய்ந்துஅடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக 16 தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று ஹட்டனில்கூடி ஆராய்ந்தனர்.

இந்தக் கூட்டத்தின்போது, தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமானதொரு சம்பள உயர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு முன்னெடுக்கவேண்டிய நடவடிக்கைகள் உட்பட முக்கிய பல விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளன. (ஐ-சி)



புறக்கோட்டை மெலிபன் வீதியிலுள்ள ஏழுமாடிக்கட்டிடம் ஒன்று பின்புறமாக சரிந்து குமார வீதியிலுள்ள கட்டிடமொன்றுடன் சாய்ந்துள்ளது.

## தாய்வான் குழு இலங்கை வருகை

கொழும்பு, ஏப். 8

புடவைத் தொழில் தொடர்பில் ஆராய்வதற்காக தாய்வானின் ஆடைத்துறை நிறுவனத்தின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர். இந்த மாத இறுதியில் அவர்கள் இலங்கை வருவார்கள் என அறியமுடிகின்றது.

இதன்போது தாய்வானின் ஆடை ஏற்றுமதி தொடர்பிலான பிரசார நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்வார்கள். இதற்காக அவர்கள் பல வர்த்தகப் பிரதிநிதிகளையும் சந்திக்கவுள்ளனர்.

## ஒஸ்மானியா கல்லூரி பொன்விழா நடத்த நிர்வாகம் முடிவு

யாழ்ப்பாணம், ஏப்.8

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியின் பொன்விழாவை இந்த வருடத்தில் கொண்டாட முடிவுசெய்யப்பட்டுள்ளதால் கல்லூரியின் வரலாறு தெரிந்தவர்கள் கல்லூரியின் நிர்வாகத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு மற்றும் விவரங்கள் முழுமையாக அறியமுடியாதுள்ளதால், அவற்றை அறிந்து குறிக்கப்பட்ட நாளில் பொன்விழாவை நடத்த ஏற்பாடுகள் செய்யும் நோக்கில் இந்த வேண்டுகோளை விடுப்பதாக பாடசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

நெருக்கடிகளுக்கு மத்தியில் மாணவர்களுக்கு கல்வி போதித்து வரும் இந்தப் பாடசாலையில் முன்னர் பணியாற்றி சேவையை வழங்கிய ஆசிரியர்களுக்கும், பாடசாலை வளர்ச்சிக்காகப் பாடுபட்டோருக்கும் பொன்விழாவின் போது மதிப்பளிக்க வேண்டியிருப்பதால் அவர்கள் தொடர்பான விவரங்களும் கோரப்பட்டுள்ளன. (ஐ)

## மின்சாரக் கட்டண அதிகரிப்பு அறிவிப்புக்கு 3 வாரம் தேவை

கொழும்பு, ஏப்.8

உத்தேச மின்கட்டண அதிகரிப்பு மட்டங்களை வெளியிடுவதற்கு இன்னும் மூன்று வார காலம் வரையில் செல்லக் கூடுமென மக்கள் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தகவல் மார்க்கங்கள் தெரிவிக்கின்றன.

முன்வைக்கப்பட்டுள்ள மின்சாரக்கட்டணங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுவது சம்பந்தமாக பொது மக்களிடம் இருந்து பெறப்பட்டுள்ள எழுத்து மூலம் மற்றும் வாய் மூலமான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் கவனத்தில் கொள்ளப்பட்டு அது சம்பந்தமான இறுதிஅறிக்கை ஒன்றினைத் தயாரிப்பதற்கு ஆணைக் குழுவுக்கு இன்னும் இரண்டு வாரகாலம் வரையில் செல்லக் கூடுமெனவும் அந்த தகவலில் மார்க்கங்கள் தெரிவித்துள்ளன.

இச் செயற்பாட்டை விடவும் மின்சாரக்கட்டண மீளாய்வு ச[illegible]ந்தப்பட்ட அரசின் கொ[illegible]கைகள், தீர்மானங்களையும் ஆணைக் குழு ஆராய்ந்து பார்க்க வேண்டி நேர்வதால் அதற்கமைய இக்கருமங்களை மேற்கொண்டு முடிப்பதற்கு மேலும் மூன்று வாரகாலம் வரையில் செல்லக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. அனேகமாக இம்மாத இறுதியில் புதிய மின்சாரக் கட்டணங்கள் வெளியிடப்படக்கூடுமெனவும் அத்தகவல் மார்க்கங்களில் தெரிவிக்கின்றன. (ஐ-22)

## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இந்திய ஆசிரியர்கள் உண்ணாவிரதம்

டில்லி,ஏப்.8

இலங்கையில் தனிஈழம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும். உள்ளிட்ட கோரிக்கையை முன்வைத்து இந்திய பாளையங்கோட்டையைச் சேர்ந்த ஆசிரியர்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ் நாடு ஆரம்பக் கல்லூரி ஆசிரியர் கூட்டணி, அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு, அனைத்து ஆசிரியர் சங்கம் இந்த உண்ணாவிரதத்தை ஏற்பாடு செய்திருந்தது.

பாளையங்கோட்டை மார்க்கத்திடலில் நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த உண்ணாவிரதம் மாலையுடன் நிறைவடைந்தது.

அனைத்து ஆசிரியர் சங்கச் செயலாளர் கிப்சன், ஆரம்பக் கல்வி ஆசிரியர் சங்கங்கள் பொதுச் செயலாளர், அனைத்து ஆசிரியர் கூட்டமைப்பு உயர்நிலை குழு உறுப்பினர் மாவட்ட செயலாளர் அரிகரன், மாநிலத் தலைவர் கார்த்திகேயர் உட்பட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-400)

## வலிகாமம் வலய ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் இன்று

வலி.வடக்கு, ஏப்.7

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் இன்று முதல் 10ஆம் திகதி புதன்கிழமை வரை காலை 8 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15,17,19 வயதுப் பிரிவுகளில் தலா பன்னிரெண்டு அணிகள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன.

இன்று இடம்பெறவுள்ள போட்டிகளின் விவரம்:-

**15 வயதுப் பிரிவு**

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

இணுவில் இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.

**17 வயதுப் பிரிவு**

★சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் சுன்னாகம் ஸ்கநதவரோதயக் கல்லூரி.

★வியாவிளான் மத்திய மகா வித்தியாலயம் எதிர் வட்டுக் கோட்டை [illegible] கல்லூரி.

★இணுவில் மத்திய கல்லூரி எதிர் அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்.

★சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி எதிர் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

**19 வயதுப் பிரிவு**

★இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம் எதிர் இணுவில் இந்துக் கல்லூரி.

★சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம் எதிா ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.

★சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

★சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி எதிர் வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரி. (ற-86)

## போட்டி அட்டவணை இன்று தயாரிப்பு

வடமராட்சி, ஏப்.8

கரவெட்டி சோளங்கன் விளையாட்டுக் கழகம் விலகல் முறையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

வடமராட்சிப் பிரதேச மட்டத்தில் நடத்தப்படும் இந்தச் சுற்றுப் போட்டிக்கான அட்டவணை தயாரித்தல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் சோளங்கன் மைதானத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-8)

## இன்றைய ஆட்டம்

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், சனசமூக நிலையம் ஆகியவற்றின் 50 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடத்தப்படும் கரப்பந்தாட்டப் போட்டியில் இன்று மோதவுள்ள அணிகள்:-

மாலை 7 மணி: குப்பிளான் விக்னேஸ்வரா 'ஏ' அணி எதிர் சங்கானை ஞான வைரவர் 'ஏ' அணி.

இரவு 8 மணி: தெல்லிப்பழை நண்பர்கள் 'ஏ' அணி எதிர் ஜிஸ்ரார் 'ஏ' அணி.

## மாகாண மட்ட உதைபந்தாட்டம்



# சாதனை வெற்றியைப் பதித்தது கிளிநொச்சி பெண்கள் அணி

வவுனியா,ஏப்.8

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட மாகாண மட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பெண்கள் பிரிவில் கிளிநொச்சி மாவட்ட அணி சம்பியனாகிச் சாதனை படைத்துள்ளது.

வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியும் மன்னார் மாவட்ட அணியும் மோதிக் கொண்டன. பரபரப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 3:0 என்ற கோல் கணக்கில் கிளிநொச்சி மாவட்ட பெண்கள் வெற்றி பெற்று அணி சம்பியனானது.

ஆட்டம் ஆரம்பமானது முதல் இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பிரதேசங்களை நோக்கி தாக்கத் தொடங்கினர். சமபலத்துடன் மோதிக் கொண்ட இரு அணிகளும் கோல் பெறுவதற்குக் கடும் பிரயத்தனத்தை மேற்கொண்ட வண்ணமிருந்தனர்.

இடைவேளைக்காக ஆட்டம் இடை நிறுத்துவதற்கு 6 நிமிடங்களுக்கு முன்னதாக கிளிநொச்சி மாவட்ட அணி வீராங்கனை விதுஷா தனக்கு கிடைத்த பந்தை கோல் பரப்புக்குள் வைத்து கோல் கம்பங்களை நோக்கி உதைத்தார்.

எனினும் மன்னார் மாவட்ட கோல் காப்பாளர் அதைத் தடுத்துவிட்டார். எனினும் கோல் பரப்புக்குள் வைத்து மன்னார் மாவட்ட வீராங்கனை விதிகளை மீறியதன் விளைவாக கிளி நொச்சி மாவட்ட அணிக்கு தண்டனை உதை ஒன்று நடுவரால் வழங்கப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிடாத கிளிநொச்சி மாவட்ட அணி வீராங்கனை கஸ்மியா அதனை கோல் கம்பங்களுக்குள் செலுத்தி தம்து அணிக்கான முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

தொடர்ந்து இரு அணி வீராங்கனைகளும் மேலதிக கோலைப் பெறுவதற்கு கடுமையாகப் போராடினர். ஆனால் இரு அணிகளும் மேலதிக கோல் எதனையும் பெறாத நிலையில் 1:0 என்ற கோல்கணக்கில் இடைவேளைக்காக ஆட்டம் நிறுத்தப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகி இரண்டாவது நிமிடத்தில் கிளிநொச்சி மாவட்ட அணி வீராங்கனை விதுஷா தனக்குக் கிடைத்த பந்தை அருமையான கோலாக மாற்றினார்.

கிளிநொச்சி மாவட்ட அணி 2:0 என்ற நிலையில் முன்னிலை பெற்றதை அடுத்து ஆட்டம் சூடு பிடித்தது. ஆட்டம் நிறைவடையும் நேரம் நெருங்க நெருங்க மேலும் பரபரப்பானது மைதானம். மைதானத்திற்கு வெளியே ரசிகர்களின் ஆதரவுக்கும் குறைவில்லை.

ஆட்டம் நிறைவடைவதற்கு 3 நிமிடங்கள் இருக்கும் போது கிளிநொச்சி மாவட்ட வீராங்கனை விதுஷா மேலும் கோலைப் பெற்று அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

மன்னார் மாவட்ட அணியின் அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிந்தது. இறுதியில் 3:0 என்ற கோல் கணக்கில் மன்னார் மாவட்ட அணியைச் தோற்கடித்து கிளிநொச்சி மாவட்ட அணி வரலாற்றுச் சாதனை படைத்தது.

இந்த ஆட்டத்தில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக கிளிநொச்சி மாவட்ட அணிக்கான இரண்டு கோல்களைப் பெற்றுக்கொடுத்த விதுஷா தெரிவு செய்யப்பட்டார். (ற-400)

## மாவட்ட அணிகளுக்கிடையிலான கபடி

# வவு. ஆண்களும், யாழ். பெண்களும் சம்பியன்

யாழ்ப்பாணம், ஏப்.8


வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் யாழ்.மாவட்ட அணியும்

நேற்று ஞாயிற்றுக் கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதிக்கொண்டது.

இதில் வவுனியா மாவட்ட அணி 48:20 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியனாகியது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது.

அதில் யாழ். மாவட்ட அணி 43:21 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியானது. (ற-23)



## யாழ்.வீராங்கனை தேசியத்தில் முதலிடம்



சுகததாச விளையாட்டரங்கில் இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட 17 வயதுப் பிரிவு பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் தெரிவுப் போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த ஜெ.அனித்தா 2.90 மீற்றர் தூரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவர் இந்தப் போட்டியில் தொடர்ந்து வரும் சுற்றுக்களிலும் வெற்றி பெறுவதன் மூலம் ஆசியாவின் இளைஞர்களுக்கான விளையாட்டுப் போட்டியில் இலங்கை அணியில் இடம் பெற்று சீனா செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-86)

கொழும்புத்துறை, ஏப். 8

அரியாலை 94 ஆவது சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவையொட்டி இடம்பெற்ற வடமாகாண ரீதியிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் விளையாட்டுக் கழக 'ஏ' அணி வெற்றி பெற்று சம்பியனானது.

யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் தெல்லிப்பழை யூனியன் அணிக்கும் இடையில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் 57:37 புள்ளிகள் அடிப்படையில் யூனியன் அணி வெற்றி பெற்றது. (ற-23-135-422)

# சாதித்தது பஞ்சாப்




# வீழ்ந்தது புனே வாரியர்ஸ்

ஐபிஎல் சீசன் 6 கிரிக்கெட் தொடரில் புனேயில் நடைபெற்ற நேற்றைய முதல் ஆட்டத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, புனே வாரியர்ஸ் அணியை 8 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

நாணயச் சுழற்றியில் வென்ற புனே வாரியர்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர் உத்தப்பா- மணீஷ் பாண்டே இணை. அவர்களுக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார் பிரவீண் குமார். பண்டே ஓட்டங்கள் எதுவும் பெறாமல் பிரவீணின் பந்தில் 'போல் டாகி' வெளியேறினார்.

அடுத்து வந்த துடுப்பாட்ட வீரர்களும் பஞ்சாப் அணியின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாது தடுமாறினார்கள். அடுத்தடுத்து இலக்குகள் விழத் தொடங்கின.

சுமன் 6 ஓட்டங்கள், சாமுவேல் 3 ஓட்டங்கள், உத்தப்பா 19 ஓட்டங்கள், மாத்யூஸ் 4 ஓட்டங்கள் என்று ஏமாற்றிச் செல்ல 10 பந்துப் பரிமாற்றங்களில் 38 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து விழி பிதுங்கி நின்றது புனே வாரியர்ஸ்.

6வது இலக்குக்காக இணைந்த நாயர், மார்ஷ் இணை சிறிது நேரம் ஓட்டங்கள் குவிக்க முயற்சித்தது. அவர்களது முயற்சியும் வீணாகிப் போக மார்ஷ் 15 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார்.

அதன்பின் வந்த புவனேஸ்குமார் 8, ராகுல் சர்மா 1 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டு அவசர அவசரமாக பெவிலியன் திரும்பினார்கள். துடுப்பாட்ட வீரர்கள் கைவிரிக்க புனே வாரியர்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்களின் முடிவில் 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. நாயர் 25 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தார்.

பஞ்சாப் அணி சார்பாக பிரவீண் குமார், அசார் முகமட் தலா இரண்டு இலக்குகளையும், ஹாரிஸ், அவ்னா, சாவ்லா தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

100 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கியது பஞ்சாப் அணி. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர் கில் கிறிஸ்ட்டும் மந்தீப் சிங்கும். இருவரும் சிறப்பான ஆரம்பத்தை பஞ்சாப் அணிக்குக் கொடுத்தனர்.

கில்கிறிஸ்ட் 15 ஓட்டங்களுடனும், மந்தீப் சிங் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க 3ஆவது இலக்குக்காக இணைந்தது மனன் வோரா- டேவிக் ஹசி இணை. இவர்கள் இருவரும் பஞ்சாப் அணியை வெற்றிவரை அழைத்துச் சென்றனர்.

12.2 பந்துப்பரிமாற்றங்களில் இரண்டு இலக்குகளை மட்டும் இழந்து பஞ்சாப் அணி வெற்றி இலக்கை அடைந்தது. வோரா 43 ஓட்டங்களுடனும், ஹசி 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

புனே வாரியர்ஸ் சார்பில் மத்தியூஸ், சர்மா ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர். மனன் வோரா ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.


## இறுதிப் போட்டியில் சேரீனா வில்லியம்ஸ்

'டபிள்யு.டி.ஏ. பமிலி சேர்க்கிள்' கிண்ண ரென்னிஸ் தொடரின் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளார் செரினா வில்லியம்ஸ்.

அமெரிக்காவில் தெற்கு கரோலினா மாகாணத்தில் உள்ள சார்ல்ஸ்டன் நகரில் நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் நேற்றுமுன் தினம் வில்லியம்ஸ் சகோதரிகள் மோதினர்.

ஆட்டத்தின் ஆரம்பம் முதலே செரீனா வில்லியம்ஸின் கையே ஓங்கியிருந்தது. இளையவரான செரீனா, வீனஸ் வில்லியம்ஸை 6-1, 6-2 என்ற நேர் செற்களில் எளிதாக தோற்கடித்து இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் ஜெலீனா ஜன் கோவிர்க்கும், ஸ்டெ பானி வோகேலும் மோத வுள்ளனர். அதில் வெற்றி பெறுபவருடன் செரீனா இறுதி ஆட்டத்தில் மோது வார். (ற)





## பிரேஸில் வென்றது

பொலிவியாவில் உள்ள லா பாஷ் நகரில் நடந்த சர்வதேச நட்பு உதைபந்து போட்டியில் பிரேசில் வெற்றிபெற்றுள்ளது.

பிரேஸில் மற்றும் பொலிவியா அணிகளுக்கிடையே நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே பிரேசில் அணி வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர்.

ஆட்டத்தின் முதல் பாதியில் பிரேசில் வீரர் டாமியோ 4ஆவது நிமிடத்தில் முதல் கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய பிரேசில் அணிக்கு நேமர் 31ஆவது நிமிடத்திலும், 43 ஆவது நிமிடத்திலும் இரண்டு கோல்களைப் பெற்றுக் கொடுத்தார். முதற்பாதி ஆட்டத்தில் பொலிவியா அணி வீரர்களால் பதிலடி கொடுக்க முடியவில்லை.

பின் இரண்டாவது பாதியிலும் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய பிரேசில் அணிக்கு ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் பிரேசில் வீரர் லியான்ரோ ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

பொலிவியா அணி வீரர்களின் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. பிரேசில் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

**சீரணி நாகபூசணி அம்பாள் தேவஸ்தான மகோற்சவகால தற்காலிக கடைகள் ஏலம் விடுதல்**

எதிர்வரும் 15.04.2013 திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கும் மகோற்சவகால தற்காலிக கடை அமைப்பதற்கு ஏலம் 10.04.2013 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெற இருப்பதால் கடை உரிமையாளர்கள் முழுப்பணத்தையும் செலுத்தி கடையை பெற்றுக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

சீரணி, சண்டிலிப்பாய். (35802)(16.9) த.பரஞ்சோதி (ஆதீனகர்த்தா)


## மரண அறிவித்தல்

### கந்தையா சுப்பையா



யாழ்ப்பாணம் இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பையா நேற்று (07.04.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்புச் சகோதரனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் கணேசலிங்கம் (உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் வலயம்), யோகேஸ்வரலிங்கம் (ஆசிரியர், யாழ். மானிப்பாய் இந்துக் கல்லூரி), கு.சண்முகாதேவி, பரமேஸ்வரலிங்கம் (கணக்காளர், செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் க.சித்திவிநாயகர் (சட்டத்தரணி Solicitor, London), அவர்களின் சிறிய தந்தையும் க.அமிர்தநாயகி, யோ.சோதீஸ்வரி, ப.ஜோதிலட்சுமி (ஆசிரியர், சுன்னாவில் அ.த.க. பாடசாலை-பூநகரி), கு.ரங்கநாதன் (முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வி அலுவலகம் -தீவகம்), சி.சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் க.மாதங்கி (யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவி), வீணாவாதினி (Trainee Banking Assistant, Indian Bank), க.மதுராந்தகி, ரவிதர்சன், மாதுரி, கஜமுகன், அபிஷஜனி, செந்தூரன் (லண்டன்), பிரணவன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.04.2013) திங்கட் கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மானிப்பாய் வீதி,
இணுவில்.

(சி/8261) (23-16,14) தகவல்: குடும்பத்தினர்.


# சங்கா அணிக்கு இன்னொரு வெற்றி

*பரபரப்பான 'சுப்பர் ஓவரில்' 6 ஓட்டங்களால் பெங்களூரை வீழ்த்தி மற்றொரு வெற்றியைப் பதிவு செய்தது ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணி.*



ஐ.பி.எல். தொடரின் 7 ஆவது போட்டியில் ஹைதராபாத் சன்ரைஸர்ஸ் அணியும் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் நேற்று மோதிக்கொண்டன. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற பெங்களூர் அணி, முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது. அந்த அணி மலைபோல் நம்பியிருந்த ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான கெய்ல் (1), டில்ஷான் (5) இருவரும் கைவிட்டதால் 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களே பெறமுடிந்தது. அந்த அணி சார்பில் விராட் கோஹ்லி 46 ஓட்டங்களையும், ஹென்றி கியூஸ் 44 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் இஷாந் சர்மா 3 இலக்குகளை வீழ்த்தினார்.

131 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி ஆடிய சன்ரைஸர்ஸ்



அணி, தொடர்ச்சியாக இலக்குகளை இழந்தது. இதனால் அந்த அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 130 ஓட்டங்களையே பெறமுடிந்தது. அந்த அணி சார்பில் விஹாரி ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும், ரெட்டி 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

போட்டி சமநிலையில் முடிவுற்றதால், வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக 'சுப்பர் ஓவர்' வழங்கப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைஸர்ஸ் அணி, 6 பந்துகளில் 20 ஓட்டங்களைக் குவித்தது. ஆயினும் பதிலளித்தாடிய பெங்களூர் அணி, 14 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதனால் 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது சங்ககார தலைமையிலான சன்ரைஸர்ஸ் அணி.

ஆட்டநாயகனாக சன்ரைஸர்ஸ் அணியின் விஹாரி தெரிவானார். (நு)


**தேவை**

முள்ளியவளையில் சிமெந்து வேலை செய்வதற்கு ஆண் பணியாளர் இருவர் தேவை. நாளாந்தம் 1100/= சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு : 077 4169026 (26210) (6.7)

யாழ். நகர் மத்தியில் (பஸ் நிலையம் அருகாமையில்)

**பியஸ்ரா தளபாட** பொருள்களை அறிமுகப்படுத் துவதில்

**ஏசியன் தளபாட மாளிகை** பெருமிதம் அடைகிறது.

Piyestra

வீட்டு மற்றும் அலுவலகங்களிற்கான sopa, கட்டில், மெத்தை, அலுவலக மேசை, கணினி மேசை, கதிரைகள், இன்னும் பல பொருள்களும் மாபெரும் மலிவு விற்பனையும், இலவசப் பரிசுப் பொருட்களும்.

| | | | |
|---|---|---|---|
| 15,000-22,500 வரையான கொள்வனவிற்கு அயன்பொக்ஸ், | 22,500-30,000 வரையான கொள்வனவிற்கு சன்விச் மேக்கர், | 30,000-40,000 வரையான கொள்வனவிற்கு சில்வர் கீற்றர் | 40,000-50000 வரையான கொள்வனவிற்கு கிறைண்டர் |

குறிப்பு:- ★15000 குறைந்த 50000க்கு மேற்பட்ட பெறுமதிகளுக்கும் பரிசுப் பொருள்கள் உண்டு.

★ கம்பனியால் நிர்ணயிக்கப்பட்ட விலை.

★பரிசில் பொருட்களுக்கு உத்தரவாதம் உண்டு.

கையிருப்பு உள்ளவரை மட்டுமே

Piyestra - Piyestra - Piyestra - Piyestra - Piyestra - Piyestra

133, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் அருகாமை) யாழ்ப்பாணம். 021 222 7892, 077 831 4201


## மரண அறிவித்தல்

### செல்லையா இராசம்மா



சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும், 11/3, முரசுமோட்டையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செல்லையா இராசம்மா நேற்று முன்தினம் (06.04.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (09.04.2013) செவ்வாய்க் கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நெளுக்குளம் இந்துமயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

2ஆம் கட்டை, மன்னார் வீதி,
நெளுக்குளம், வவுனியா.

(சி/8263)(16.9) தகவல்: குடும்பத்தினர்.


**THE SCIENCE CORNER**
Clock Tower Lane, Jaffna.

**A/L 2015**
புதிய பிரிவு ஆரம்பம் : 09.04.2013
செவ்வாய் காலை 8.00

| PHYSICS | BIOLOGY | CHEMISTRY | C.MATHS |
|---|---|---|---|
| செல்வன் | பொன்திவாகரன் | BENO, அன்பு | சிவகரன் |
| செந்தில் | குகானந்தன் | சிவகுமார் | |

தமிழ், ஆங்கில மொழி மூல தனியான வகுப்புகள்

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**
The Only Official French Language Centre in Jaffna
பிரஞ்சு மொழியை பிரஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af

பிரெஞ்சு மொழியை கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேஒரு நிறுவனம் Alliance Française de Jaffnaமட்டுமே.இச்சர்வதேச நிறுவனத்தில் France மற்றும் Canada முதலியநாடுகளுக்கு செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் கற்றுக்கொள்கிறார்கள்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.

உங்கள் அனுமதிகளுக்கு முந்துங்கள். அழையுங்கள் 021.222.8093
61, Kachcheri-Nallur Road, Jaffna E-mail: alliancejaffna@yahoo.com
(ரக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடிக்கட்டிடம்)

**மணல் மண் வேண்டுமா?**

★கட்டட வேலைக்கும் பூச்சு வேலைக்கும் மிகச் சிறந்த மண் வேண்டுமா?

★இருந்த இடத்திலிருந்தே பெற்றுக் கொள்ள வேண்டுமா?

★உங்கள் இடத்துக்கே கொண்டு வருகிறோம்.

4½ டிரக்டர் 20,500/-

தொடர்பு:- **ராம்** (23-34166)
072 63 78 546

**முக்கிய அறிவித்தல்**
**V.S.P நல்லெண்ணெய்**

அன்பான V.S.P நல்லெண்ணெய் விற்பனையாளர்களுக்கும், பாவனையாளர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவெனில் V.S.P என்று போலியான லேபிள்களை பயன்படுத்தி நல்லெண்ணெயாக வெளிவருகின்றன. எனவே நீங்கள் எமது தயாரிப்பான V.S.P ஐ இலகுவாக இனங்கண்டு கொள்ள **பரிமளா ஸ்ரோர்ஸ்** 26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடனும் உரிமையாளர் பொ.பாஸ்கரன் என்பவரின் பெயரும் அச்சிடப்பட்டுள்ளது. ஆதலால் அன்பான விற்பனையாளர்களும், பாவனையாளர்களும் இதனை நன்கு கவனித்து கொள்வனவு செய்து கொள்ளவும் என்பதனை அன்புடன் அறியத்தருகின்றோம்.

பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

உரிமையாளர்:
பொ.பாஸ்கரன்
0212229165
0212224135


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.